
# நான்கண்ட வெளிநாட்டுக் காட்சிகள்

சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பி.ஏ.



வெள்ளையன் பதிப்புக் கழகம்

நான் கண்ட

# வெளிநாட்டுக் காட்சிகள்


ஆசிரியர் :

சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பி. ஏ.,



வெளியிடுவோர் :

வெள்ளையன் பதிப்புக் கழகம்

கண்டனூர் : : இராமநாதபுரம் ஜில்லா



பதிப்புரிமை ]


[ விலை ரூ. 1

முதற்பதிப்பு—நவம்பர் 1949
இரண்டாம் பதிப்பு—ஜூன் 1950

Apporved by the Text Book Commitee Madras for class use as a non-detailed text For Forms IV and V Vide Gazette dated 23—5—1950 Page 117.

Madras Ripon Press, Ramachandrapuram.

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | லண்டன் | ... | 1 |
| 2. | நடுவழிநாடு | ... | 13 |
| 3. | வட அயர்லாந்தில் சில நாட்கள் | ... | 26 |
| 4. | குயின் எலிசபத் | ... | 35 |
| 5. | ஓர் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் ஒருவாரம் | ... | 49 |
| 6. | ஹோனலூலூ நினைவுகள் | ... | 68 |
| 7. | விளையாட்டுக்கள் | ... | 78 |
| 8. | உயிர்க்காட்சிகளும் பொருட்காட்சிகளும் | ... | 90 |
| 9. | பலநாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள் | ... | 103 |

# முன்னுரை

“தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே”

சென்ற ஆண்டில் பல ஐரோப்பிய நாடுகட்கும், அமெரிக்காவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இப்பிரயாண நினைவுகள் சிலவற்றைப் பத்திரிகைகளிலும் நூல்களிலும் எழுதினேன். அவற்றுள் ‘சக்தி’, ‘ஹநுமான்’, ‘பாரிஜாதம்’, ‘கலைக்கதிர்’ என்னும் பத்திரிகைகளில் முறையே லண்டன், வட அயர்லாந்தில் சில நாட்கள், ஓர் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் ஒரு வாரம், ஹொனலூலூ நினைவுகள் என்னும் கட்டுரைகள் வெளியாயின. தமிழ் இலக்கிய மாலை, தமிழ் இலக்கியத் திரட்டு என்னும் நூல்களில் முறையே குயின் எலிசபத், நடுவழிநாடு என்னும் கட்டுரைகள் சேர்க்கப்பெற்றன. இவைகளில் சிலவற்றிற்குப் புதுப்பெயர் கொடுத்திருப்பதோடு, எல்லாக் கட்டுரைகளிலும் பல திருத்தங்களும் செய்துள்ளேன். மேற்குறிப்பிட்ட ஆறு கட்டுரைகளோடு, இதுவரை வெளிவராத மூன்று கட்டுரைகளையும் சேர்த்து இந்நூலாக வெள்ளையன் பதிப்புக் கழகத்தார் வெளியிடுகின்றனர். அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

விஞ்ஞான முன்னேற்றத்தால் உலகின் எப்பகுதிக்கும் சில மணி நேரங்களில் சென்றுவிடக் கூடிய இந்நாளில்

ஏனைய நாடுகளைப்பற்றி அறிந்துகொள்ளுதல் மாணவருக்கும் மற்றையோருக்கும் இன்றியமையாதது என்பதும், இத் தகைய பிரயாண நூல்கள் தமிழில் மிகச் சிலவே உள்ளன என்பதும் தமிழ்மக்கள் நன்கு அறிவர். தமிழுலகம் இந் நூலைப் பெரிதும் ஆதரித்து, இத்துறையில் என்னை மேன் மேலும் ஊக்குமென்று நம்புகிறேன்.

இந்நூல் உருவாகும் வகையில் பேருதவிசெய்த அன்பர் களுக்கு நன்றி செலுத்துங் கடப்பாடுடையேன்.

"எந்தைசோம சுந்தரனார்க்(கு) யான்உரிமை ஆக்கியஇச்
செந்தமிழ்நூல் வாழ்க சிறந்து."

இங்ஙனம்,

இராமச்சந்திரபுரம்
2—6—50

சோம. லெ. இலக்குமணச் செட்டியார்

நான் கண்ட

# வெளிநாட்டுக் காட்சிகள்

## 1. லண்டன்

நான் பம்பாயிலிருந்து நேரே லண்டனுக்குப் பறந்தேன். அதற்குமுன் நான் இந்தியாவுக்கு வெளியே, கடாரத்துக்கும்* இலங்கைக்குமே சென்றிருந்தேன்; ஆதலால், லண்டனில் நான் பார்த்தவையெல்லாம் எனக்குப் புதுமையாயிருந்தன. அவை என் உள்ளத்தைக் கவர்ந்தன. இப்போது, பல ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் சுற்றுப்பிரயாணம் செய்த பின்னர், லண்டன் என்றவுடன், பிக்காடில்லி சர்க்கஸ், ஹைட் பார்க், பிரிட்டிஷ் மக்கள், பாதாள ரயில்வே, லண்டன் போலீஸ்—இவைகளே என் நினைவுக்கு வருகின்றன.

### இதுதான் பிரிட்டன்


தமிழ்நாட்டுக்கு நிகரான நிலப்பரப்பு ஒரு தீவு, சென்னை மாகாணத்தின் மக்கள் தொகை, பாராளு மன்றம், சிறந்த நீதி மன்றங்கள், உலகத்துப் பேரறிஞர் பலருக்குக் கல்வி கற்பிக்கும் பல்கலைக் கழகங்கள், இரும்பு, எஃகு, கப்பல் கட்டும் தளங்கள், மாட்சிமை தங்கிய மன்னர்பிரான், மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், 'பஞ்ச்' பத்திரிகை—இவை தாம் பிரிட்டன்.

---

*கடாரம் – பர்மா.

## உலகத்து முச்சந்தி

இத்தகைய பிரிட்டனின் தலைநகரான லண்டன் தான்




பிக்காடில்லி சர்க்கஸ்

உலகிலேயே பெரிய நகரம் என்பர் பிரிட்டிஷார். நியூ யார்க்கும் ஒரு கோடி மக்களுடைய நகரமாதலால்,

அதுவே உலகிற் பெருநகரம் என்பர் அமெரிக்கர். நியூயார்க் ஒரு தீவு என்பதையும், லண்டன் 60 மைல் தொலைவு வரை பரவியிருப்பதையும் நோக்கும் போது, அமெரிக்கர் சொல்லுவதே பொருத்த மானது. பெரிது எதுவாயினும் ஆகுக ; லண்டன் தான் உலகத்து முச்சந்தி ; நடுநாயகமான இடம் (Hub of the Universe).

### பிக்காடில்லி சர்க்கஸ்

லண்டனில் முச்சந்தி பிக்காடில்லி சர்க்கஸ். வழிப்போக்கருக்கெல்லாம் நல்வாழ்த்துக்கூறும்—கிரேக்கர்களின் காதற் கடவுளாகிய ஈராசின் சிலை—தான் பிக்காடில்லி சர்க்கஸ் என்பது. இதைச் சுற்றியுள்ள பகுதி பிக்காடில்லி எனப்படும். இங்கே பல தியேட்டர்களும், லண்டனின் கலைப்பகுதியும், கண்ணுக்கினிய வானளாவும் கட்டிடங்களும், வீராசாமி ஹோட்டலும், ரீஜண்ட் தெருவும், பாண்ட் தெருவும், செல்வம் பொழியும் பிற சாலைகளும் இருக்கின்றன. இவ்விரு தெருக்களிலுந்தான், பாரினிற் சிறந்த தையற்காரர் உளர். இங்கேயே தம் உடைகளைப்பெற வேண்டுமென்று உலகின் நாகரிகமான ஆடவர் அனைவரும் விரும்புவர்.

### ஹைட் பார்க்

பிக்காடில்லி சர்க்கஸிலிருந்து சிறிது தூரத்திலுள்ள ஹைட்பார்க்கைப் பற்றிக் கேள்விப்படாதார் இரார். 600 ஏக்கர் பரப்புள்ள இந்தப் பூங்காவே பிரிட்டனிலுள்ள பேச்சுரிமைக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது. இங்கே ஒரே நேரத்தில் நடைபெறும் கூட்டங்கள் எத்தனை என்பதைக் கணக்கிடுவதைக் காட்டிலும் காக்கைகளை

எண்ணிவிடுதல் எளிது. எவரும் ஒரு மேடையை மட்டும் அமைத்துக்கொண்டு, அதன்மீது ஏறிநின்று தம் கொள்கையைத் தடையின்றி எடுத்துரைக்கலாம். அரசியல்கூட்டங்கள், தொழிலாளர் கிளர்ச்சி, மதப் பிரசாரம் எல்லாவற்றுக்கும் ஹைட்பார்க் ஒரு பொது இடமாகும். இங்கே பேசுபவர்கள் மன்னர் தவிர யாரையும் பழிப்பர். கடவுளும் இவர்களின் சொல்லம்புகளினின்றும் தப்புவது இயலாது! தக்கவர்கள் இந்த அரங்கத்தில் பேசுவதில்லை. 'ஹைட்பார்க் பிரசங்கி' என்பது ஓர் இழிவான பெயராகும். ஹைட்பார்க் பெரிய சாலைகட்கு நடுவே, நல்ல சுற்றுப்புறங்களுக்குள் அமைந்துள்ளது. இப்பூங்காவுக்குள்ளேயே படகோட்டவும், பிற வழிகளிற் பொழுதுபோக்கவும் வசதிகள் உள்ளன. இப்பூங்காவின் பசும்புல்லின்மேல், பல நூறுபேர் படுத்துப் புரளுவர்.

## நாட்டின் பெருமை

ஒரு நாடானது தான் செய்யும் பொருள்களாலாவது, இயற்கை அழகாலாவது, அதன் தலைவர்களாலாவது, தன் மக்களின் குணங்களாலாவது புகழ் பெறலாம். பிரிட்டனின் புகழுக்குக் காரணமானவர் பிரிட்டிஷ் மக்களேயாவர்.

பொதுவாகப் பெரிய நகரத்து மக்கள் நாட்டு மக்களின் சரியான பிரதிநிதிகளாக இருப்பதில்லை. பம்பாய் அல்லது டில்லியில் வாழ்பவரை வைத்து, இந்தியரைப்பற்றி முடிவுகூறுவது பொருந்தாது, நியூயார்க்கில் வாழ்பவருக்கும், அமெரிக்காவின் பகுதிகளிலுள்ளவர்கட்கும் ஒற்றுமையே இல்லையெனத்

துணிவுடன் கூறலாம். ஆனால், இவ்விதிக்கு லண்டன் விலக்கானது. லண்டன்தான் பிரிட்டன்; லண்டனில் இருப்பவரே பிரிட்டிஷ் மக்களாவர்.

அமெரிக்கா தவிர ஏனையநாட்டு வானொலிகட்கெல்லாம், பி. பி. சி. (British Broadcasting Corporation) என்னும் பிரிட்டிஷ் வானொலிதான் அளவுகோலாக உள்ளது. உலகத்துப் பல்கலைக் கழகங்கட்கெல்லாம் ஆக்ஸ்போர்டுதான் மேற்கோள். பாரினிலுள்ள பாராளுமன்றங்கட்கெல்லாம் பிரிட்டிஷ் பாராளுமன்றந்தான் வழிகாட்டி. பலநாட்டு நீதி மன்றங்கள் யாவுக்கும் பிரிட்டிஷ் பிரிவி கவுன்சில்தான் முன்னோடி. உலகத்துப் பத்திரிகைகட்கெல்லாம் தலைமை தாங்குவன லண்டன் 'ப்ளீட் ஸ்ட்ரீட்' பத்திரிகைகளே. உலகத்தின் காலஅளவும் 'கிரீன்விச்' கடிகார நேரத்தை ஒட்டியே உள்ளது.

இவற்றால், பிரிட்டிஷார் தம்நாடு, தம் மொழி இவற்றைப்பற்றி மிகப் பெருமைப்படுவார்கள். பிற மொழி கற்பதில் பிரிட்டிஷார் சோம்பேறிகள். அதற்கு அவர்கள் சமாதானமாக, "எல்லோருந் தான் எங்கள் மொழியைக் கற்றுக்கொண்டு விடுகிறீர்களே, நாங்கள் ஏன் உங்கள் மொழியைக் கற்க வேண்டும்?" என்று கூறுவர். பல்கலைக் கழகத்தாரின் கட்டாயத்துக்காக வேற்றுமொழிகளைக் கற்ற பிரிட்டிஷாரும் அவற்றைத் தேர்வு முடிந்தபின் மறந்துவிடுவர்.

## பங்கீட்டு முறை

பிரிட்டனில் உணவு, உடை, பெட்ரோல், சர்க்கரை இவை மட்டுமின்றிப் பால், தேயிலை, பிஸ்கோத்து,

சாக்லட், முட்டை, சோப்பு, சிகரட்டு, செருப்பு, மின்சாரம், வெளிநாட்டுப் பிரயாணம் இவைகளும் பங்கீடு செய்யப்பட்டுள்ளன. எனினும், பிரிட்டிஷார் தமது நாட்டுப்பற்றால், இப்பங்கீடுகள் செவ்வனே நடைபெற அரசியலாருக்கு உதவி புரிகின்றனர். அவற்றின் குறைகளைப்பற்றி அவர்கள் முணு முணுப்பதில்லை.

பிரிட்டிஷ் பங்கீட்டுமுறையின் ஒரு சிறப்பை யும் ஈண்டுக் குறிப்பிடலாம். உண்பது நாழி, உடுப்பவை இரண்டே (புறநானூறு 189) என்ற பண்டைத் தமிழ்க் கருத்து மிக்க குளிரான நாடாகிய பிரிட்டனுக்குப் பொருந்தாது. எனவே, குறைத்து உண்ண விரும்பு வோர் மிகுதியாக உடுக்கவும், குறைத்து உடுப்போர் மிகுதியாக உண்ணவும் பங்கீட்டு முறை இடம் தருகின்றது. உதாரணமாக, ஒவ்வொருவருக்கும் 7 உணவுப் பங்கீட்டுச் சீட்டும், 10 துணிப் பங்கீட்டுச் சீட்டும் இருந்தால், ஒருவர் தமது துணிப் பங்கீட்டுச் சீட்டில் இரண்டுக்குப் பதிலாக, பிஸ்கோத்துச் சீட்டு ஒன்றும் தேயிலைச் சீட்டு ஒன்றும் வாங்கிக் கொள்ளலாம்.

## பிரிட்டிஷாரின் குணங்கள்

பிரிட்டிஷார் மிகமிகப் பொறுமை யுள்ள வர்கள். பொறுத்தார் பூமியாள்வார் என்பது இவர் களைப் பொறுத்த வரையில் உண்மையாகிவிட்டது. ஈகை, இரக்கம் முதலிய குணங்களும் பிரிட்டி ஷாரிடம் உண்டு. மேற்போக்காக நோக்குங்கால், இவர்கள் கவனக் குறைவானவர்கள்போல் தோன்றுவர். ஆயினும், தாம் ஈடுபடும் எவ்வேலை யையும் ஊன்றிக் கவனித்துச் செய்வன திருந்

தச் செய்யும் ஆற்றல் இவர்கட்கு உண்டு. ஒருநீதிபதி நியாயமாகத் தீர்ப்புக் கூறினால் மட்டும் போதியதாகாது; அவர் நியாயமாகவே தீர்ப்புக் கூறியிருப்பதாகக் குற்றவாளியும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று காலஞ்சென்ற எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். இதைப் பிரிட்டிஷார் தம் வாழ்க்கையில் நாள்தோறும் பின்பற்றுவதைக் கண்டேன். மேலும், "குற்றஞ் செய்தவன் தண்டனையடையாமல் தப்பினாலும் தப்பலாம். குற்றமற்றவன் எக்காலத்தும் தண்டனைக்கு உள்ளாகி விடக்கூடாது," என்ற கொள்கையில் அவர்கள் உறுதியுடையவர்கள்.

ஏதாவதொரு உதவிக்கு நாம் பிரிட்டிஷாரிடம் சென்றால், அதைச்செய்ய இயலவில்லை யென்பதை அவர்கள் பொறுமையாகவும் இனிமையாகவுங் கூறுவர். இறுதியில் நாம் நம் காரியம் கைகூடவில்லை என்பதையும் மறந்து, 'பாவம், நமக்கு உதவி செய்யத் தயாராயிருக்கிறார். அதற்குத் தக்க சூழ்நிலை இல்லையே!' என்று அந்தப் பிரிட்டிஷார் மீதே நாம் இரக்கங் காட்டுவோம். இந்தத் தந்திரமான பேச்சால்தான் தங்க வைரச் சுரங்கங்கள் தென்னாப்பிரிக்காவிலும், அவற்றை வாங்குவோர் அமெரிக்காவிலும், வைரத்தை அறுத்து மெருகு கொடுப்போர் பெல்ஜியத்திலும் இருந்தும், தங்கத்தின் விலையும் வைரத்தின் விலையும் இன்னும் லண்டனிலேயே முடிவு செய்யப்படுகின்றன. பெட்ரோல் மத்திய கிழக்கு நாடுகளிலும் பர்மாவிலும் இருக்கலாம்; அதன் தலைவிதி லண்டனில்தான் தீர்மானிக்கப்படுகிறது. தேயிலை இந்தியாவிலும் இலங்கையிலும் உற்பத்தியாகிறது;

எனினும், தேயிலைச் சந்தைக்கு இருப்பிடம் லண்டனேயாகும். ரப்பர் இந்தியாவிலும் இலங்கையிலும் மலேயாவிலும் கிடைக்கின்றது; ஆயினும், இப் பொருளின் விலை லண்டனில்தான் வரையறுக்கப் படுகிறது. நம்நாட்டுச் சரக்குகளையும் வெளிநாட்டார் நம்மிடமிருந்து நேரே வாங்குவதற்குப் பதிலாக, லண்டன் வாயிலாகவே வாங்க விரும்புகின்றனர். ஆகவே, நாமும், யாரையும் மகிழ்விக்கும் பேச்சைப் பின்பற்ற வேண்டும். பிறரை ஏமாற்றுவதற்காக அன்று; வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காகவே யாம்

பிரிட்டிஷார் பழமையில் நம்பிக்கையுடையோர்; புதுமைப்பித்தர் அல்லர். உலகமுழுவதும் போக்கு வரவு வலதுகைப்புறமாகச் சென்றும், பிரிட்டிஷார் மட்டும் இன்னும் இடதுகைப்புறமாகவே போக்குவரவு முறை வைத்துள்ளனர். உலக முழுவதும் நீட்டல், நிறுத்தல், முகத்தல் அளவைகளையும் நாணயத்தையும் தசாம்ச முறைப்படியே வகுத்தும், பிரிட்டிஷார் மட்டும் தங்கள் முறைகளை மாற்றவில்லை. இவை போன்ற நிகழ்ச்சிகள் மிகப் பல.

**கதம்பம்**

பிரிட்டிஷாருக்கு மிக விருப்பமானவை — மன்னர் குடும்பம், மாட்டுக்கறி, சாக்லட், டிரைபிள் (Trifle) என்னும் ஓர் உணவு, கட்டுப்பாடு, வரிசை முறை (Queue), பேச்சுரிமை, சட்டையிலிருந்து தனித்து உள்ள காலர், கிரிக்கட், நாய்ப்பந்தயம், காலை 8 மணிக்குத் துயிலெழுதல், வார இறுதி நாட்கள்,

பிறர் பேசத்தாம் கேட்டுக்கொண்டிருத்தல் என்பனவாம்.

பிரிட்டனில் இல்லாதவை — நாட்டைக் காட்டிக் கொடுக்கும் ஒற்றர்கள், ரயிலில் இரண்டாம் வகுப்பு,* அரசியற் புரட்சி, தோல்வி மனப்பான்மை, தங்கம், நகைச்சுவை என்பவைகளாம்.

பிரிட்டிஷாரின் மிக்க வலிய ஆயுதம்—வாக்குரிமை.


பிரிட்டிஷாரின் இணையற்ற செல்வம்—ஷேக்ஸ்பியரின் நாடகங்கள்.

## பாதாள ரயில்வே

உலகின் பெரு நகரங்களில், பூமிக்குக்கீழ் ரயில் ஓடுகிறது. இவற்றுள் சிறந்தது, லண்டன் நகரத்து 'ட்யூப்' (Tube) ரயில் நிலையங்களை இணைக்கும் இந்த ரயில்வேயின் படம் விலையின்றி யாவருக்கும் கொடுக்கப்படுகிறது. இயந்திர உதவி கொண்டே இங்கே பிரயாணச் சீட்டுக்களை விற்கின்றனர். நாம் ஏறிய ரயில் நாம் செல்ல வேண்டிய இடத்துக்கு நேராகச் செல்லாவிட்டால், எந்த இடத்தில் நாம் வண்டி மாற வேண்டுமென்பது பிரயாணச் சீட்டிலேயே அச்சிடப்பட்டிருக்கும். பிரயாணச் சீட்டு வாங்குமிடத்திலிருந்து பாதாளத்துக்குச் செல்லவும், பாதாளத்திலிருந்து சாலைக்கு

* பிரிட்டிஷ் ரயில்களில், நம் நாட்டைப்போல முதல் இரண்டாம் மூன்றும் வகுப்புகள் இருந்தன. இரண்டாம் வகுப்பை மட்டும் எடுத்துவிட்டனர். எனினும், முதல் மூன்றும் வகுப்புக்களின் பெயர்களைமட்டும் மாற்றவில்லை.

வரவும், பெரிய நிலையங்களில் 'எஸ்கலேட்டர்' என்னும் மின்சாரத்தால் எப்போதும் சுழன்றவண்ணமாக இருக்கும் மாடிப்படியும் சிறு நிலையங்களில்



எஸ்கலேட்டர்

'லிப்ட்' என்னும் கருவியும் இருக்கின்றன. (ஒரு நிலயத்தில் பிரயாணிகள் பாதாளத்துக்கு இறங்கிச் செல்வதைப் படத்தில் காணலாம்.)

ஒவ்வொரு திக்கிலும் செல்லும் ரயிலுக்கும் தனித் தனிப் பிளாட்பாரங்கள் மட்டுமன்றி, ரயில் நிலயத்திலேயே தனித்தனிப் பகுதிகளும் உண்டு. புகை பிடிப்பவர்கட்கும் புகைபிடிக்காதவர்க்கும் ரயிலில் தனி இடங்கள் உண்டு. ரயில் வண்டிகளில், மின்சாரத்தால் இயங்கும்கதவுகள், வண்டிநின்றதும் தாமே

திறந்துகொள்ளும்; வண்டி புறப்படுமுன் தாமே மூடிக்கொள்ளும். இந்த ரயில்களில் ஒரே வகுப்புத் தான் உண்டு. ஒவ்வொரு வண்டியிலும் பல இடங்களில், எந்த வரிசையில் எந்த நிலயம் இருக்கிறது என்பது படங்கள் மூலம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டப்பட்டிருக்கிறது. வண்டிகளும் நிலயங்களும் மிகத் தூய்மையாக உள்ளன. மிகத் தூய்மையாகவுள்ள 'ட்யூப்' நிலயத்து ஊழியர்கட்கு லண்டன் போக்குவரவு இயக்கத்தார் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்குகின்றனராம்.

**போலீஸ்**

லண்டன் போலீசாரை வாயார வாழ்த்தாதார் இல்லை. யாவரும் கேளிர் எனக் கருதி, இவர்கள் பிறருக்குத் தொண்டாற்றுகின்றனர். அரசியல் விடுதலை அடைந்த இந்தியாவில், போலீசாருடன் ஒத்துழைக்க வேண்டிய நாம், லண்டன் போலீசாரைப் பற்றி நன்கு தெரிந்துகொள்வது இன்றியமையாதது. லண்டன் போலீசில் வேலை கிடைக்க 5 அடி 10 அங்குலம் உயரமும், 36 அங்குலம் மார்பு அகலமும், மெட்ரிகுலேஷன் படிப்பும், ஆங்கிலம் தவிர ஒரு வேற்று மொழியறிவும் வேண்டும். வேலை கிடைத்தவுடன் போலீஸ் கல்லூரியில் போலீஸ் சட்டங்கள், கார் ஓட்டுதல், மோட்டார் சைக்கிள் ஓட்டுதல், நீந்துதல், குதிரைமீது சவாரி செய்தல், துப்பாக்கியால் சுடுதல், டைப் அடித்தல், சுருக்கெழுத்து எழுதுதல், குமஸ்தா வேலை, தந்தி அடித்தல், டெலிபோன் கருவியை இயக்குதல், முதற் சிகிச்சை செய்தல், கைவிரல் ரேகையைத் தெளிவாக எடுக்கும் முறை

இவற்றை எல்லாம் படிக்க வேண்டுமாம். கத்திக் குத்தைத் தடுக்கவும் தற்காப்புடனிருக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறதாம். போலி நீதி மன்றங்கள் நடத்தி, உண்மை நீதி மன்றங்களில் சாட்சி கூறும் முறையைச் சொல்லிக் கொடுக்கிறார்களாம்.

சாலைகளில் எப்படி நடக்கவேண்டும்? போலீசார் வகை வகையாய்க் கை காட்டுவதன் பொருள் என்ன? என்பவைகளை எல்லாம் பள்ளிச் சிறுவர்களுக்கு வாரந்தோறும் சொற்பொழிவுகள் மூலம் பள்ளிக்கூடங்களில் போலீசார் விளக்கிக் கூறுகின்றனர். மேலும், போலீசார் பள்ளிக்கூட விளையாட்டிடங்களுக்குச் சென்று, எல்லா வகையான வாகனங்களையும் ஓட்டி, விபத்துக்கள் எப்படி உண்டாகின்றன? அவைகளை எவ்வாறு தடுக்கலாம்? என்பவற்றை விளக்கிக் காட்டுகிறார்கள்; போக்கு வரவுச் சட்டங்களையும் மாணவருக்குச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கின்றனர்.

இவற்றால், லண்டனில் போலீசாருக்குப் பெரும் மதிப்பு உண்டு. லண்டன் போலீசாரை அறிவுக்களஞ்சியம் என்றுங் கூறுவதுண்டு. நமது போலீசாரும் இந்நிலை எய்த, அரசியலாரும் போலீசாரும் ஆவன செய்யவேண்டும். அது மட்டும் போதியதாகுமா? பொதுமக்களாகிய நாமும், புதிய (நட்புக்) கண்களோடு போலீசாரை நோக்க வேண்டும்.

## 2. நடுவழி நாடு

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பல சிறு நாடுகளில், பொருளாதாரத் துறையில் பெருவளர்ச்சியடைந்துள்ளது சுவீடன் நாடாகும். உலகப் பெரும் போர்கள் இரண்டிலும், சுவிட்சர்லாந்தைப் போலச் சுவீடனும் நடுநிலைமை மேற்கொண்டது. முதலாளித்துவம், அபேத வாதம் ஆகிய இரண்டுக்கும் நடுவழியான ஒரு பொருளாதார அமைப்பும் சுவீடனில் பொருந்தியுள்ளது. இக் காரணங்களால் இந்த நாட்டுக்கு நடுவழி நாடு (The Country of the Middle Way) என்ற பெயருண்டு. கள்ள வாணிகம் (Black Market) என்பதே இல்லாத நாடு ஒன்று உலகில் இருக்கிறது என்றால், அது சுவீடனேயாம்! இத்தகைய சுவீடனைப்பற்றி நாம் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

### நிலப்பரப்பும் மக்களும்

சென்னை மாகாணமும் சுவீடனும் நிலப்பரப்பில் பெரும்பாலும் ஒத்தவையாகும். ஆனால் சுவீடனில் பாதிக்குமேல் காடுகள் நிரம்பியுள்ளன. மேலும், ஒரு லட்சம் ஏரிகளும், பல மலைகளும், பற்பல ஆறுகளும் அங்கே உள்ளன. சுவீடனில் 70 லட்சம் மக்கள் இருக்கின்றனர். அதாவது, மைசூர் சமஸ்தானத்தைக் காட்டிலும், குறைவான அளவு மக்களே சுவீடனில் உண்டு. சுவீடனில் ஆடவர், பெண்டிரின் விகிதம் முறையே 10 : 11.

மூன்று குழந்தைகள் உடையவர் பெரிய குடும்பத்தாரெனச் சுவீடனில் கருதப்படுகின்றனர். ஏனெனில், ஒவ்வொரு நூறு குடும்பத்தாருள், 83 குடும்பத்தார் ஒரு குழந்தை உடையவராகவும், 12 குடும்பத்தார் இரண்டு குழந்தைகள் உடையவராகவும், எஞ்சிய 5 குடும்பத்தார் மட்டுமே மூன்று குழந்தைகள் உடையவராகவும் இருக்கிறார்கள்.

**வரலாறு**

பல நூற்றாண்டுகள் பேரரசாக விளங்கியதும், கி. பி. 862 முதல் 500 ஆண்டுகட்கு ரஷ்யாவில் அரசு செலுத்தியதும் ஆகிய சுவீடன், இப்போது ஆதிக்க அரசியலினின்றும் விலகித் தனித்து விளங்குகிறது. பேரரசுகளாலேயே, உலகப் போர்கள் நடைபெறுகின்றன என்ற உண்மையைச் சுவீடன் நாட்டவர் உணர்ந்திருப்பதே இம்மாறுதலுக்குக் காரணமாகும். மூன்று நூற்றாண்டுகளாகப் பிறநாட்டு அரசியல் நிகழ்ச்சியில் சுவீடன் தலையிட்டதில்லை. ரஷ்யா, ஜெர்மனி ஆகிய ஒன்றுக்கொன்று பகையான இரு பெரும் நாடுகட்கு அண்மையிலிருந்தும், போர் தம் நாட்டுக்குப் பரவாமல் சுவீடன் நாட்டவர் தங்களைப் பாதுகாத்துக்கொண்டனர். இதன் பயனாக, இந் நாட்டில் அமைதி நிலவிற்று. இவ்வமைதியே, இந் நாட்டின் பொருளாதாரச் செழிப்புக்கு அடிப்படையாகும்.

**தட்ப வெப்ப நிலை**

சுவீடனில் மழை மிகுதியாகவே பெய்கின்றது. எப்போதாவது வேண்டும் அளவு மழை பெய்யாவிட்டால், அக்காலங்களில் வேளாண்மைத்தொழிலுக்கு

வேண்டும் மின்சாரம் கிடைப்பதற்காக மின்சாரத்தைப் பங்கீடு செய்கின்றனர்.

சுவீடன்தான் உலகிலேயே மிகவும் வடக்கேயுள்ள நாடு. ஆகையால், இங்குள்ள காலநிலை மிகவும் வியப்பானது. இங்கே மே மாதம் தொடங்கி, மூன்று மாதங்கள் இளவேனிற்காலமாக இருக்கும். இக்காலத்தில் சுவீடனில் சூரியன் அல்லும் பகலும் ஒளி வீசுகின்றது. அதாவது மே மாதத்தில் தோன்றும் சூரியன் ஜூலை மாதத்தில்தான் மறைகிறது. இதனால் இந்த நாட்டுக்கு நள்ளிரவுச் சூரியன் நாடு என்ற பெயர் வழங்குகின்றது. ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 30-ம் நாள் இரவில், சுவீடிஷ் மக்கள் சொக்கப்பனை கொளுத்தி, நள்ளிரவுச் சூரியனுக்கு நல்வரவு கூறி மகிழ்ச்சிக் கூத்தாடுகின்றனர்.

நவம்பர் டிசம்பர் மாதங்களில் இங்கே மூடுபனிக் காலம் இருக்கும். அப்போது உறைந்த பனிக்கட்டியில் ஓடி விளையாடுவது இந்நாட்டவருக்கு மிகவும் இன்பம் தருவதாகும்.

**சுகாதாரம்**

சுவீடனில், பொதுவாகச் சுகாதாரம் மிக நல்ல முறையில் இருக்கிறது. சுவீடன் மக்கள் தம் உடலைப் பேணுவதில் கவனமாயிருக்கின்றனர். 10,000 உடற் பயிற்சிக்கூடங்கள் இங்கே உள்ளன.

சுவீடன் மக்களின் சராசரி உயரம் 5 அடி 9 அங்குலம். அவர்கள் நல்ல உடலமைப்பு உடையவர்கள். அவர்களுடைய சராசரி வயது 70 (நம் நாட்டில் 27). இந்நாட்டவர் தமிழ்நாட்டிலும் பல நகரங்களில்

கண் மருத்துவச் சாலைகளும் பிறவும் நிறுவியிருக்கின்றனர். உலகிலேயே மிகச்சிறந்த மருத்துவர்களும் மருத்துவச் சாலைகளும் மருத்துவத் தொழிற் கருவிகளும் சுவீடனில் உண்டு. ஆகாய விமானப் படையெடுப்பு நேர்ந்தால், அப்போது நோயாளிகளைக் காப்பாற்றுவதற்காக மலைகளுக்குள் தங்குமிடங்கள் (Shelters) கட்டி, அம்மலைகளின் மீது மருத்துவச் சாலைகள் அமைத்திருக்கின்றனர். ஆபத்துக் காலத்தில் 'லிப்ட்' என்ற கருவிமூலம் நோயாளிகள் அவ்விடங்களுக்குக் கொண்டுபோகப் படுவார்கள். சுவீடிஷ் அரசியலார் தங்களுடைய மருத்துவச்சாலைகளில் ஒரு நோயாளிக்கு நாளொன்றுக்கு ரூபாய் 18 வீதம் செலவிடுகின்றார்கள். ஆயினும், நோயாளிகளிடமிருந்து 4 ரூபாய் மட்டுமே வாங்கிக்கொண்டு, எஞ்சிய செலவைத் தாங்களே ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

**கல்வி**

எட்டு ஆண்டுகள் இலவசக் கட்டாயக் கல்வி முறை சுவீடனில் நடைமுறையில் இருக்கிறது. அவ்வாறு கற்க இயலாதவர்கள் ஏழு ஆண்டுகள் கற்ற பின்னர், வாரந்தோறும் இரண்டு நாட்கள் விகிதம் ஈராண்டுகள் கல்வி கற்கவேண்டும். எல்லா மாணவர்கட்கும் சிற்றுண்டியும், ஏழை மாணவர்கட்குப் பேருண்டியும் உடையும் அரசியலாரால் விலை பெறாமல் கொடுக்கப்படுகின்றன. ஓராண்டில் 360 மைல்கள் இலவச உல்லாசப் பிரயாணமும் மாணவர்கட்கு உண்டு. கல்லூரிகள் கண்ணைக் கவரும் கட்டிடங்களில் அமைந்துள்ளன. உயர்தரக் கல்லூரிகளில், தாய்மொழி தவிர, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்

மன், ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ் ஆகியவற்றுள் இரண்டு மொழிகள் கட்டாயப் பாடமாக இருக்கின்றன. பல ஜெர்மன் பேரறிஞர்கள் இப்போது சுவீடிஷ் பல்கலைக் கழகங்களிற் பணியாற்றுகின்றனர். எல்லா மாணவர்கட்கும், கல்வியின் இறுதியில் 9 மாதப் படைப்பயிற்சி உண்டு. சுவீடனில் **1000** பேருக்கு ஒருவரே எழுத்தறிவு இல்லாதவர்.

### நகரங்கள்


சுவீடனின் பெரிய நகரங்கள் ஸ்டாக்ஹோம், கோதன்பர்க், மால்மோ என்பன. இவற்றுள் ஸ்டாக்ஹோம் இந்நாட்டின் தலைநகராக உள்ளது. இது



ஸ்டாக்ஹோம் நகரின் ஒரு காட்சி

உலகின் மிக அழகிய நகரங்களுள் ஒன்று; வரலாற்றில் இடம் பெற்றது. பதின்மூன்று ஏரிகளுக்கும் பல குன்றுகளுக்கும் இடையே அமைந்துள்ள இந்நகரின்

பெருமையை 'ஸ்டாக்ஹோம் நகரை இரவில் பார்த்து விட்டு இறந்து போ' என்ற பழமொழியிலிருந்து அறியலாம். சுவீடனிலேயே கட்டப்பட்ட 12,000 டன் நிறையுள்ள ஒரு பெரிய கப்பலுக்கு 'ஸ்டாக்ஹோம்' எனப் பெயரிட்டு, இந்நாட்டவர் தம் தலைநகர்மீது தமக்குள்ள பற்றுதலைக் காட்டியிருக்கின்றனர்.



ஸ்டாக்ஹோமில் ஓர் அழகிய சாலை

ஸ்டாக்ஹோம் நகரத்துப் பாலங்கள் பொறியியல் நிபுணர்களின் திறமைக்குச் சான்ருக உள்ளன. தண்ணீர், ஏரிநீர், கடல் நீர் ஆகிய ஒவ்வொன்றும் ஒன்ருேடொன்று கலந்துவிடாதபடி இப்பாலங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

இந்நகரத்து ஏரிகளின் நடுவில் ஒரு சிறு தீவில், இரவில் உல்லாசமாய்ப் பொழுது போக்கப் பல நிகழ்ச்சிகள் நாள்

தோறும் நடைபெறுகின்றன. உலகிலேயே இந்நகரில்தான் திறந்த வெளியில் உயிர்க் காட்சிச்சாலை இருக்கின்றது.

ஸ்டாக்ஹோமில் பல கட்டிடங்களில் பத்தாவது மாடியில், குழந்தைகள் விளையாடுவதற்காகத் தோட்டங்கள் இருக்கின்றன. இங்குள்ள நகர மண்டபம் (Town Hall) சுவீடனின் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாகும். உலக சமாதானத்துக்கு உழைத்தவர்கட்கும், பிற பெரியோர்கட்கும், நோபல் பரிசுகள் ஏற்படுத்திய சுவீடிஷ்காரரான ஆல்ப்ரட் நோபல் என்பவர் நினைவாகப் பெரியதோர் நூல்நிலையம் இந்நகரில் உள்ளது.

**மக்களின் குணங்கள்**

சுவீடிஷ் மக்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள்; எவ்வேலையையும் முகமலர்ச்சியோடும் திறமையோடும் செய்யும் இயல்புடையவர்கள். தமிழ் மக்களைப்போலவே, சுவீடிஷ் மக்களும் நகைச்சுவை நிரம்பியவர்கள். இவர்களுடைய நாட்டு விளையாட்டு, கால் பந்தாட்டம்; நாட்டு ஊர்தி, ஈருருளி (Bicycle); நாட்டு உணவு, மீன். அடுத்தபடியாக, இவர்களுக்குப் பால் சேர்க்காத கறுப்பு நிறக் காப்பியில் விருப்பம் மிக உண்டு. இந்தியக் காப்பி உலகெங்கும் புகழ் பெற்றதாகையால், சில சுவீடிஷ் பெண்கள் காப்பி தயாரிப்பது பற்றி என்னை வினவினர்; நான் அதற்கு மறுமொழியாகச் சாமர்த்தியமாக ஏதோ சொல்லி மழுப்பிவிட்டேன்.

சுவீடிஷ்காரர்கள் தம் ஈருருளிகளைப் பூட்டி வைப்பதில்லை; இரவிலும் தத்தம் வீட்டுக்கு முன்பாகத் தெருக்களிலேயேவிட்டுவிடுவர். இவ்வாறிருந்தும்

இவை ஒன்றேனும் திருடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுவீடிஷ்காரருக்கு மிக விருப்பமானவை:- உறைந்த பனிக்கட்டியில் ஓடி விளையாடுதல், படகோட்டுதல், காரமான புகையிலை, நள்ளிரவுச்சூரியன், அதிகாலையில் எழுந்திருத்தல், மாநிறம் முதலியனவாம்.

தந்தை புகழ்பெற்றவராயிருந்தால், மகன் தன் பெயரை விட்டுவிட்டுத் தந்தையின் பெயருக்குப் பின் 'மகன்' என்ற சொல்லைச் சேர்த்துக்கொள்வது சுவீடிஷ் மக்களின் இயல்பு. பொதுவாகச் சுவீடிஷ்காரர்கள் கணக்கில் வல்லுநரல்லர். அவர்கள் இதனால்தான் தசாம்ச முறையிலேயே நீட்டல், முகத்தல், நிறுத்தல் அளவுகள், நாணயம் இவற்றையெல்லாம் அமைத்துக்கொண்டனர் போலும்! மிகச் சிறிய கூட்டல், கழித்தல் கணக்குகட்குக்கூட அவர்கள் இயந்திர உதவியை நாடுகின்றனர்.

பொருளாதார நிபுணர் பலர் சுவீடனில் உளர். சுவீடனின் ஏற்றுமதிகள் காகிதம், தளவாடச் சாமான்கள், பீங்கான், பொருளாதார நிபுணர்கள் என்று சொல்லுவதுண்டு.

**விஞ்ஞான முன்னேற்றம்**

தீப்பெட்டி, டைனமைட், ஐஸ்பெட்டி, சிக்கலைக் குறைக்கும் ரவைகள் (Ball-bearings), டெலிபோன், டீசல் இயந்திரம், கிரசின் ஸ்டவ் ஆகிய கருவிகள் அனைத்தும் சுவீடன் நாட்டினராலேயே முதன் முதலிற் கண்டுபிடிக்கப் பட்டவையாகும். இவற்றிலிருந்து சுவீடனில் விஞ்ஞானம் அடைந்திருக்கும் வளர்ச்சியை ஒருவாறு அறியலாம்.

**கூட்டுறவு**

கூட்டுறவு இயக்கம் உலகில் பரவியது சுவீடனில் அது வெற்றிபெற்றமையாலேயாம். பல பெரிய தொழிற்சாலைகள் இங்கே கூட்டுறவு முறையில் நடைபெறுகின்றன. சில்லறை வியாபாரத்திற் பெரும்பகுதி இந்த இயக்கத்தாரிடமே இருக்கிறது. கள்ள வாணிகம் இங்கு இல்லையெனின், இவ்வியக்கத்தாரின் ஆட்சித் திறமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

வீடு பற்றாக்குறையைப் போக்க, ஸ்டாக்ஹோம் நகராண்மைக் கழகத்தினர், கூட்டுறவு இயக்க மூலமாகப் பல்லாயிரம் வீடுகள் கட்டிக் குறைந்த வாடகைக்கு விட்டிருக்கின்றனர்.

**தொழில்கள்**

சிமிண்டு, இரும்பு, மரச்சாமான்கள், செயற்கை வீடுகள் ஆகிய இவற்றைச் செய்யும் தொழிற்சாலைகள், நெசவு ஆலைகள், சுரங்கங்கள், பலவகை இயந்திரங்களை உண்டாக்கும் சாலைகள் இவை போன்ற எத்துணையோவகைத் தொழிற்சாலைகள் இந்த நாட்டில் சிறந்து விளங்குகின்றன. எனினும், சுவீடனுக்கே சிறப்பாக உரியவை, காகித ஆலைகளும் பீங்கான் தொழிற்சாலைகளுமேயாம்.

சுவீடனில் 200 காகித ஆலைகள் இருக்கின்றன. இவற்றில் சில ஆலைகள் பத்திரிகைக் காகிதமும் அட்டையுமே உண்டாக்குகின்றன. போக்குவரவுக்கு வசதியாக, இந்த ஆலைகள் யாவும் துறைமுகங்களை இணைக்கும் கால்வாய்களின் கரைகளிலேயே இருப்பதையும் நான் கவனித்தேன்.

ஒரு நாட்டில் மிகுதியாயுள்ள பொருளிலிருந்து எல்லாப் பொருள்களையும் செய்தல் பலநாட்டு வழக்கம். (ஜப்பானில் மூங்கிலிலிருந்து மட்டும் 1400 வகையான பொருள்கள் செய்கின்றனராம்.) இம்முறையையொட்டிச் சுவீடன் மக்களும் தங்கள் நாட்டில் மிகுதியாயுள்ள காகிதத்திலிருந்து செய்யாத பொருளே இல்லை எனலாம். காகிதப்போர்வைகள்கூடச் செய்கின்றனர். கரன்சி நோட்டு என்ற காகித நாணயத்தை உலகுக்கு வழங்கியவர்களும் சுவீடிஷ்காரர்களே ஆவர்.

## பொருளாதாரச் செழிப்பு

நம்நாட்டு நாணயமாகிய ரூபாய் இங்கிலாந்தின் நாணயமான ஸ்டர்லிங்குடன் இணைக்கப்பட்டிருப்பது போல, சுவீடனின் நாணயமான குரோனர் (1 குரோனர்=14 அணா) அமெரிக்காவின் நாணயமான டாலருடன் இணைக்கப்பட்டிருக்கிறது. டாலர் இஞ்ஞான்று பெருமதிப்புள்ள அரிய நாணயமாக இருப்பதால், சுவீடிஷ் நாணயமும் வலுவான நிலையில் உளது. சுவீடிஷ்காரர்கள் பொதுவாகச் செல்வச் செழிப்புடையவர்கள். மற்ற ஸ்காந்திநேவிய நாடுகளிலுள்ள சொத்துக்களிலும் தொழில்களிலும் பெரும்பகுதி இவர்களைச் சேர்ந்ததேயாகும். வேலையின்மை சுவீடனில் கிடையாது. மக்களில் பாதித் தொகையினர் பேங்குகளில் கணக்குகள் வைத்திருக்கின்றனர். கீழ்க்கண்ட புள்ளி விபரங்கள் சுவீடனின் செழிப்பை வெள்ளிடை மலைபோல் தெரிவிக்கின்றன.

வானொலி நிலையங்கள்—33.

வானொலிக் கருவிகள்—20,00,000.

திரைப்படக்காட்சிச் சாலைகள்—2242.
டெலிபோன் கருவிகள்—13,00,000.
ஆகாய விமான நிலையங்கள்—30,
மோட்டார் கார்கள்—2,00,000.
இருப்புப் பாதையின் நீளம்—10,400 மைல்கள்.
தினசரிப் பத்திரிகைகள்—230.

### இருப்புப் பாதைகள்

அமெரிக்க இருப்புப்பாதைகளுக்கு அடுத்த படியாக, உலகில் சிறந்த இருப்புப்பாதைகள் சுவீடனில் உள்ளவையேயாகும். மிக அழகிய மின்சார ரயிலொன்றில் 5 மணி நேரத்தில், கோதன்பர்கிலிருந்து 300 மைல் தொலைவிலுள்ள ஸ்டாக்ஹோமுக்கு நான் ஒரு முறை சென்றது என் மனத்தை விட்டு என்றும் அகலாது.

சுவீடனில் பகற் பிரயாணத்திற்கும் இராப் பிரயாணத்திற்கும் தனித்தனி ரயில் வண்டிகள் உண்டு. இரவில் ஓடும் ரயில்களில் எல்லா வகுப்புப் பிரயாணிகளுக்கும் உறங்கும் வசதி தரப்படுகிறது. எல்லா ரயில்களிலும் புகை பிடிப்பவர்க்கும் பிடியாதவர்க்கும் தனித்தனி வண்டிகள் உண்டு. ஓடும் ரயிலிலேயே பிரயாணிகள் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு நடந்து செல்வதற்குத் தக்கபடி வழி விடப்பட்டிருக்கிறது. இந்த நடைவழிகளிலுள்ள தானே மடக்கிக்கொள்ளும் நாற்காலிகளில் இருந்துகொண்டு, பிரயாணிகள் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம். இன்றியமையாப் பொருள்கள் பலவற்றை வணிகர் ரயிலிலேயே விற்கின்றனர். குப்பையைப் போடுவதற்குத் தொட்டிகளும் ரயில்களில் வைக்கப்பட்டுள்ளன. குடி தண்ணீர்க் குழாய்களும்

காகிதத்தாலான குவளைகளும் கைக்குட்டைகளும் ரயில்களில் வைக்கப்பட்டுள. விரைவாகச் செல்லும் ரயில்களில் டைனிங் கார் என்னும் உணவுச்சாலையும் உண்டு. மேல்வகுப்புப் பிரயாணிகட்கு ரயில்வேப் படமும் தினசரிப் பத்திரிகையும் விலையில்லாமல் கிடைக்கும். நம் நாட்டில் பஸ்களில் இருப்பது போன்று சுவீடன் ரயில்களில் கண்டக்டர் இருக்கிறார். இவர், குறிப்பிட்ட ரயில் அடுத்து எந்த ஊரில் நிற்கும் என்பதை ஒலிபரப்புங் கருவி மூலம் அறிவித்துக்கொண்டேயிருப்பார்.

### அரசியல்

நம் நாட்டைப் போலவே, (ஆனால் ஒரு முடியரசின் கீழ்) கட்சி முறையில் சுவீடனில் மக்கள் ஆட்சி நடைபெறுகிறது. சுவீடிஷ் மக்களுக்கு அரசியல் செய்திகளில் மிக்க கவனமில்லை. ஆயினும், மன்னரிடத்தில் மக்கள் மிகவும் பற்றுள்ளவராக இருக்கிறார்கள். சுவீடிஷ் மன்னர் குஸ்தாவைச் சந்தித்த ஒருவர் மெய்காப்பாளர் இன்றியே அவர் இருப்பதைக் குறிப்பிட்டபோது, தமக்கு 70 லட்சம் மெய்காப்பாளர் இருப்பதாக அம் மன்னர் கூறினாராம். தம் மக்களுக்குத் தம்மீதுள்ள அன்பையே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

90 வயதுடைய குஸ்தாவ் மன்னர் நான்கு மொழிகள் பேசுகிறார், வேட்டையாடுகிறார், நீந்துகிறார். பாலஸ்தீனப் போர் பரவாதபடி தடுத்த காலஞ் சென்ற கவுண்ட் பெர்னடாட்டே இம்மன்னரின் உறவினர்.

### இந்தியாவும் சுவீடனும்

இந்தியாவின்மீது சுவீடிஷ் மக்கள் உள்ளன்புடையவர்கள். மகாத்மா காந்தியடிகளின் மரணச் செய்தி

பிற ஐரோப்பியரைக் காட்டிலும் சுவீடிஷ் மக்களை மிகுந்த வருத்தத்தில் ஆழ்த்திற்று. எப்போதும் சமாதானத்தில் விருப்பமுடையவர்களாகிய சுவீடிஷ் மக்கள் உலக அமைதிக்காகவே உயிர் நீத்த உத்தமரை இழந்தது பற்றிச் சொல்லொணாத் துயரடைந்தது இயற்கையேயன்றோ? சுவீடனில் மது உட்கொள்ளுவதைப்பற்றிய பல தடைகளும் கட்டுப்பாடுகளும் பங்கீட்டு முறையும் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.


## முடிவு

சுவீடன் கடந்த நூறு ஆண்டுகளில் தான் இந்த உயர்நிலையை அடைந்திருக்கிறது. இதற்குக் காரணமாயுள்ளவர்கள் கைதேர்ந்த தொழிலாளர்களும், சிறந்த பொறியியல் வல்லார்களும், புகழ்பெற்ற விஞ்ஞானிகளும், திறமையான ஆட்சியாளர்களும், நிலைத்த அமைச்சர்களும் ஆவர். மேலும் மலிவான மின்சார வசதியும் தொழிலாளரிடையே அமைதியும் இங்கே காணப்படுகின்றன. உணவு வகைகளில் சுவீடன் நாட்டவர் பிறரை எதிர்பாராது தங்களுக்கு வேண்டுவனவற்றையெல்லாம் தாமே விளைவித்துக் கொள்கின்றனர். நம் நாட்டுக்கும் அவை அனைத்தும் வேண்டும். இவை இருந்தால், இந்தியாவும் இந்த வையத்து நாட்டிலெல்லாம் உயர்வுற்று, வறுமை நீங்கி வாழலாம்.

# 3. வடஅயர்லாந்தில் சில நாட்கள்

## பெல்பாஸ்ட்

வட அயர்லாந்தின் தலைநகரமாகிய பெல்பாஸ்ட் என்பது மதுரை அளவுள்ள ஓர் அழகிய நகரம் ஆகும். நியூயார்க், லண்டன், பாரிஸ் ஆகிய நகரங்களோடு ஒப்பிட்டு நோக்கின், பெல்பாஸ்ட் ஒரு சிறிய நகரமே. மதுரைக்கு நடுநாயகமாக மீனாட்சி சுந்தரர் கோவில் அமைந்திருப்பதுபோல், பெல்பாஸ்டுக்கு நகரமண்டபம் அமைந்துள்ளது. இது சிற்பக் கலையழகு நிறைந்த கட்டிடமாகும். செல்வம் பொழியும் நேராக அமைந்த அகன்ற சாலைகள் இதைச் சுற்றி நாற்புறமும் இருக்கின்றன. இக் கட்டிடத்தின் ஒரு தோற்றத்தைக் கீழேகாணலாம்.



மதுரையில், பட்டு, துணி இவைகளின் உற்பத்தி மிகுந்திருப்பதுபோல், பெல்பாஸ்டில் லினன் ஆடை

உற்பத்தி மிகுந்துள்ளது. 'யுனைட்டெட் கிங்டம்' எனப்படும் ஐக்கிய முடியரசின் சிறந்த துறைமுகங் களுள் பெல்பாஸ்டும் ஒன்ருகத் திகழ்கின்றது. பல்கலைக்கழகம், தொழிற்கல்லூரி, நீதிமன்றம், பொருட்காட்சிச்சாலை (Museum) ஆகியவை இருக் கும் நாகரிகமான கட்டிடங்களும் வேறு பல சிறப் புக்களுமுடைய இந்நகரத்துக்கு, 1948 அக்டோபர் 16-ல் லண்டனிலிருந்து வான வழியாகப் போய்ச் சேர்ந்தேன்.

**அயர்லாந்து**

அயர்லாந்து இங்கிலாந்தை அடுத்துள்ள ஒரு தீவு. அரசியல் குழப்பங் காரணமாக இந்தியா இரு கூருகப் பிரிக்கப்பட்டதுபோல், அயர்லாந்தும் தென்பகுதி வடபகுதிகளாக 25 ஆண்டுகளுக்கு முன்பு பிரிவுசெய்யப்பட்டது. தென் அயர்லாந்து புரட்சி இயக்கத்தின் இறுதியில், முழு உரிமை பெற்று, இப்போது ஐரிஷ் பிரீஸ்டேட் (Irish Free State) என்ற குடியரசாக விளங்குகிறது.

**வட அயர்லாந்து**

வட அயர்லாந்து எனப்படும் அல்ஸ்டர் என்ற பகுதி பிரிட்டிஷ் பாராளுமன்ற ஆட்சியிலேயே இருந்துவருகிறது. உள்நாட்டுச் செயல்களில் அதி காரம் செலுத்தும் வட அயர்லாந்துப் பாராளுமன்ற மும் அமைச்சர் குழுவும் பெல்பாஸ்டிலேயே இருக் கின்றன.

வட அயர்லாந்து யுனைட்டெட் கிங்டத்தின் ஒரு பகுதியே; 'யுனைட்டெட்கிங்டம் ஆப் கிரேட் பிரிட்டன் அண்டு நார்த்தர்ன் அயர்லாந்து' (United Kingdom of Great Britain & N. Ireland)என்பதையே, சுருக்க

மாக யுனைட்டெட் கிங்டம் என்று கூறுதல் வழக்கு. இங்கிலாந்திலுள்ள நாணயமே வட அயர்லாந்திலும் வழக்கில் உள்ளது. ஆங்கிலேயரின் சட்டங்களே இங்கும் நடைமுறையில் இருந்து வருகின்றன. இங்கிலாந்துக்கும் இந்த நாட்டுக்கும் எவ்விதச் சுங்கத் தடையும் இல்லை. வட அயர்லாந்து மக்கள் ஐரிஷ் மொழியைப் பெரும்பாலும் மறந்துவிட்டனர். ஆங்கிலம் ஒன்றே இங்கு இப்போது வழங்கும் மொழியாகும். பெல்பாஸ்டில் வெளியாகும் நான்கு தினசரிப் பத்திரிகைகளும் ஆங்கிலத்திலேயே உள்ளன.

## நிலப்பரப்பும் மக்களும்

வட அயர்லாந்து ஆறு மாவட்டங்களும் பன்னிரண்டரை லட்சம் மக்களும் உள்ள ஒரு சிறுநாடாகும். எனினும், வட அயர்லாந்து சிறப்புற்றிருப்பதற்குக் காரணம் இந்த மக்களின் பேராற்றலேயாம். இவர்கள் திறமையுடையவர்கள்; சுறுசுறுப்பானவர்கள்; செல்வம் திரட்டுவதிலும், உற்பத்தியைப் பெருக்குவதிலும் இணையற்றவர்கள். வாழ்க்கைப் போட்டியில் இவர்களை வெல்லுவதைக் காட்டிலும், இமயமலை உச்சிக்கு ஏறிவிடுதல் எளிது.

## சில பண்புகள்

வட அயர்லாந்துக்காரர்கள் தனிப்பட்ட இயல்புடையவர்கள்; அரசியல் உணர்ச்சி அற்றவர்கள்; பழங்கொள்கைகளைப் பின்பற்றுதவர்கள்; கேளிக்கைகளில் விருப்பில்லாதவர்கள். ஆங்கிலேயரிடமுள்ள அரை குறை நகைச் சுவையைக் கூட வட அயர்லாந்துக் காரர்களின் சமூக வாழ்வில் காணுதல் அரிது. அண்மைக் காலத்தில்,

இசையும் கூத்தாடுதலும் (Folk-dance) அல்ஸ்டரில் பெரிதும் வளர்ந்திருக்கின்றன. ஆனால், இவர்கள் ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண்ணு யிருப்பார்கள்.


### இயற்கைக் காட்சி

தென் அயர்லாந்தைப்போலவே, வட அயர் லாந்தும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த நாடாம். யாத்திரை செய்பவர்கள் விரும்பும் பல பகுதிகள் இங்கே உள்ளன. இல்லாவிட்டால், எவரையும் கேலி செய்யும், 93 வயதுக்குமரன் ஜி. பி. எஸ். (அறிஞர் ஜார்ஜ் பெர்னார்டுஷா) அயர்லாந்தைப்பற்றி நல்ல பாட்டொன்றெழுதி, பான் அமெரிக்கன் விமானக் கம்பெனியார் அதை விளம்பரத்திற்குப் பயன் படுத்த அனுமதிப்பாரா? ஆனால், ஷா ஒரு ஐரிஷ் காரர். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு தானே!

### தொழில் வளர்ச்சி

தொழில்வளர்ச்சி அல்ஸ்டரில் மின்னல் வேகத் தில் பரவிற்று, பெல்பாஸ்டின் கப்பல் கட்டும் தளங்கள் உலகப்புகழ் பெற்றவையாகும். போர்க் காலத்தில் மட்டும் 300 கப்பல்கள் இங்குக் கட்டப் பட்டனவாம். நான் சென்ற அன்று, சிந்தியா கம்பெனியாருக்காகக் கட்டப்பட்ட புதிய கப்பலொன்று மிதக்கவிடப்பட்டது. இவ்விழாவில் தேங்காய் உடைக்கப்பட்டது, அயர்லாந்துக் காரர்கள் இதற்கு முன்பு காணாத ஒரு காட்சி யாகும். காலத்துக்குத் தக்க முன்னேற்றமடை வதில் சிறந்த அறிஞர்களான அல்ஸ்டர்க்

காரர்கள் கப்பல் கட்டும் தங்கள் பண்டைப் பெருமை யோடு மனவமைதி அடைந்துவிடாமல், இந்த



கப்பல் கட்டும் தளங்கள்

ஆகாய விமானக் காலத்தில், ஆகாய விமான உற் பத்தியிலும் முன்னணியில் இருக்கின்றார்கள்.

லினன் உற்பத்தியும் அல்ஸ்டரின் மிகப் பெரிய தொழிலாகும். ஐரிஷ் லினனைப்பற்றிக் கேள்விப் படாதார் யார்? ஆண்டுதோறும் பன்னிரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள லினன் துணி அல்ஸ்டரி லிருந்து ஏற்றுமதி ஆகிறதாம். ரயான் என்னும் செயற்கைப்பட்டு மோகம், தொத்து நோய்போல் மிகுந்துவரும் இந்நாளில் அல்ஸ்டர்காரர்கள் லினன் தொழிலோடு நிற்பார்களா? யாருக்கும் எதி லும் பின்வாங்காத இந்த மக்கள் இப்போது ரயான் உற்பத்தியையும் பெருக்கிவிட்டார்கள். எல்லாவகையான துணிகளின் உற்பத்தியிலும்

உள்ள உட்பிரிவுகள் பலவும் அல்ஸ்டரின் வளத்தை அதிகரிக்கின்றன. செங்கல், சிமிண்டு,



லினன் தொழிற்சாலை

மீன், முட்டை உற்பத்திகளாலும் இந்நாட்டுக்கு மிக்க வருமானம் கிடைக்கிறது.


**பிரிட்டனின் உயிர்நாடி**

அல்ஸ்டர்காரர் பிரிட்டனின் உயிர்நாடி தம்மிடம் இருப்பதைப்பற்றிப் பெருமை கொள்ளுகிறார்கள். பிரிட்டனின் உயிர்நாடி தம்மிடம் இருப்பதாக அமெரிக்கர் கருதுகின்றனர்; ஆஸ்திரேலியர் தம்மிடம் இருப்பதாக நினைக்கிறார்கள். ஆனால் அல்ஸ்டர்காரர் சொல்லுவதில் உண்மை நிரம்பியிருக்கிறது. புலாலும் பாலும் அல்ஸ்டரிலிருந்து தான் பிரிட்டனின் பெரும் பகுதிக்கு அனுப்பப் படுகிறது. யாழ்ப்பாணத்தாரின்றி மலேயா ரயில்கள் ஓடா; சென்னை மாகாணத்தாரின்றி இந்தியப் பத்திரிகைகள் வெளிவர மறுக்கின்றன; ஸ்காட்சுக் காரரில்லாத பிரிட்டிஷ் பேங்கு பருப்பில்லாத

கல்யாணத்தை ஒத்ததே. இவைபோல் அல்ஸ்டர்க் காரரின்றிப் பிரிட்டிஷ் ரயில்களை ஓட்ட முடியாது. அவர்களின்றிப் பிரிட்டிஷ் படைகளும் முன்னேறுவதில்லை. பிரிட்டிஷ் சிவில் சர்வீசும் இப்படியே தான்.

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

வட அயர்லாந்தின் ஒரே கேள்வி, தென் அயர்லாந்துடன் சேர்ந்துவிடுவதா? கூடாதா? என்பதே. பூகோள அமைப்பால், இரு அயர்லாந்துகளும் ஒரே தீவாக இருக்கின்றன. இவ்விரு நாடுகட்கிடையே




வட அயர்லாந்துப் பள்ளிக்கூடம்

யுள்ள எல்லைகள் இயற்கையாய் அமைந்தன அல்ல; அரசியல் சதுரங்கத்தின் விளைவால் ஏற்பட்டவையாகும். பாக்கிஸ்தானைப்போல தென் அயர்லாந்தில் உணவுப் பொருள்கள் மிகுதியாக உள்ளன. வட அயர்லாந்தில் இந்தியாவைப் போலச் சில ஆண்டுகளில் உணவுப் பற்றுக்குறை ஏற்படுவது உண்டு. இக்காரணங்களால், இரு நாடுகளையும் இணைக்கவேண்டுமென்ற கிளர்ச்சியிலே,

டிவாலரா போன்ற தென் அயர்லாந்துத் தலைவர்கள் முனைந்துள்ளனர். இவர்களை ஆதரிப்போர் சிலர் அல்ஸ்டரில் இருக்கின்றனர்.

### ஒன்றுபடுதற்கு உள்ள தடைகள்

அல்ஸ்டருக்குப் பிரிட்டன் ஆண்டுதோறும், 4 மில்லியன் பவுன் (ஐந்தேகால் கோடி ரூபாய்)



பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்குப் பால் அளிக்கப்படும் காட்சி

உதவி செய்கிறது. இதைத் தருவதற்குத் தென் அயர்லாந்தின் செல்வநிலை இடந்தராது. மேலும், தங்களுடைய இன்ப துன்பங்களைப் பிரிட்டனுடன் பகிர்ந்து கொள்ளுவதால், பொதுவாகத் தங்களுக்கு நன்மை ஏற்படுகிறது

என்பதே அல்ஸ்டர் மக்களின் கருத்து. இக்கருத்து உறுதியானதற்குப் பிரிட்டிஷ் தொழிற் கட்சி பெருமையடையலாம். இந்தக் கட்சியின் அரசாட்சியின் பொதுநலத் திட்டங்களால், வாழ்க்கை நிலை அல்ஸ்டரில் பன் மடங்காக உயர்ந்திருக்கிறது; தொழிலாளரின் நிலை முதலிடம் பெற்றுள்ளது; கட்டணமின்றி, சுகாதார வசதிகள் கிடைக்கின்றன; குழந்தைகளுக்குப் பாலும் பகலுணவும் நேரந் தவறாமல் விலையின்றி ஊட்டப்படுகின்றன.

வட அயர்லாந்தில் நான் தங்கியிருந்த நாட்கள் நான்கேயாம். அதிலும் மிகக் குளிர்காலத்தில் அங்குத் தங்க நேர்ந்தது. ஆதலால், வெளியே செல்ல நடுங்கி, நாள்தோறும் பதின்மூன்றரை மணி நேரம் மின்சார நெருப்புக்குத் துணையாக அறைக்குள்ளேயே கழித்தேன். இந்நிலையில் இதைவிட அதிகமாக எப்படி எழுதமுடியும்?

## 4. குயின் எலிசபத்[1]

எனது ஆறுமாதகால ஆழிசூழ் உலகச் சுற்றுப் பிரயாணத்தில், மிகச் சிறந்ததும், உள்ளக்கிளர்ச்சியும் உவகையும் தந்ததும், ஆறு நாட்கள் அட்லாண்டிக் பெருங்கடலில் குயின் எலிசபத் கப்பலில் நான் கழித்ததேயாம்.

### சதாம்ப்டன் துறைமுகம்

1948ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் தேதி, தீபாவளியன்று, இரவு 7 மணிக்கு லண்டன் வாட்டர்லூ ரயில் நிலையத்துக்கு வந்தேன். குயின் எலிசபத் கப்பலில் அமெரிக்காவுக்குச் செல்லும் பிரயாணிகட்கென, அக் கப்பலின் உரிமையாளர்களான குனர்டு வயிட் ஸ்டார் கம்பெனியார் தனி 'புல்மன்'[2] ரயில் ஏற்பாடு செய்திருந்தனர். அந்த ரயிலில் 80 மைல் தொலைவிலுள்ள சதாம்ப்டன் துறைமுகத்துக்கு ஒன்றரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தேன்.

முறைப்படி சுங்க அலுவலாளர்கள் சில சடங்குகள் செய்தபின், கப்பலை அடைந்தேன். இக் கப்பலின் பெருமையைப்பற்றி எவ்வளவோ கேட்டும் படித்துமிருந்தும், இதிற் கால்வைத்தவுடன் எனக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாயிற்று.

### இக்கப்பலின் அமைப்பு

குயின் எலிசபத் உலகிற் பெரிய கப்பல். இதனுடைய எடை 83,673 டன்; அதாவது, இந்தியாவின் ஓராண்டு

---

1 அட்டைப்படம் பார்க்க.

2 புல்மன் என்பது உணவுச்சாலையும் ஏனைய வசதிகள் பலவும் உள்ள ரயில். இந்த ரயில்கள் புல்மன் கம்பெனியைச் சேர்ந்தவை.

இறக்குமதியில் மூன்றில் இருபகுதி. இக் கப்பலின் நீளம் 1031 அடி; அகலம் 118 அடி; உயரம் 135 அடி முதல் 234 அடி வரையில். இக் கப்பலில் இயந்திரத்திலும் அமைப்பிலும் 50,000 டன் எடையுள்ள உலோகங்களும், ஒரு கோடி ஆணிகளும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இக்கப்பலைத் துறைமுகத்திற் கட்டுவதற்குப் பயன்படுத்தும் சங்கிலியின் எடை 2,000 டன்! எண்ணெயால் ஓட்டப்படும் 26 'லைப்போட்கள்' (Life boats) உள்ள போட் டெக், டென்னிஸ் விளையாடுமிடமுள்ள ஸ்போர்ட்ஸ் டெக், உலாவுவதற்கேற்ற சன் டெக், கட்டணமின்றித் திரைப்படங்கள் காட்டும் இரண்டு தியேட்டர்களுள்ள பிராமினெட் டெக், கடைகளும் பர்சரின்* அலுவலகங்களும் உள்ள மெயின் டெக், இன்னும் A டெக், B டெக், C டெக், D டெக், R டெக் முதலிய 14 மாடிகளும், மின்சாரத்தால் மேலிருந்து கீழும் கீழிருந்து மேலுஞ் செல்ல உதவும் 35 (Lifts) கருவிகளும், நிழற்படம் எடுக்கும் நிலையமும் இக் கப்பலில் உள்ளன. செய்திப் படங்கள், கேலிச்சித்திரப் படங்கள், குழந்தைகளுக்கான படங்கள் இவைகளும் கப்பலிலுள்ள தியேட்டரில் காட்டப்பட்டன. நான் என் வாழ்நாளிலேயே, இக்கப்பலில் தான் 6 நாட்கள் தொடர்ந்து படம் பார்த்தேன். இதன் பதினொன்கு மாடிகளிலும் நடந்தால் சென்ற வழியில் மீண்டும் செல்லாமலே 22 மைல்கள் நடக்க இயலும்! இத்துணைப் பெரிய கப்பலைக் கண்ணுற்றவுடன் நான் திகைப்புற்றதில் வியப்பென்ன?

---

* பர்சர் (Purser)—கப்பல கணக்குகள் வைத்திருக்கும் அலுவலாளர்.

### கப்பலில் காணப்படும் பல விநோதங்கள்

உலகின் எப்பகுதிக்கும் இக்கப்பலில் இருந்த வாறே வானொலித் தொலைப் பேச்சு (Radio Telephone) மூலம் பேச இயலும். 10,000 மைல் கட்கு அப்பாலுள்ள தம் குடும்பத்தாரோடு இக் கப் பல் பிரயாணிகள் டெலிபோனில் பேசுவதும், தத் தம் அலுவலகங்களுடன் நடுக்கடலிலிருந்தவாறே தொடர்புகொண்டு பெரிய வியாபாரங்களை முடிப் பதும், நாள்தோறும் நடைபெறும் விநோதங்களிற் சிலவாகும்.

"Ocean Times" என்ற தினசரிப் பத்திரிகை இக்கப்பலிலேயே அச்சிட்டு நாள்தோறும் பிர யாணிகட்கு வழங்கப்படுகிறது. இப்பத்திரிகையில், செய்திகளும் கட்டுரைகளும் விளம்பரங்களும் பகுத் தறிவுப் போட்டியும் வெளிவருகின்றன. ஆசிரியர் கருத்துக்கள் மட்டும் இப்பத்திரிகையில் இல்லை.

எல்லாப் பிரயாணிகளின் பெயர்களும் அடங் கிய புத்தகம் ஒன்று, ஒவ்வொரு பிரயாணத்திலும் இக்கப்பலிலேயே அச்சிட்டுப் பிரயாணிகட்கு வழங்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் ஐந்து பெரும் பேங்குகளில் ஒன்றான* மிட்லண்டு பேங்குக்கு இக்கப்பலில் மூன்று கிளைகள் உண்டு.

டென்னிஸ் விளையாடும் இடம், உடற்பயிற்சிச்சாலை, இயந்திரமூலம் நடக்கும் குதிரைப்பந்தயம், பிற்பக லில் கப்பல் வாத்தியக் குழுவின் இன்னிசை ஆகிய

---

* மற்ற நான்கு பேங்குகள் : பார்கிலேஸ் பேங்கு, லாயிட்ஸ் பேங்கு, நாஷனல் புராவின்ஷியல் பேங்கு, வெஸ்ட்மினிஸ்டர் பேங்கு ஆகியவை.

இவை, பொழுதுபோக்குக்கு உதவும் சாதனங்களிற் சில. இவை பற்றிய அறிவிப்புகள் அடங்கிய நிகழ்ச்சி நிரலை நாள்தோறும் எங்களுக்கு அச்சிட்டுத் தந்தனர்.

குயின் எலிசபத் கப்பலின் பிற சிறந்த பகுதிகளிற் குறிப்பிடத்தக்கது அதனுள்ளிருக்கும் நூல் நிலையம். அதில் பல மொழிகளில், சில ஆயிரம் புதிய நூல்களும் பல பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இருக்கின்றன.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள பெரிய உணவு விடுதிகளில் தங்குவதற்கான முன்னேற்பாடுகள் செய்யும் அலுவலகமும் இக்கப்பலிலேயே இருக்கிறது.

பிரயாணிகள் கடிதங்கள் எழுதுவதற்கும், புகை பிடிப்பதற்கும், சீட்டாடுவதற்கும் தனித் தனியே பல அறைகள் (Lounges) அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிட்ட நேரங்களில் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

இக்கப்பலிலுள்ள நடனசாலைகள் (Dance Halls) தனி அழகு உடையன. இக்கப்பலில் உயர்ந்த மரங்கள் தூண்களாகவும் சுவர்களாகவும் உருவெடுத்து அழகுக்கு அழகு செய்கின்றன.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஓவியங்கள், கண்ணைக்கவரும் பலநிறப் படங்கள், யாவருக்கும் கலையின் மேம்பாட்டை உணர்த்தும் அரிய சிற்பங்கள் இவற்றின் பற்பல காட்சிகளை இக்கப்பலிற் காணலாம்.

பிரயாணிகளின் குழந்தைகட்கு (அல்லது குழந்தைப் பிரயாணிகட்கு) விளையாடும் இடங்களும் பொம்மைகளும் மற்ற விளையாட்டுக் கருவிகளும் உள்ளன.

லண்டன் நகரின் புகழ்பெற்ற பெரிய கடைகள் (Department Stores)* நான்கின் கிளைகள் இக்கப்பலில் நிறுவப்பட்டுள்ளன. அவைகளிற் புத்தகங்களும் வானொலிக் கருவிகளும் பிரயாணத்திற்கு இன்றியமையாத பொருள்களும் விற்கப்படுகின்றன.

இக்கடைகளில் பொருள்கள் வாங்கும்போதும், மேனாட்டார் வரிசைமுறையில் ஒருவர்பின் ஒருவராய் நின்று, ஆரவாரமின்றி வாங்கியது எனக்கு வியப்பைத் தந்தது. அவர்களுடைய கட்டுப்பாட்டுக்கு மேலும் சில எடுத்துக்காட்டுக்கள் கூறலாம். கப்பலில் ஏறிய நாளில், முதல் பந்தியில் உணவு உட்கொண்டவர்கள், நாள்தோறும் முதல் பந்தியிலேயே உண்பர்; அன்று இரண்டாவது பந்தியில் உண்டவர், பின்னரும் இரண்டாவது பந்தியிலேயே உண்பர்; உணவருந்த அமரும் இடத்திலும் மாறுதல் செய்யார்.

**மிதக்கும் அரண்மனை**

மருத்துவர்களும் நர்சுகளும் ரணசிகிச்சை செய்யுமிடமும், பல் வைத்தியப் பகுதியும், தொத்து நோய்களைக் குணப்படுத்தத் தனி அறைகளும், எக்ஸ்ரே சிகிச்சை வசதியுமுடைய பெரிய மருத்துவச் சாலையும் புது முறைகளில் முடிதிருத்தும் நிலையங்களும், மின்சார உதவிகொண்டு பலவகை உணவுகளைத் தயாரிக்கும் இயந்திரங்களும்; அவற்றைக் குளிர்ந்த நிலையிலும் சூடான நிலையிலும் வைத்திருக்கும் தன்மை பொருந்திய

* டிப்பார்ட்மெண்டு ஸ்டோர்ஸ் என்பன பொருள்களின் பலவகைகட்குத் தனித்தனிப் பகுதிகள் உள்ள மிகப் பெரிய கடைகள்.

கருவிகளுள்ள உணவாக்கும் சாலையும், ஒரே காலத்தில் 850 பேர் உணவருந்தக்கூடிய இடமுள்ள 'ஏர் கண்டிசன்' (Air-Condition) செய்யப்பட்ட மண்டபமும், குழந்தைகள் உணவருந்துவதற்கென ஒரு தனி அறையும், நீந்துங்குளங்களும், நோய் தீர்க்கும் வன்மையுடைய நீரில் குளிக்க வசதியும், ரோட்டரி கிளப்* கூட்டங்கள் நடக்கத் தனி இடமும் இக் கப்பலில் இருக்கின்றன. கிறித்தவர்களும் யூதர்களும் அவரவர் கடவுளை வழிபடுவதற்குத் தனி இடங்கள் உள்ளன. இரும்பாலும் எஃகாலும் ஆக்கப்பட்ட நகரம் என்றும், மிதக்கும் அரண்மனை என்றும் இக்கப்பலைப் பலர் பல பெயர்களால் புனைந்துரைத்திருப்பதில் சிறிதும் தவறு இல்லை.

### மின்சாரக் கப்பல்

இக்கப்பலிலுள்ள மின்சாரக்கம்பி (Electric Wire) யின் நீளம் 4,000 மைல் என்றால், விளக்குகளின் சிறப்பை விளக்கவும் வேண்டுமோ? விளக்குகள், லிப்ட்டுகள், டெலிபோன், 10 மைல் சுற்றளவுக்குக் கேட்கும் அபாய அறிவிப்புச் சங்கு, கப்பலின் இயந்திரம், நீராடுவதற்கு வெந்நீர்—இவை மட்டுமல்ல—கப்பலின் சமையல்வேலை முழுவதுமே மின்சாரத்தால் நடைபெறுகின்றது. பிரயாணிகட்காகப் பல டன் அளவுள்ள பாலை ஐஸ் பெட்டியில் காப்பதும் மின்சாரமே. 25,000 மக்களுள்ள ஒரு நகரத்துக்கு வேண்டுவதைக் காட்டிலும், மிகுதி

* ரோட்டரி கிளப் என்பது செல்வாக்குள்ள பெரிய வணிகரும் வேறுபட்ட பல துறைகளில் உயர்நிலை எய்தியவர்களும் உறுப்பினராயுள்ள குழு; இது உலக முழுதும் பரவியுள்ளது. இதன் உறுப்பினருக்கு 'ரோட்டரியன்' எனப் பெயருண்டு. இக்குழுவினர் பொது நன்மைக்காகப் பல பணிகள் ஆற்றுகின்றனர்.

யான மின்சாரத்தைச் செலவிடும் குயின் எலிசபத்தில் இரு பெரிய மின்சார நிலையங்கள் (Power Stations) இருப்பதால், இதை மின்சாரக் கப்பல் என்றும் அழைக்கலாம்.

**எண்ணெயில் ஓடுங் கப்பல்**

இக் கப்பலின் தண்ணீர் டாங்கும் மிகமிகப் பெரியது. இக் கப்பலின் இயந்திரத்துக்கு மணிக்கு 600 டன் தண்ணீர் வேண்டுமாம். பெரும்பாலான கப்பல்கள் நிலக்கரியில் செல்லுவனவே; ஆனல், குயின் எலிசபத் எண்ணெயில் ஓடுங் கப்பல். 160,000 குதிரைப் பவருள்ள இயந்திரத்தையுடைய இக் கப்பல், பல நூறு டன்கள் எண்ணெய் கொள்ளும் டாங்கைத் தன்னகத்தே கொண்டது.

**ராடார்**

மிகுதியான மூடுபனியிலும் 50 மைல் தொலைவு வரை வழி தெளிவாகத் தெரிய உதவியளிக்கும் ராடார் (Radar) என்னும் செயற்கைக் கண் போன்ற கருவி இக் கப்பலில் இருப்பதால், எவ்வித இருட்டும் பெரு மழையும் இக் கப்பலின் பிரயாணத்தைத் தடைப் படுத்துவதில்லை. ராடார் என்பது வானெலியால் திசையறிய உதவுவது. ஆகாயத்திலுள்ள விமானங்கள் அல்லது கடலிலுள்ள கப்பல்களின் உதவியின்றியே, இது அவற்றின் திசையையும் இருப்பிடத்தையும் அறியும் ஆற்றல் வாய்ந்தது. சந்திரன், செவ்வாய் முதலிய கோளங்களுக்குச் செய்தியனுப்பிப் பதிலைப் பெறவும் ராடார் பயன்படுகிறது. வாணிகத்துக்காகப் பெருங் கடல்களில் மீன் பிடிக்கவும் ராடார் உதவுகிறது.

எனவே, விஞ்ஞானத் துறையில் ராடார் கண்டு பிடிக்கப்பட்டது வியக்கத்தக்க முன்னேற்றம் என்றே கூறவேண்டும்.

**கப்பலின் பெருமை**

குயின் எலிசபத் 850 முதல்வகுப்புப் பிரயாணிகளையும், 720 இரண்டாவது வகுப்புப் பிரயாணிகளையும் 745மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளையும் 1200 வேலையாட்களையும் ஏற்றிக்கொள்ளுகிறது. இவ்வாறிருந்தும் இக் கப்பலுக்கு டிக்கட்டு வாங்குவது குதிரைக் கொம்பாக இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பே முயற்சி செய்தால், பெரும்பாலும் டிக்கட்டு கிடைத்துவிடும். ஆகாய விமானக் கட்டணத்தைக் காட்டிலும் மிகுதியான பணம் கொடுத்து இக் கப்பலின் முதல் வகுப்பு டிக்கட்டு வாங்க வேண்டியிருப்பதிலிருந்து, இக் கப்பலில் பிரயாணம் செய்வதில் மக்களுக்குள்ள ஆர்வம் இத்தகையதென அறியலாம். ஆறு மாதங்கட்கு முன்னரே டிக்கட்டு வாங்கிய என்னிடம், ஓராண்டுக்கு முன்பே டிக்கட்டு வாங்கியதாகச் சில நண்பர்கள் கூறிய போது, அவர்களைப் பார்த்து ஆச்சரியப்படுவதா, அல்லது அனுதாபப்படுவதா என்று தெரியவில்லை.

இக் கப்பலின் ஒவ்வொரு பிரயாணத்திலும் புகழ் பெற்றவர் பலரைச் சந்திக்க இயலும். என்னுடன் பிரயாணஞ் செய்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் - கனடா நாட்டின் முன்னாள் முதல் அமைச்சர் மக்கன்சீ கிங், பிரான்சில் இந்தியாவின் தூதராகத் தொண்டு செய்யும் சர்தார் எச். எஸ். மலிக், பிரிட்டிஷ் பாராளு மன்றத்தின் இரு பகுதிகளின் பல உறுப்பினர்

ஆகியோர். ரஷ்ய வெளிநாட்டமைச்சராயிருந்த மாலதோவ் இக் கப்பலில் தாம் சென்றபோது, சில விஞடிநேரம் இக் கப்பலை ஓட்டி மகிழ்ந்தனராம். ஒரு முறை ஒரு பிரயாணி இக் கப்பலில் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாளாம். அவள் அக் குழந்தைக்கு இக் கப்பலின் பெயரையே இட்டாளாம்.

நான் ஆறு நாட்கள் இக் கப்பலிலிருந்தும் இதன் எல்லாப் பகுதிகளையும் பார்க்க என்னல் இயலவில்லை. நல்ல வேளையாக இக் கப்பலில் ஏறியவுடன் இதைப்பற்றிய படங்களுள்ள விளக்கமான புத்தகம் ஒன்றைக் கப்பல் அதிகாரிகள் தந்தனர். அஃதின்றேல், கப்பலுக்குள் ஓரிடத்திலிருந்து மற்ரேரிடத்துக்குப் போக வழி தெரியாமல் துன்பப்பட்டிருப்பேன்.

## அறைகளின் அமைப்பு

முதல் வகுப்பு அறை ஒவ்வொன்றுக்கும் நீராடும் அறை ஒன்றும், டெலிபோன் ஒன்றும், மின்சார விசிறி ஒன்றும், கவலையின்றி உறங்குவதற்கான எல்லா வசதிகளும், நாற்காலிகளும் மேசைகளும், பெரிய கடிகாரம் ஒன்றும் இருக்கின்றன. அட்லாண்டிக் பெருங் கடலைக் கடக்கும் போது ஏற்படும் (லண்டனுக்கும் நியூயார்க்குக்கும் உள்ள) 5 மணி நேர வேறுபாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்து, நாள்தோறும் சிறிது சிறிதாக மாற்றுகின்றனர். கப்பலின் இயந்திரங்களுள்ள அறையிலிருந்து நேரத்தை மாற்றியவுடன், எல்லா அறைகளிலுமுள்ள கடிகாரங்களின் நேரமும் தானே மாறும்படி மின்சாரமூலம் இவை அமைக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாம், மூன்றும் வகுப்பு அறைகளில் மேற் குறித்தவற்றினின்றும் சிறிது குறைந்த வசதிகள் உள்ளன. முதல் வகுப்பில் மட்டும் ஒவ்வொரு பிரயாணிக்கும் தனி அறை உண்டு.

**கப்பலின் வேகமும் வருமானமும்**

சதாம்ப்டனிலிருந்து நியூயார்க் வரையுள்ள 3088 கப்பல் மைல்களை (Knots) (அதாவது ஏறக் குறைய 3500 சாதாரண மைல்களை) இக் கப்பல் 4 நாள், 20 மணி, 45 நிமிட நேரத்தில் கடந்தது. அதாவது இதனுடைய சராசரி வேகம் 26½ கப்பல் மைல்கள் அல்லது சற்றேறக்குறைய முப்பது சாதாரண மைல்கள்.

முதல் நாள் பகல் 12 மணி முதல் மறு நாள் பகல் 12 மணி வரை கப்பல் எத்தனை மைல்கள் பிரயாணம் செய்திருக்கிறதென்பதும், பகல் 12 மணிக்குக் கப்பல் அட்லாண்டிக் பெருங் கடலில் எந்த இடத்தில் இருந்தது என்பதும் நாள்தோறும் அறிவிப்புப் பலகையில் வெளியிடப்படும். பிரயாணத்தில் பொழுது போவதற்காக இதை ஆதாரமாக வைத்துப் பத்துப் பிரயாணிகள் சேர்ந்து கொண்டு, 1 முதல் 0 வரை ஒவ்வொருவரும் ஓர் எண்ணை 12 மணிக்கு முன்பே சொல்லி, அன்றைய பிரயாண மைல் தொகையின் கடைசிச் சிற்றிலக்கத்துக்கு (Digit) ஒவ்வொரு ரூபாய் பந்தயம் கட்டுவர். அன்று கப்பல் 589 மைல்கள் பிரயாணம் செய்ததாக அறிவிக்கப்பட்டால், இத் தொகையின் கடைசிச் சிற்றிலக்கமாகிய 9 என்ற எண்ணைக் குறிப்பிட்டவர் 10 ரூபாய்களையும் பெறுவார்!

இக்கப்பல் லண்டனிலிருந்து அமெரிக்காவுக்குப் போய்த் திரும்பும் ஒவ்வொரு முறையிலும் 13,00,000 டாலர்களை இங்கிலாந்துக்குச்சேகரித்துத்தருகிறது.

### ஆபத்துக் காலத்தில் உதவி

கப்பலுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால், பிரயாணிகள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்? எந்த வழியாக வெளியேறவேண்டும்? நீரில் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள 'லைப்-பெல்ட்' என்ற கருவியை எவ்வாறு உடலில் அணியவேண்டும்? என்பவைகளைப் பிரயாணிகட்கு அறிவிக்க, எல்லாக் கப்பல்களிலும் வாரம் ஒரு முறையாவது பயிற்சி (Drill) நடத்தவேண்டுமென்பது கப்பல் சட்டங்களில் ஒன்று. இக் கப்பலின் மாலுமிகள் இப் பயிற்சியை இரண்டு நாட்களில் நிகழ்த்தி எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறி, ஒத்திகையைச் செவ்வையாக நடத்திக் காட்டினர்.

### வானொலி நிலையம்

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் நடைபெறும் வானொலி நிகழ்ச்சிகளை இக் கப்பலில் அஞ்சல் செய்கின்றனர். இக் கப்பலில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அந் நாடுகளின் வானொலி நிலையங்கள் அஞ்சல் செய்யவும் தக்கபடி இக் கப்பலில் வானொலி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

### கப்பலின் பெயர்க் காரணம்

புகழ் பெற்ற கப்பல்களுக்கு அவ்வந்நாட்டுப் பெரியார்களின் பெயரிடுதல் மரபு. அமெரிக்கர் தங்கள் கப்பல் ஒன்றுக்கு ரூஸ்வெல்ட் என்றும், மற்றொன்றுக்கு வாஷிங்டன் என்றும் பெயரிட்டுள்ளனர். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை பெயரால், 1949 பிப்ரவரியில் நம் நாட்டில் ஒரு கப்பல் மிதக்க விடப்பட்டதை நாம் அறிவோம். இங்கிலாந்தின்

மிகப் பெரிய கப்பலாகிய குயின் எலிசபத்துக்கு அந் நாட்டு அரசியின் பெயரே சூட்டப்பட்டிருக்கிறது.

**கப்பல் கம்பெனி**

இக் கப்பல் குனர்டு வயிட் ஸ்டார் என்னும் ஆங்கிலக் கப்பல் கம்பெனியாரைச் சேர்ந்தது. இங்கிலாந்தின் பெரிய கப்பல்களான குயின் மேரி, அக்விட்டேனியா, மாரடேனியா, கரோனியா, பிரிட்டானிக் ஆகியனவும் இப் புகழ் பெற்ற கம்பெனியைச் சேர்ந்தவையே. இவற்றுள் குயின்மேரி 81,235 டன் நிறையும், மற்றக் கப்பல்கள் ஒவ்வொன்றும் 28,000 டன்னுக்கு மேற்பட்ட நிறையும் உடையவை.

**கப்பல் கட்டப்பட்ட வரலாறு**

இக் கப்பல் கட்டப்பட்ட வரலாற்றை அறிவதும் இன்றியமையாததாகும். 7,000 ஒத்திகைகட்குப் பின், 2,000 சன்னல்கள் உள்ள இக் கப்பலின் அமைப்பு முடிவு செய்யப்பட்டது. இதன் மிகப் பெரிய உருவை முன்னிட்டு இக் கப்பலைக் கட்டிய ஜான் பிரவுன் கம்பெனியார் கப்பல் கட்டும் தளமாகிய கிளைடு என்னும் ஆற்றையே அகலப்படுத்தி ஆழமாக்கினார்களாம்.

1936 டிசம்பரில் இக் கப்பல் கட்டும் வேலை தொடங்கிற்று. 1938 செப்டம்பர் 27-ல் மாட்சிமை தங்கிய எலிசபத் அரசியார் இக் கப்பலுக்குத் தம் பெயரிட்டு இதை மிதக்கவிட்டனர்.

**போர்த்தொண்டு**

1939-ல் போர் தொடங்கியதும், இக் கப்பலும் தக்கபடி மாற்றி அமைக்கப்பட்டுப் போரில்தொண்டு

செய்தது. இஃது அந்த ஆறு ஆண்டுகளில் 8,11,000 போர் வீரர்களை மறைவாகப் பல இடங்களுக்குக் கொண்டுபோக 5,00,000 மைல்கள் பிரயாணம் செய்தது. இக் கப்பலை மூழ்கச் செய்யும் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பலின் (U Boat) மாலுமிகளுக்கு 10,00,000 ரூபாய் பரிசு அளிப்பதாக ஹிட்லர் வாக்குறுதி கொடுத்திருந்தாராம்.

போர் முடிந்ததும் மீண்டும் உல்லாசக் கப்பலாகத் திருத்தி அமைக்கப்பட்டு, 1946 முதல் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இக் கப்பல் ஓடிக்கொண்டிருக்கிறது.

### வருத்தமும் மகிழ்ச்சியும்

மிகப் பெரிய உருவமுள்ள கப்பலாயிருந்தமையால், இது செல்லும்போது மெல்லச் சென்றதாகவே எனக்குத் தோன்றிற்று. ஒருவருக்கும் சோர்வு தோன்றவில்லை. ஆறும் நாள் கப்பலை விட்டு இறங்கவேண்டிய நேரம் வந்தபோது, வருத்தப்படாதவர் யாரும் இல்லை. ஆனால், ஹட்சன் ஆற்றின் இரு மருங்குகளிலும் கப்பல்களும் இடையே சுதந்திரச் சிலையும், அவற்றிற்குப் பின்னே வானளாவும் கட்டிடங்களுமுள்ள நியூயார்க் நகரமென்றழைக்கப்படும் இந்திர லோகம் (இயந்திர லோகம்) எதிரே தெரிந்தபோது, அதைப் பார்க்கவும், அமெரிக்காவின் சுதந்திர மண்ணில் மிதிக்கவும் விரும்பாதாரும் இருக்கமுடியுமா ?

### சிறந்த நினைவுச் சின்னம்

குயின் எலிசபத் ஒரு கப்பல் மட்டுமன்று; சூரியன் மறைதல் இல்லாத பேரரசை ஏற்படுத்தியதற்கும், இரு பெரும் போர்களிலும் இங்கிலாந்து முடிவில் வெற்றி

அடைந்ததற்கும் முதற்காரணமான இங்கிலாந்தின் கடற்படை வன்மைக்கு ஒரு சின்னமுமாகும்.

அட்லாண்டிக் பெருங் கடலின் இரு கரைகளிலும் உள்ள ஆங்கிலம் பேசும் நாடுகளாகிய இங்கிலாந்து, அமெரிக்கா இரண்டையும் இணைக்கும் உறவுகளில் குயின் எலிசபத் மிகச் சிறந்த தொன்றாகும். கடலை வெல்ல மக்கள் கொண்டுள்ள உறுதிக்கு எடுத்துக்காட்டாக இக் கப்பல் மிளிர்கின்றது. கப்பல் கட்டுவதில் ஆங்கிலேயரின் மேன்மைக்கும் குயின் எலிசபத் தக்க சான்றாகும். தம் அரச குடும்பத்தாரிடம் ஆங்கிலேய மக்களுக்கு உள்ள உண்மையான அன்புக்கும் இக் கப்பலின் பெயர் ஓர் அடையாளமாக விளங்குகின்றது.

## 5. ஓர் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் ஒரு வாரம்

நியூயார்க்கிலிருந்து 700 மைல் தொலைவில் உள்ள கொலம்பஸ் நகரில் இருக்கும் ஓஹையோ* மாகாணப் பல்கலைக் கழகத்தில், சென்ற நவம்பர் 20 முதல் 27 வரை நான் கழித்த ஒரு வாரத்தில், அங்கே கண்டதையும் கேட்டதையும் சிறிது விளக்கிக் கூற விழைகின்றேன்.

### கொலம்பஸ் நகரை அடைதல்

வியாபார வேலையாகவே, அமெரிக்காவுக்கும் ஏனைய நாடுகட்கும் சென்ற யான், ஒல்லும் வகை ஆங்காங்குள்ள கல்வி நிலையங்களையும் கண்டேன். அமெரிக்காவில் நான் விரிவாகப்பார்த்த பல்கலைக் கழகம் ஓஹையோதான். பிற பல்கலைக் கழகங்களை நீக்கி, இதை நான் தேர்ந்துகொண்டதற்குக் காரணம், வடஆர்க்காடு மாவட்டத்துத் திருப்பத்தூரைச் சேர்ந்த இராசம்மாள் தேவதாஸ் என்ற என் இனிய நண்பரொருவர் அங்கிருந்ததேயாகும். அவர் அப் பல்கலைக் கழகத்தில் இல்வாழ்க்கைக் கலைக் (Home Economics) கல்வி பயின்று வருகின்றார். அவர் சென்னை, மேரி அரசியார் கல்லூரியில் ஆசிரியராயிருந்தபோது 1947-ல் இந்திய அரசினரால் உணவு ஆராய்ச்சிசெய்ய அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டனர். அங்கே, எம். எஸ்சி. பட்டம்பெற்று, டாக்டர் என்னும் உயர்

---

* ஐக்கிய அமெரிக்காவின் 48 மாகாணங்களில் ஓஹையோவும் ஒன்று; அதன் தலைநகரான கொலம்பஸ் 4,00,000 மக்களுள்ள நகரம்.

தரப் பட்டம் பெற இப்போது ஆராய்ச்சிசெய்து கொண்டிருக்கின்றனர். அவர் உணவின் ரகசியம் என்ற தமிழ் நூலை இயற்றியவர்; தமிழ், ஆங்கிலம் ஜெர்மன் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த தேர்ச்சி யுடையவர்; ஓய்வு நேரமெல்லாம் தமிழ்ப் பண் பாட்டை அமெரிக்காவெங்கும் பரப்பிவருகின்றார். அமெரிக்கப் பொருளாதாரக் கழகத்தினர், அண் மையில் அவருக்குச் சில பரிசுகள் வழங்கிச் சிறப் பித்துள்ளனர். சென்ற ஆகஸ்ட் திங்களில் அவர் ஒஹையோ மாகாணச் சட்டசபையில் பேசினார். கொலம்பசில் நான் சந்தித்த யாவரும் அவ்வம்மை யாரின் நுண்மாண்நுழை புலத்தையும், சுறுசுறுப் பையும், எளிமையையும், ஒன்னலரையுந் தம் வய மாக்கும் கவர்ச்சியான பேச்சுத் திறனையும், பிற பல ஆற்றல்களையும் பாராட்டி வியந்த போது, "திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதியாரின் கனவு நன வாகியதை உணர்ந்தேன்.

எங்களுடைய பொது நண்பர் ஒருவர் வாயிலாக, அவ்வம்மையாரை அறியும் பேறு பெற்றேன். அவர்களின் அழைப்புக்கிணங்க, ஒருவாறாக, எனது வேலைகளை முடித்துவிட்டு, ஒரு வாரம் தங் கும் நிலையில், கொலம்பஸ் நகரை அடைந்தேன்.

**வரவேற்பு**

இராசம்மாள் அவர்கள், என்னைத் தம் விருந் தினராக ஏற்றுக்கொள்ளும் அவருடைய நண்ப ரான மிஸ்டர் வொல்லர்மனையும் உடனழைத்துக் கொண்டு ரயில் நிலையத்துக்கு வந்திருந்தார்கள். சிறிது நேரத்தில் வொல்லர்மனின் இல் லத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். பிற

நாட்டவர் வீட்டில் தங்கும் வாய்ப்பு, எனது உலகச் செலவிலேயே இந்நகரில் மட்டுமே கிடைத்தது. வொல்லர்மன் குடும்பத்தார் என்னைத் தம் விருந்தினராகப் பெற்றதைப்பற்றிப் பெருமைப்பட்டார்கள். இராசம்மாள் அவர்களின் மற்ற நண்பர்கட்கும் உவப்பளிப்பதற்காக, ஹகோலா குடும்பத்தாரோடும் ஹௌ குடும்பத்தாரோடும் சிற்சில நாட்கள் தங்கினேன்.

## அமெரிக்கரின் ஒழுக்கம்

கடவுள் வழிபாடு செய்தபின்னரே இக் குடும்பத்தினர் உணவருந்தியது, அமெரிக்காவில் நான் எதிர்பாராததொன்று; மேலும், நான் தங்கிய இக் குடும்பங்களில் ஒன்றிலேனும், ஒருவரும் குடிவகைகளைப் பயன்படுத்தவில்லை. என்னுல் அவர்கள் குடிக்காமலிருக்கிறுர்களே என்று நான் வருத்தப்பட்டபோது, "நாங்கள் மட்டுமன்று; எங்களைப்போலவே, கிறிஸ்துமஸ் தவிர ஏனைய நாட்களில் குடிக்காத பல்லாயிரம் அமெரிக்கர் இருக்கிறுர்கள" என்று அவர்கள் கூறியது, வியத்தற் குரியதாயிருந்தது.

## நான் பாக்கியசாலி

நான் போய்ச் சேர்ந்த நாள் மிகச் சிறப்பான நாள்; அன்றுதான் ஓஹையோ—மிச்சிகன் மாகாணங்களுக்குள் கால்பந்தாட்டப்போட்டி அந்நகரில் நடந்தது. அன்று நான் அங்கு வந்ததைப்பற்றி அன்பர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்; நான் பாக்கியசாலி என்றுங் கூறினர். சில நாட்கள் முன்பே, எனக்காக 10 டாலர் (47½) கொடுத்து ஒரு டிக்கட்டும் வாங்கி இருந்தனர்.

**விளையாட்டுக் காட்சி**

பிற்பகல் 3 மணிக்கு அப் போட்டியைப் பார்க்கச் சென்றோம். அன்றுபோல் மிகுதியான குளிர் என்றும் இல்லை. பல உடைகளை அணிந்து கொண்டு நண்பர்களைத் திருப்தி செய்யவே நான் சென்றேன். பல்கலைக் கழக விளையாட்டிடத்தில் (Stadium) அப் போட்டி நிகழ்ந்தது. ஏறக்குறைய ஒரு நூறாயிரம் மக்கள் கூடியிருந்தனர். வானொலிக்காக அறிவிப்பு நடந்து கொண்டிருந்தது. பத்திரிகைகட்காகவும் உள்ளக் களிப்புக்காகவும் பலர் நிழற்படம் எடுத்தவண்ணமாயிருந்தனர்; தொலைக் காட்சிக் (Television) கம்பெனியார் போட்டிக் காட்சியை அஞ்சல் செய்தனர். திரைப்படக்காரர்களும் சுறுசுறுப்பாயிருந்தனர். அமெரிக்கரின் கால்பந்தாட்டம் 'ரக்பி' எனப்படும். அதற்கும் பிற நாடுகளில் நடக்கும் கால்பந்தாட்டத்துக்கும் பல வேறுபாடுகள் உண்டு. இரண்டு சீனர்கள் ஓர் அமெரிக்கக் கால்பந்தாட்டத்தைப் பார்த்தபின்னர், எந்தக்கட்சி வென்றது என்பதைப்பற்றி விவாதித்ததாக ஓர் அமெரிக்க வேடிக்கைப்பேச்சு இன்றும் வழக்கில் இருக்கிறது.

**கொடி வணக்கம்**

நாட்டுக்கொடியை ஏற்றி நாட்டு வணக்கப் பாடலைப் பாடிய பின்பே போட்டி தொடங்கியது, சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தம் நாட்டுக் கொடிக்கு அமெரிக்கர் மிகவும் வணக்கம் செலுத்துவர்; தெருவில் யாரேனும் ஒருவர் நாட்டுக் கொடியைக் கொண்டுபோனால், அவ்வழியிற் செல்வோர் அனைவரும் தலைகுனிந்து, தொப்பிகளை

எடுத்து வணக்கம் செலுத்துவது, நாம் பின்பற்றக்கூடிய அமெரிக்கரின் சிறந்த பழக்கங்களுள் ஒன்று.

## மாணவிகளின் உணவு விடுதி

போட்டி முடிவுற்றதும், அருகிலிருந்த பேக்கர் ஹாலுக்குச் சென்றேன். (மாணவிகளின் உணவு விடுதி இருக்கும் அம்மண்டபத்தில், ஆண்டுக்கு நான்கு நாட்களில்தான் ஆடவர் உள்ளே செல்லலாம். போட்டியை முன்னிட்டு அந்நாளும் இந்நாட்களில் ஒன்றாயிருந்தது) அங்கே ஒவ்வொரு மாணவிக்கும் டெலிபோன் இருந்தது; சுகாதார வசதிகள் சிறந்து விளங்கின; நீராடுவதற்கான அமைப்புக்களையுங் கருவிகளையுங்கண்டு பொறாமைப் பட்டேன். அமெரிக்கருக்கு நீராடும் அறையே சுவர்க்க லோகம். அவர்கள் நீராடும் அறையில்தான் குடியிருப்பர் என்று விளையாட்டாகச் சொல்லுவதுண்டு. வீடுகட்டும் செலவில் ஒரு பெரும்பகுதியை நீராடும் அறைக்காகவே அமெரிக்கர் செலவிடுவர். பல வீடுகளில், வாழ்பவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், நீராடும் அறைகளின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கும்.


## கடவுள் வழிபாடு

மறுநாள் ஞாயிற்றுக் கிழமையாக இருந்தால், நான் காம்பஸ்*க்குச் செல்லவில்லை. என்னை விருந்தினனாக ஏற்றிருந்த குடும்பத்தாருடன் நானும் கிறித்தவக் கோவிலுக்குச் சென்றேன். குழந்தைகட்கான விவிலிய நூல் (Bible) வகுப்பில் ஆசிரியரின் வேண்டுகோட்கிணங்க, 6, 7

---

*பல்கலைக் கழகமும் அதைச் சேர்ந்த எல்லாக் கட்டிடங்களும் உள்ள இடம் என்னும் பொருளில் காம்பஸ் என்ற சொல் அமெரிக்காவில் வழங்குகின்றது.

ஆண்டுச் சிறுவருக்கு நான் சில சொற்கள் கூறினேன். அங்கிருந்து வயதுவந்த இளைஞர்கட்கான வழிபாட்டு மண்டபத்துக்குச் சென்றேன். மிஸ்டர் வொல்லர்மனின் மகன் ப்ரட்டி என்னை அறிமுகப் படுத்தியவுடன், அங்கும் ஒரு குட்டிச் சொற்பொழிவாற்றினேன். அதன்பின்னர் முதியோருக்கான வழிபாட்டு மண்டபத்துக்குச் சென்றேன். காந்தியடிகளிடம் மிகவும் அன்புடைய ரெவரண்டு வொல்ட்




ஆகாய விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட ஓஹையோ பல்கலைக் கழகக் காட்சி

என்ற மதகுரு. "காந்தியடிகளின் நாட்டிலிருந்து வந்திருப்பவர்" என்று என்னைப்பற்றித் தம் உரையிற் குறிப்பிட்டார். வழிபாடு முடிந்தவுடன், மிகப் பலர் என்னிடம்வந்து என் நலத்தை விசாரித்தனர்.

நாகரிகமாய் உண்ணவும் உடுக்கவும் உறங்கவும் ஆடவும் ஓடவும் பாடவும் புலனுரா இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கவும், இவற்றிற்கெல்லாம் இன்றியமையாத செல்வத்தை மேன் மேலும் வளர்க்கவும் பொழுது போதாத அமெரிக்கருக்குக் கண்ணுக்கெட்டாத ஒரு கடவுளைப் பற்றிச் சிந்திக்கவும் நேரமிருக்கிறது என்பதை அன்றுதான் நான் அறிந்தேன்.

**ஒஹையோ பல்கலைக் கழகம்**

திங்கட் கிழமையன்று, ரோட்டரி கிளப்பில் நடந்த பகலுணவுக் (Lunch) கூட்டத்தில் சர்வ தேசவிருந்தினன் (International Guest of Honour) ஆக யான் சிறப்பிக்கப்பட்ட பின், காம்பஸ் பார்வையை அன்று தொடங்கினேன்.



வைத்தியக் கல்லூரியில் ஒரு நிகழ்ச்சி

ஒஹையோ பல்கலைக் கழகம் 1400 ஏக்கர் பரப்பில் 68 கட்டிடங்களுடன், ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் புகழ் பெற்ற பல பேறிஞர்கள் உள்பட 2600

ஆசிரியர்களுடனும், 5000 மாணவிகளுட்பட 25,000 மாணவர்களுடனும், 13 கோடி ரூபாய் மூலதனத்தோடும் விளங்குகின்றது. இது அமெரிக்காவில் இப்போது உள்ள தலை சிறந்த பல்கலைக் கழகங்களுள் ஒன்ருகும். பல் வைத்தியம், மிருக வைத்தியம், சட்டக் கல்வி, பொறியியற்கலை, விமானக் கல்வி, வானிலை ஆராய்ச்சிக் கல்வி, பத்திரிகைக் கல்வி போன்ற 70 பிரிவுகள் இங்கு உண்டு. ஓரளவு



மாணவர் பொறியியற் கலை பயிலும் காட்சி

ஆராய்ச்சி செய்தபின்புதான் பட்டங்கள் வழங்கப்படும். ஏனைய அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள்

போலவே இங்கேயும் போரில் தொண்டாற்றிய பல்லாயிரவர் மாணவராயுள்ளனர்.

### துணைத் தலைவர் சந்திப்பு

காம்பசில், என் முதல் அலுவல், பல்கலைக் கழகத் துணைத் தலைவராகிய டாக்டர் ப்ளாண்டு ஸ்ட்ராட்லியைச் சந்தித்ததேயாகும். அவர் இந்தியாவைப் பற்றியும் இந்தியாவிலுள்ள கல்வி முறையைப் பற்றியும் என்னிடம் விரிவாகக் கேட்டார்; தம் பல்கலைக் கழகத்தைப் பற்றிய விவரங்களையும் விளக்கிக் கூறினார் ; இல்வாழ்க்கைக் கலை, கால் நடைப் பாதுகாப்பு, விவசாயப் பொறியியற் கலை போன்ற துறைகளில்தான் ஒஹையோ பல்கலைக் கழகம் பெரிதும் முன்னேறியிருப்பதாகக் கூறினார். தாம் ஒரு விவசாயி என்றும், அன்று காலையிற் கூட வயலில் வேலை செய்ததாகவும் அவர் கூறியது, எனக்குப் பெரு வியப்பளித்தது. தகுதியுள்ள இந்திய இளைஞர்கள் தம் பல்கலைக்கழகத்துக்கு வர வேண்டுமென்றும், அவர்கட்கு எல்லா உதவிகளும் அளிப்பதாகவும் அவர் கூறினார். கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து வந்த மாணவரிற் பலருக்கு ஆங்கில மொழிப்பயிற்சி போதிய அளவுக்கு இல்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார். அவரோடு நான் பேசிக் கொண்டிருந்தபோது, பல்கலைக்கழகப் புகைப்படப் பகுதியினர் படமெடுத்தனர்; எங்கள் சந்திப்பு மறுநாள் பத்திரிகையில் வெளியாயிற்று.

## பாலர் பள்ளி
## (Nursery School)*



பாலர் பள்ளியில் பயிலும் ஒரு சிறுமி

செவ்வாய்க்கிழமை யன்று, பாலர் பள்ளிக்கூடத்துக்குச் சென்றேன். இதுவும் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதி. இங்கே, பல்கலைக்கழக மாணவிகள் இரண்டு ஆண்டுக் குழந்தைகட்கு அவர்கள் விரும்பியபோது படங்கள் காட்டிக் கல்வி கற்பித்தனர்.

### இல்வாழ்க்கைக் கலைப் பகுதி

எனது அடுத்த அலுவல், இல்வாழ்க்கைக் கலைப்பகுதியை யான் பார்வையிட்டது. சலவையாகி வந்துள்ள துணிகளைச் சரிபார்க்கும் கருவிகளும், பலவகை உணவுகளைச் சோதனை செய்யும் பொறிகளும் இங்கே இருந்தன.

### பொருளாதாரப் பேராசிரியர் சந்திப்பு


பொருளாதாரப் பேராசிரியர்களுடன் அன்று பகலுணவு அருந்தினேன். செவ்வாய்தோறும் அவர்கள் சந்தித்துச் சொற்பொழிவாற்றுதல் மரபாம். நான் அவர்கள் கூட்டத்தில் பேசிப் பெருமிதம் அடைந்தேன். கூட்டமுடிவில், பல பேராசிரியர்கள் தத்தம் அறைகட்கு என்னை அழைத்தனர். பல வினாக்களைப் பற்றித் தனித்

* நர்சரி ஸ்கூல் - பால்மணம் மாறாச் சிறுவர் சிறுமியருக்கான பள்ளி; தாய்மார்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் போது, அவர்களுடைய குழந்தைகளைப் பேணுவது இக்கல்லூரியின் பொறுப்பு.

தனியே அவர்களோடு விவாதித்தேன். சிலர் தாம் இயற்றிய நூல்களை அன்பளிப்பாய்த் தந்தனர்; அமெரிக்கப் பொருளாதாரத்தை நன்கு அறிய எனக்கு உதவக்கூடிய நூல்களின் பட்டியலும் தந்தனர்.

## வானொலிக் கல்வித்துறைத் தலைவர் சந்திப்பு

பின்னர் பல்கலைக்கழக வானொலி நிலையத்தில், வானொலிக் கல்வித்துறைத் தலைவர் டாக்டர் கீத் டைலர் வானொலி நிகழ்ச்சியில் என்னைப் பேட்டி கண்டார். இந்தியாவைப் பற்றிய பல வினாக்களுக்கு



வானொலி நிலையம்

விடை கூறினேன். இந்தியா அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் ஏற்றுமதிகளும் ஒன்றுக்கொன்று போட்டியில்லாதவையா யிருப்பதால், பொருளாதாரத் துறையில் இந் நாடுகள் ஒத்துழைப்பது எளிதென்பதையும், இந்தியா மீது அமெரிக்கர் நல்லெண்ணமுடையவரா யிருப்பதையும், டாக்டர் டைலர் பேட்டியின் இறுதியில் குறிப்பிட்டார்.


## நூல் நிலையம்

நூல் நிலையத்திலும் சிறிதுநேரம் செலவிட்டேன். அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் நூல்நிலையம்மிகச்

சிறப்புடையது. மிகுதியான மாணவர்கள் தம் நேரத்தை செயற் காட்சிச் சாலையிற் (Laboratory) செலவிடாவிட்டால், நூல் நிலையத்திலேயே கழிப்பர். இரவு 11 மணி வரையில் பல நூல் நிலையங்கள் திறந்திருக்கும். ஆராய்ச்சியாளருக்குத் தனி நூல் நிலையங்களும் பொழுதுபோக்குப் படிப்புக்குத் தனி நூல்நிலையங்களும் பல அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் உள்ளன. ஓஹையோ பல்கலைக் கழக நூல் நிலையத்தில் 8,00,000 நூல்கள் இருக்கின்றன. ஆண்டுதோறும் இந் நூல் நிலையத்திற்கு 5,00,000 ரூபாய் செலவிடுகின்றனர்.

## திரைப்படக் காட்சி

பல்கலைக் கழகத் திரைப்படக் காட்சிச் சாலைக்கும் சென்றேன். இங்கே யாவரும் பணம் கொடுக்காமல் விரும்பியபோதெல்லாம் திரைப் படம் பார்க்கலாம். தென் அமெரிக்கப் பிரயாணம்,




திரைப்படக் காட்சிச் சாலை

அமெரிக்க வாணிகம், ஐக்கிய நாடுகள் சபை என்ற மூன்று படங்களை ஒரு மணி நேரத்திற்பார்த்தேன்.

### மாணவர்களின் உணவு விடுதி

அன்றிரவு எனக்கு ஒரு ப்ரடர்னிடியில் (Fraternity=மாணவர்கள் சகோதரத்துவ சபை) விருந்து நடந்தது. அப் பல்கலைக் கழகத்தில் மட்டும் இது போன்ற ஆண் மக்கட்குரிய மாணவர் விடுதிகள் 75 உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனிக் கட்டிடம் உண்டு. நான் விருந்துண்ட ப்ரடர்னிடியில், 16 மேல் வகுப்பு மாணவரும், 16 கீழ் வகுப்பு மாண



மாணவர் உணவு விடுதி

வரும் ஆக 32 மாணவர்கள் இருந்தனர். ஒவ்வொரு மேல் வகுப்பு மாணவருக்கும், தாம் விரும்பும் கீழ் வகுப்பு மாணவரொருவரைத் தம் அறையில் தங்கியிருக்க அனுமதிக்கும் உரிமை உண்டாம்.

அந்த ப்ரடர்னிடிகளில், இன்றியமையாத சமையல் வேலைகட்கு மட்டுமே சம்பளங் கொடுத்து வேலையாள் நியமிப்பர்; உணவு படைக்கும் வேலையையும் பாத்திரங் கழுவும் வேலையையும் ப்ரடர்னிடியின் உறுப்பினரே, தமக்குள் கால வரையறை செய்துகொண்டு, மாறிமாறிச் செய்வர். வறுமை மிகுந்துள்ள நம் நாட்டில், இவை போன்ற சிக்கன முறைகளைக் கையாளவேண்டி

யதன் இன்றியமையாமையை எவ்வளவு வற்புறுத்திக் கூறினாலும் மிகையாகாது.

எல்லா ப்ரடர்னிடிகளும் அவற்றுக்குத் தேவையான பொருள்களைத் தொகுத்து வாங்கிக்கொள்ளுகின்றன. அவை வாங்கும் உணவுப் பொருள்களைப் பல்கலைக் கழக இல்வாழ்க்கைக் கலைப் பகுதியினர் சோதிக்கின்றனராம். அங்கே உணவாக்குவதற்குப் பயன்படும் நிலக்கரியின் தன்மையைப் பல்கலைக் கழக ரசாயன நிபுணர் சரி பார்க்கிறாராம்.

ப்ரடர்னிடிகளில் ஒவ்வொரு நேர உணவுக்கும் குறித்த நேரம் உண்டு. மணி அடித்ததும், உறுப்பினர் தத்தமக்குரிய இடங்களில் அமர வேண்டும். நம் நாட்டு உணவு விடுதிகளிற்போலக் குறித்த நேரத்திலிருந்து $1\frac{1}{2}$ மணி நேரம் வரை விரும்பியபோது உணவருந்தச் செல்லுவது அங்கே இயலாது. உணவின் தொடக்கத்திலும் இறுதியிலும் உறுப்பினர் அனைவரும் சேர்ந்து இசை பாடுவர்.

## பிற அலுவல்கள்

அன்றிரவு உணவுக்குப் பின்னர்ப் பல்கலைக் கழகச் சமய ஆலோசகரும் இந்தியாவின்பால் மிக்க பற்றுடையவருமான **ரெவரண்டு டாக்டர் மக்ளீன்** என்பாரும் நானும் சொற்பெருக்குகள் ஆற்றினோம் அடுத்த அலுவலுக்கு நேரம் ஆகிவிடவே, இல்வாழ்க்கைக் கலைப் பகுதித் தலைவி **டாக்டர் மிஸ் பிரானிகன்** அவர்களுடைய இல்லத்துக்கு டாக்டர் மக்ளீனும் நானும் விரைந்தோம். அங்கே எல்லோருக்கும் தமிழ் நாட்டுச் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன.

புதன்கிழமையன்று, உடற்பயிற்சிக்கலை பற்றிய சொற்பொழிவு நடந்த வகுப்பில் நானும் அமர்ந்தேன். ஆசிரியரும் மாணவரும் மிக இனிமையாகப் பழகியதும், மனமுவந்து ஊக்கமாக மாணவர் பாடங்கேட்டதும், ஆசிரியர் பேச்சின் நகைச்சுவையும் நான் மாணவனாயிருந்தபோது நிகழாதவைகளாகவே இருந்தன.

### பார்ட்டல் இன்ஸ்டிடியூட்

மற்ற மாணவர்களெல்லாம் அடுத்த வகுப்புக்குச் செல்ல, அப்போதுமட்டும் மாணவனாகிய யான், பார்ட்டல் இன்ஸ்டிடியூட்டுக்குப் புறப்பட்டேன். புகைப்பட ஆராய்ச்சி, மின்சாரக் கருவிகளைச் சரிபார்க்கும் வேலை, நெருப்பைத்தரும் பொருள்கள் பற்றிய ஆராய்ச்சி (Fuel Research), வாயுபரிசோதனை (Gas testing), எக்ஸ் கதிர்கள் நிறமாலை (X-ray Spectrum), உலோகங்கள் ஆராய்ச்சி (Metallurgy), தாதுப்பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சி (Mineral Research), தட்பவெப்ப நிலையைச் சோதிப்பது ஆகியவை இந்த இடத்தில் நடக்கின்றன. தனிப்பட்டவர்களின் பொருளுதவியால் இது அமைந்துள்ளது. இக்கழகத்தினர் கட்டணம் வாங்கிக்கொண்டு, தொழிற்சாலைகட்கும் வியாபாரிகட்கும் தொண்டு புரிகின்றனர்.

### டாக்டர் கெர்ச்சரின் பண்பாடு

எகிப்தில், கெய்ரோ பல்கலைக்கழகத்தில் ஆலோசகராயிருந்த டாக்டர் கெர்ச்சருடன் அன்றிரவு விருந்துண்டேன். அங்கே குழுமியிருந்த அமெரிக்க நண்பர்கள் நம் உணவை, நமது முறைப்படியே தரையில் அமர்ந்து கையாலேயே உட்கொள்ள நேரிட்டது அவர்கட்குப்

புதியதாயினும், சுவையான அனுபவமாக இருந்தது. பேராசிரியர் கெர்ச்சர் தம் மாணவரும் நானும் இருந்த இடத்துக்குத் தம் காரைத் தாமே ஓட்டிக் கொண்டுவந்து எங்களை அவர் இல்லத்துக்கு அழைத்துச் சென்றதும், தம் வீட்டில் வண்ணை வேலைகளைத் தாமே செய்ததாகச் சொன்னதும், அன்று விருந்தில் நண்பர்கட்கும் மாணவர்கட்கும் பேராசிரியத் தோழர்கட்கும் உணவு படைக்கும் வேலையையும் தட்டுக் கழுவும் வேலையையும் தாமே செய்ததும், தம் சமையலறைக்குள் என்னை அழைத்துச் சென்று மின்சார அடுப்பை எனக்கு இயக்கிக் காட்டியதும், தம் மாமியாரை எனக்கு அறிமுகப் படுத்தியதும் நான் நம்பமுடியாத காட்சிகளாக இருந்தன.

## வந்தனங்கூறும் ஆண்டுவிழா

வியாழக்கிழமை, வந்தனங்கூறும் நாள் (Thanksgiving day). அதாவது, ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்கு வந்து நூறுயிரக்கணக்கானவர் குடியேறியதைக் குறிக்கும் ஆண்டுவிழா நாள்; செல்வத்திற் சிறந்து விளங்கும் அமெரிக்கப் பூமியிற் குடியேறியதற்காக அமெரிக்கர்கள் அனைவரும் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தும் நாள். அதனை உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செலுத்தும் நம் பொங்கலைப்போன்ற விழா எனக் கூறலாம். அது அமெரிக்கரின் நாட்டுவணக்கப் பெருநாள். ஆண்டுதோறும் நவம்பர்த் திங்களில் நாலாவது வியாழக்கிழமையில் அது நிகழும். நாடெங்கும் அன்று விடுமுறை நாள். அமெரிக்கருக்கு மிகச் சிறப்பான நாட்களில் அது ஒன்று. குடும்பத்து உறுப்பினர் அனைவரும் ஒருங்கேகூடி மகிழும் அந்நாள் 1621-ஆம் ஆண்டு

முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்நாளில் கிறித்தவ ஆலயங்களில் சிறப்பான வழிபாடுகள் நிகழ்கின்றன. அந்நாளில், அமெரிக்கர் அந்நாட்டு உணவாகிய வான்கோழி இறைச்சியை (14 பவுண்டு எடையுள்ள இது அமெரிக்க நாட்டின் சிறப்பான பறவை) நாம் பொங்கலன்று சர்க்கரைப் பொங்கல் உண்பதுபோல் உண்பர்.

**விவசாயப் பண்ணை**

வெள்ளிக்கிழமையன்று, 1,000 ஏக்கர் நிலப்பரப்பும் இக்காலத்துக்குரிய கட்டிடங்களுமுள்ள பல்கலைக் கழகத்து விவசாயப் பண்ணையைப் பார்வையிட்டேன். அது மிகச் சுகாதாரமான நிலையில் பேணப் பட்டு வருகிறது. அங்கே தேனீக்கூடுகளையும் கோழிப்பண்ணைகளையும், மாட்டுப்பண்ணைகளையும், காய்கறிகள், உப உணவுப்பொருள்கள், பூ ஆகியவைகளின் உற்பத்தி பற்றிய கழகத்தையும் (Horticulture Institute) பார்த்தேன். தாவரங்களும் விலங்குகளும் பற்றிய ஆராய்ச்சிக்காக 70 மைல் நீளமுள்ள ஏரியும் அங்கே இருக்கிறது.

**விமான நிலையம் முதலியன**

பல்கலைக் கழகத்து ஆகாயவிமான நிலையம், விவசாயப்பண்ணைக்கு அணித்தாயுள்ளது. அதன் நிலப்பரப்பு 400 ஏக்கர். ஓஹையோவில்தான் ஆகாயவிமானம் கண்டுபிடிக்கப்பட்டதென்பதையும் நாம் நினைவுபடுத்திக்கொள்ளுதல் நலம். பல்கலைக்கழக ஆய்வுக்கூடத்தையும் (Observatory), பொருட்காட்சிச் சாலையையும் பார்வையிட்டபின், பாகல்டி கிளப் (Faculty Club) பில் ஒய். எம். சி. ஏ. நண்பர்கள் சிலருடன் பகலுணவு அருந்தினேன்.

### நம் நாட்டு உணவு

அன்றிரவு டாக்டர் மக்ளீன் வீட்டில், பல நண்பர்களுடன் மீண்டும் நம் நாட்டு உணவு அருந்தும் பேறு கிடைத்தது. நம் உணவின் சுவையை யாவரும் பாராட்டினர்; காரம் அதிகமா யிருப்பதாயும், எண்ணெய் சேர்ப்பதால் சீரணிப்பதில்லை என்றும் நம் உணவைப்பற்றி இருகுறைகள் வெளிநாட்டார் கூறுவர்.

### பிரிவுபசாரம்

சனிக்கிழமையன்று, ஹௌ குடும்பத்தார் கொலம்பஸ் நகரம் முழுவதையும் எனக்குக் காட்டினர். மீண்டும் தம் இல்லத்துக்கு நான் வரும் நன்னாளை எதிர்பார்ப்பதாகக் கூறிய அவர்களின் வேண்டுகோளுக்கு இசைவு தெரிவித்து, அவர்களில்லத்தி லிருந்து விடைபெற்று, ரயிலுக்குச் செல்லும் வழியில் தத்துவப் பேராசிரியர் ஏவ் என்பாரின் இல்லத்துக்கு வந்தோம். அங்கே, எனக்கு ஒரு சாய் ஓ நாரோ* நடந்தது. அன்று விருந்துண்ட முப்பதின்மரிற் பெரும்பாலோர் இந்திய மாணவரே. தொழிற்சாலைகளின் ஊதியத்தில் தொழிலாளருக்குப் பங்குகொடுப்பதுபற்றி நடந்த விவாதத்தில், நானும் சில வார்த்தைகள் கூறிவிட்டு, வெளிநாடுகளிற் கல்விபயிலும் இந்திய மாணவரிடமிருந்து இந்தியா பெரிதும் எதிர்பார்ப்பதையும், அவர்கள் இந்தியாவின் நற்பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்பதையும் எடுத்துச் சொன்னேன். தாம் அனைவரும் நன்ருக நடத்தப் படுவதாகவும், பிறருடன் எளிமையாகப் பழகும்

---

*சாய் ஓ நாரோ — என்பதற்கு ஜப்பானிய மொழியில், பிரிவுபசாரவிருந்து என்பது பொருள்.

இயல்புடையவர்களுக்கு அமெரிக்க மக்கள் தனித் தனியே பற்பல உதவிகள் செய்து வருவதாகவும் அம் மாணவர்கள் வாயிலாக அறிந்து மகிழ்ந்தேன்.

## முடிவுரை

சில நிமிடங்களில் ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தேன்; என் வாழ்நாளிலேயே மிகவும் சுறு சுறுப்பான வாரமும் முடிந்துவிட்டது. நான் நியூ யார்க்கில் விட்டுவந்த வேலைகளைத் தொடர்ந்து செய்ய அந்நகருக்குத் திரும்பலானேன். ஆனாலும், அப் பல்கலைக் கழகமும், அங்கே எனக்குக் கிடைத்த புதிய நண்பர் குழாமும் இன்னும் என் மனத்தைவிட்டு அகலவில்லை.

பல கூட்டங்களைப்பற்றி யான் ஈண்டு விரித்துக் கூறி யிருப்பது வியப்பாயிருக்கலாம். அமெரிக்கர் களைப் போலக் கூட்டப்பித்து உடையவர் உலகில் வேறெங்கும் இல்லை. எந்தச் சிறு செயலுக்கும் ஒரு கூட்டம் நடத்துவதும், ஒரு செயல்குழு அமைப்ப தும் அமெரிக்கரின் வியத்தகு பண்புகளுள் ஒன்று.

## 6. ஹோனலூலூ நினைவுகள்

ஹோனலூலூவின் துறைமுகமான பேர்ல் ஹார்பரில் குண்டு வீசி, 1941 டிசம்பர் 7-ல் ஜப்பான் போர் தொடுத்தது. இந்நிகழ்ச்சியின் ஏழாம் ஆண்டு நிறைவு நாளன்று அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் வழியில் ஹாவாய்த் தீவுகளின் தலைநகரான ஹோனலூலூவில் தங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையிலுள்ள சான் பிரான்ஸிஸ்கோ நகரத்திலிருந்து 2400 மைல்கள் மேற்கேயுள்ள எரிமலையால் உண்டான தீவுக் கூட்டங்கட்கு ஹாவாய்த் தீவுகள் என்று பெயர். இவற்றுள், முதன்மையான தீவின் பெயரும் ஹாவாய் என்பதே யாகும். ஹாவாய் பசிபிக் பெருங்கடலின் நடுவிடத்தில் இருப்பதால், இப் பெருங்கடலைப்பற்றிச் சிறிது அறிந்துகொள்ளுவோம்.

### பசிபிக் பெருங்கடல்

உருவிலும் பரப்பிலும் ஏழு பெருங்கடல்களிலும் பெரியது பசிபிக் பெருங்கடலேயாகும். அது பிற பெருங்கடல்களிலுள்ள எல்லாத் தீவுகளைக் காட்டிலும் மிகுதியான எண்ணிக்கையுள்ள தீவுகளை உடையது. அத்தீவுகளில் குச்சிபோல் நிற்கும் தலைமயிருடைய பிசியர்கள் (Fiji), சப்பட்டை மூக்குடைய நியூ கலிடோனியர்கள் முதலாய பலதிறப்பட்ட மக்கள் வாழ்கின்றனர். குடியேற்ற நாடுகள், பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள்

(Mandated Territories), செட்டில்மெண்டுகள் (Settlements), இருநாடுகளால் பொதுவாக ஆளப்படும் பூமி என்ற பல வகையான ஆட்சிமுறைகளையுடைய காட்சிச் சாலையாய் அமைந்திருப்பதும் அந்தப் பசிபிக்கேயாகும். பவளமலைகளும், 8000 அடி வரை உயரமுள்ள நிலப்பரப்பும், அதிகமழையும், எரிமலைகளும் அங்கே உண்டு. நில நடுக்கோட்டின் (Equator) அருகில் பசிபிக்கின் அகலம் 10,000 மைல் உள்ளது. இன்று உலகின் இரு பெரும் வல்லரசுகளாயுள்ள அமெரிக்காவையும் ரஷ்யாவையும் இணைப்பது (அல்லது பிரிப்பது)ம் பசிபிக்கேயாகும்.

சர்வதேச நாள் மாறும் எல்லையும் Inter-national Date Line) பசிபிக்கிலேயே இருக்கும்போது, பசிபிக்குக்கு ஈடான பெருங்கடல் எவ்விதம் இருக்க முடியும்? 180 டிகிரி நெடுக்குத் தொலை (Longitude)க்கு இரு புறமும் 24 மணி நேர வேறுபாடு உண்டு. ஞாயிற்றுக்கிழமை இரவு கிழக்கிலிருந்து மேற்கே செல்லுபவர் மறுநாள் காலையில் எழுந்தால், மீண்டும் ஞாயிற்றுக்கிழமை உதயமாகும். அதே நேரத்தில் எதிர்வரிசையில் வருபவர் திங்கட்கிழமை காலையில் துயில் எழுவதற்குப் பதிலாகச் செவ்வாய்க்கிழமை காலையில் துயில் எழுவர்!

## ஹோனலூலுவின் பெயர்கள்

இத்தகைய பசிபிக்கில், தனது பூகோள அமைப்பால் முதன்மை பெற்றுப் போர்க் காலத்தில் தலைமையிடமாகவும், சமாதான காலத்தில் ஆஸ்திரேலியா, ஆசியா, அமெரிக்கா ஆகிய மூன்று கண்டங்களையும் இணைக்கும் கப்பல்கள், ஆகாய விமானங்கள் இவற்றின் போக்குவரவுக்கு இன்றியமையாத இடமாகவும்

இருப்பது ஹோனலூலூவாகும். மேலும், பசிபிக் தீவுகளிலேயே, ஹாவாய்தான் மிகவும் அழகானது. ஆகவே, ஹாவாயின் தலைநகருக்கு, பசிபிக்கின் முச்சந்தி (Cross - roads of the Pacific), பசிபிக்கின் பூலோக சுவர்க்கம் (Paradise of the Pacific) என்னும் பெயர்கள் வழங்குகின்றன.

## அழகு நிறைந்த பூமி

அருமையான சோலைகளும், ஆயிரத்துக்கு மேற்பட்ட வகைவகையான பூக்களும் அற்புதமான தோட்டங்களும் உள்ள ஹோனலூலூ எழில் மிக்க காட்சிகள் கொண்டது. தேங்காயும் தென்னந் தோப்பும் தெருவெல்லாம் உள்ளன. உல்லாசப் பிரயாணம் செய்பவர்களின் பொழுதுபோக்குக்கு இஃது ஏற்ற இடமாகும்; புகைப்படம் எடுப்பவர் கட்கு ஓய்வே இல்லாமற் செய்யும் இடமும் இதுவே யாகும். ஆண்டுதோறும் 30,000 அமெரிக்கர்கள் இத்தீவுக்கு உல்லாசப் பயணமாக வருகின்றனர். உயரமான மலைகளும், பசுமையான சமவெளிகளு முள்ள தீவு ஓய்வுக்கும் அமைதிக்கும் தகுந்த இட மாகும். சில பகுதிகள், தோற்றத்தில் ஈழநாட்டைப் போலவே இருக்கின்றன.

## உலகிலேயே அழகிய கடற்கரை

ஹோனலூலூவின் நான்கு மைல் நீளமுள்ள கடற்கரைக்கு வைக்கிக்கி பீச் என்று பெயர். உலகி லேயே சிறந்த கடற்கரை இதுவேயாகும். அங்கு நீராடியவர்களைக் கண்டவுடன், எனக்கு வியப்பும் நீராட வேண்டும் என்னும் அவாவும் உண்டாயின. வைக்கிக்கி கடற்கரையைப் பற்றிய இதிகாசங்களும் புராணங்களும் பாடல்

களும் எண்ணிறந்தலவ. இவை ஹோனலூலூவில் தலைமுறை தலைமுறையாய் வழங்கி வருகின்றன.

## நாட்டு வளம்

எரிமலைச் சாம்பல்களால் பண்பட்ட ஹாவாய்ப் பூமி நல்ல வளமுடையது. கரும்பும் அன்னாசியும் வளமாக இங்கே பயிராகின்றன. இத்தீவின் மிகுதியான ஏற்றுமதிகள் சர்க்கரை, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, அன்னாசிப்பழம், வாழைப்பழம் என்பவையாம். இவை நீங்கலாக, வெளியுலகிலிருந்து பொழுதுபோக்க வருபவர்களாலும், மீன் பிடித்தலாலும் இங்கு வாழும் மக்களுக்கு நல்ல வருவாய் உண்டு.

## கால நிலை

ஹாவாயின் காலநிலை விரைவில் மாறும் தன்மை உடையது. வெப்பம் மிகுதியாய் இருக்கும். ஆனால், சில விநாடிகளிலே மழை கொட்டிவிடும். சராசரி வெய்யில் 74 டிகிரி எனின், உடல் நலத்துக்காகவே இங்கே பல்லாயிரவர் வருவது இயல்புதானே !

## மக்கள்

ஹாவாய்த் தீவுகளில் வாழும் மக்களின் தொகை ஐந்து லட்சம்; அஃதாவது, மதுரை நகரைப் போன்றது. சிங்கப்பூரைப் போலவே பல நாட்டு மக்களைக் கொண்ட நாடு இது. மக்களில் மூன்றிலொரு பங்கு ஜப்பானியராவர். மலேயா நாட்டில் இப்போது சீனரின் குடியேற்றம் தடை செய்யப்பட்டிருப்பதைப் போலவே, ஹாவாயில் இப்போது ஜப்பானியர் புதிதாகக் குடியேற அனுமதிக்கப்படுவதில்லை. மலேயாவில் மலாய்க்காரர்களைப்போல, ஹாவாயர்களும் தங்கள் நாட்டில்

தாங்களே சிறுபான்மையோராகி விட்டனர்- இப்போது ஹாவாயர்கள் முப்பதாயிரம் பேர் இருக்கக் கூடும். சீனர், பிலிப்பைன்காரர், போர்ச்சுகீசியர் கொரியர் ஆகியோர் இங்கு வாழும் ஏனைய மக்களாவர். நாலைந்து இந்தியர்களும் இங்கே இருக்கின்றனர். இவர்களில் ஒருவரான கோபிந்தராம் வாட்மல் என்பவர் மிகுந்த செல்வாக்குடைய வணிகர். இத்தீவில் பெரும்பொருள் ஈட்டி ஓர் அமெரிக்கப் பெண்ணை மணந்து சில ஆண்டுகட்குமுன் இந்தியரின் கல்விக்குப் பெருங்கொடைகள் அளித்துள்ளவர் இவர். சுவீடனைப் போலவே ஹாவாயிலும் கலப்பு மணம் மிகுதியாய் நடைபெறுகிறது.

**ஹாவாய் மொழி**

ஹாவாய் மொழி மிகவும் வியப்பான மொழியாகும். அம்மொழியிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை பன்னிரண்டேயாம். ஒரு சொல்லையே பெயர்ச்சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் பயன்படுத்தலாம். இது மிக இனிமையான மொழி. இங்கே சில சொற்களைக் காண்போம் :—

| | | |
|---|---|---|
| அலோஹா | .... | வணக்கம் |
| வாஹினி | .... | பெண் |
| ஹூலாஹூலா | .... | நடனம் |
| மலாமோபோனு | .... | கவனமாய் இரு |
| விக்கி விக்கி | .... | விரைவாக |
| ஹலேபுலே | .... | கோவில் |

**பழக்க வழக்கங்கள்**

ஏழாம் வகுப்புக்கு வந்தபின்புதான் குழந்தைகள் செருப்பு அணிவது இந்நாட்டுவழக்கம். ஹாவாய்

நேரம் என்றால் குறிப்பிட்ட நேரத்தைக் காட்டிலும் ஒரு மணி நேரம் தாழ்த்துத்தான் நிகழ்ச்சிகள் தொடங்கப்படும் என்று பொருள்படும். பேபி லூ அவாவ் என்ற ஒரு விழா முதற்குழந்தைக்கு நடத்தப் படுகிறது. இது நாட்டுக்கோட்டை நகரத்தாரின் புதுமை விழாவை ஒத்தது. இவ்விழாவில், விருந்தினர் பத்து ரூபாய் மொய்ப்பணம் கொடுக்க வேண்டும். மற்றக் காலங்களில், கத்தி, கரண்டி, குத்துமுள் (Fork) போன்ற கருவிகளின் உதவியால் உணவு அருந்தினாலும் பேபிலூஅவாவில் மட்டும் கையால்தான் உணவருந்த வேண்டும்.

இந்துக்களைப் போலவே ஹாவாயர்களும் பல கடவுளரை வழிபடுதலில் நம்பிக்கை உடையவர்கள்; எரிமலைக்கடவுளும் இவர்கள் வணங்கும் தெய்வங் களுள் ஒன்றாகும். அவர்கள் இயற்கையையும் தெய்வ மாகப் போற்றுவர்; சூரிய வணக்கமும் செய்வர்.

ஹாவாயர்கள் பழங்கால மூடநம்பிக்கைகளும் பழைய பழக்க வழக்கங்களும் நிரம்பஉடையவர்கள். 'லெய்' என்ற பூமாலைகளை ஹாவாயர்கள் வெளி நாட்டவருக்குப் போடுவர். தீவுகளை விட்டுச் செல் லும்போது அலைகளின் எல்லையைத் தாண்டிய வுடன் வெளிநாட்டவர் இம் மாலைகளைக் கடலில் போட்டுவிடவேண்டும். நீரோட்டத்தால் அந்த மாலை கள் மீண்டும் கரையை அடைந்தால், அதை அணிந் தவர்கள் மறுபடியும் ஹாவாய்த் தீவுகட்கு வருவார் கள் என்று ஹாவாயர்கள் நம்புகிறார்கள்.

ஹாவாயர்கள் சாபத்தில் நம்பிக்கை உடைய வர்கள். சாபமிடுதலுக்கு ஹாவாய் மொழியில் 'கௌனு கௌனு' என்று பெயர்.

அண்மைக் காலத்தில், அமெரிக்கர்களுடைய நடை, உடை பாவனைகளையெல்லாம் ஹாவாயர்கள் நன்ருய்ப் பழகிக்கொண்டு விட்டனர்.

ஹாவாயர்கள் இன்பவாழ்வில் விருப்புடையவர்கள்; விழாக் காலங்களில், கழுத்தில் அழகிய நீண்ட மலர் மாலைகளை அணிந்து கொள்ளுவர். இவர்களுடைய விழாக்களில் சிறந்தது அலோஹா வாரம் என்பதாம். இவ்விழாவில் ஏழு நாட்களுக்கு இயல் இசை நாடக நிகழ்ச்சிகள் நடைபெறும். ஹாவாய்ப் பெண்களின் நடனத்தைப் பற்றிக் கேள்விப்படாதவர் இரார். கலை வனப்புடைய இந்நடனம் ஹாவாய்த் திருவிழாக்களின் ஒரு சிறந்த பகுதி. அலோஹா வாரத்தை ஹாவாய் வணிகக் குழுவினரே நடத்துகிருர்களாம். மற்ருெரு ஹாவாய் திருவிழா அன்னுசிப்பழத் திருவிழாவாம்.

## விளையாட்டுக்கள்

ஹாவாயர்கள் உடற்பயிற்சியில் அளவுகடந்த ஆவல் உள்ளவர்கள். அவர்களுக்கு மிக விருப்பமானவை நீந்துதலும் மீன்பிடித்தலும் ஆகும்.

## சில விநோதங்கள்

ஹாவாயில் பாம்புகளே இல்லை.

ஹாவாய்த் தபாற் சட்டப்படி, வணிகர்கட்கு மட்டுமே நாள்தோறும் இருமுறை தபால்கள் வழங்கப்படும். மற்றவர்களெல்லாம் நாள்தோறும் ஒரு முறையே கடிதங்களைப் பெறுவர்.

இத்தீவுகள் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே இருப்பதால், ஹாவாயர்கள் இந்தியாவையும்

சீனாவையும் ஜப்பானையும் மேற்குத்திசை நாடுகளென்றும், அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் கிழக்குத்திசை நாடுகள் என்றும் கூறுவர்!

## பல துறைகளில் முன்னேற்றம்

பெருங் கப்பல்களையும் செப்பனிடும் நல்ல துறைமுகமும், அமெரிக்க ஆகாய விமானப்படையின் தளமும், முன்னாள் மன்னர்களின் அரண்மனையும், ஜப்பானியர்களின் திருக்கோயிலும், ஒரு பல்கலைக் கழகமும் ஹோனலூலூவில் இருக்கின்றன.

ஹாவாய்ப் பல்கலைக்கழகம் அமெரிக்கக் கல்வி நிலையங்களையொட்டிச் சீரிய முறையில் அமைந்திருக்கின்றது. சீனத் தலைவர்கள் பலர் இங்கே தான் கல்வி கற்றனர். ராக்பெல்லர் என்னும் அமெரிக்க நாட்டுப் பெருஞ்செல்வர் இப் பல்கலைக் கழகத்தில் தத்துவ சாஸ்திரப் பயிற்சி நடத்துவதற்காகப் பெரும் நன்கொடை அளித்திருக்கிறார். அதனால்தான் உலக தத்துவ சாஸ்திர மகாநாடு இவ்வாண்டில் ஹோனலூலூவில் கூடிற்று.

ஹாவாய்த்தீவு முழுவதிலும் பெரும்பாலோர் இப்போது ஆங்கிலமொழி பேசுகின்றனர்.

## ஆட்சி முறை

ஹாவாயின் கடைசி அரசியாரான லிலியா ஹோகபாணி என்பவள், 1893-ல் அமெரிக்க வணிகர்களின் சூழ்ச்சியால் பதவியிழந்தபின், 1900-ல் இத்தீவுகள் அமெரிக்க ஆட்சிக்குட்பட்டன. இந்த நூற்றாண்டில் இத்தீவுகள் அரசியல் துறையில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளன. ஆயினும் அமெரிக்க

மாகாணங்களுடன் ஹாவாய் இன்னும் ஒத்த நிலையை யடையவில்லை; மாற்றாந்தாய்க் குழந்தை போலவே இப்போது இருக்கிறது. அமெரிக்காவின் 49வது மாகாணமாக இதைச் சேர்ப்பதற்குச் சட்ட திட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இத் தீவுகள் ஹாவாய்ப் பிரதேசம் (Territory of Hawaii) என்ற பெயரால் அரசியல் உலகில் அழைக்கப்படுகின்றன. குடியேற்ற நாடு என்ற பிரிட்டிஷ் பெயரும், பிரதேசம் என்ற அமெரிக்கப் பெயரும் ஒன்றேயாம்.

இப்போது ஹாவாயில் வாழ்பவர்களில், மூன்றில் இருபங்கினர் அமெரிக்க மக்களின் உரிமையைப் (American Citizenship) பெற்றுக்கொண்டு விட்டனர். ஹாவாயின் வாணிகம் முழுவதும் அமெரிக்காவோடுதான் நடைபெறுகிறது. ஹாவாயின் பொருளாதார நிலையைத் தங்கள் ஆதிக்கத்திற்குள் வைத்திருப்பவர்களும் ஐந்து அமெரிக்கரே யாவர். ஹாவாயில் கரும்பு ஆலைகளும், எல்லா விளை பொருள்களும், தோட்டங்களும் இவர்களைச் சேர்ந்தனவே. ஹாவாயின் நாணயமும் அமெரிக்க நாணயமேயாகும்.

இன்று அமெரிக்காவின் மேற்கு எல்லையாக ஹோனலூலூ இருக்கிறது. பிரிட்டிஷ் பேரரசுக்குச் சிங்கப்பூர் எவ்வளவு சிறந்த இடமாக இருக்கிறதோ, அவ்வளவு சிறந்த இடமாக அமெரிக்காவின் தற்காப்புக்கு ஹோனலூலூ இருக்கிறது.

"அலோ ஓ நோ ஹோ ஏ ஐக்கி இயா ஹாவாய்" என்பது ஹாவாயில் வழங்கும் ஒரு பழமொழியாகும். "ஹாவாய்த் தீவுகளைப் பார்க்காதவரையில் உங்கள் வாழ்வு வீண்தான்!" என்பது இதன் பொருள்.

நாமும் நம் அரசியலாரும் முயன்றால், அந்த மான் தீவுகளை நமது ஹாவாயாக ஆக்கிக்கொள்ள லாம்.

"ஏ, நிலமே!
நாடாயிருந்தாலும் காடாயிருந்தாலும்,
மேடாயிருந்தாலும் பள்ளமாயிருந்தாலும்,
மக்கள் நன்முயற்சி எந்த அளவில்
உண்டோ, அந்த அளவுக்கு நீ நல்லவள்
ஆகிறாய்!"

(ஔவையார் கருத்து)

## 7. விளையாட்டுக்கள்

### உடற்பயிற்சி

சுக வாழ்வுக்கு உடற்பயிற்சி இன்றியமையாதது. உடற்பயிற்சி செய்வதால், உடலிலுள்ள உறுப்புக்கள் வன்மையடையும்; இரத்த ஓட்டம் மிகும்; பசி உண்டாகும்; கழிவுப் பொருள்கள் உடலினின்றும் நீங்கும்; உடலின் தசைகள் நன்கு வளரும். இவற்றால் உடலுக்கு வலிமையும் அழகும் உண்டாகும். உடல் நோயில்லாமலிருக்கும்.

### விளையாட்டின் பயன்

மேற்கூறியவை தவிர, அறிவால் வேலை செய்யும் ஒருவனுக்கு விளையாட்டின் வாயிலாக ஓய்வு கிடைக்கிறது. காற்றோட்டமுள்ள இடங்களில் சிறிது நேரத்தைக் கழிக்கவும், விளையாட்டுக்களால் வாய்ப்புக் கிடைக்கிறது.

உள்ளக் கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் உண்டாக்கும் வலிமை தரத்தக்க விளையாட்டுக்கள் பல உண்டு. வெளி நாட்டினர் இவ்விளையாட்டுக்களை வாழ்நாள் முழுவதும் ஆடுவது, என்னை வியப்படையச் செய்தது. அந்நாட்டு இளைஞர் நம் நாட்டு இளைஞரைக் காட்டிலும் நல்ல உடற்கட்டோடு இருப்பதால், உடலமைப்பையாவது உயரத்தையாவது பார்த்து, அவர்களுடைய வயதை மதிப்பிடுவது பொருத்தமாகாது.

ஒரு பொது நீதிபதிக்குக் கட்டுப்பட்டு நடப்பது, தலைவருக்குக் (Captain) கீழ்ப்படிவது, தம் பகுதியைச் சேர்ந்த பலரோடு இணைந்து ஒற்றுமையாயிருப்பது, இறுதியில் போட்டியில் வெற்றி பெற்றாலும் பெறாவிட்டாலும் எதிரிகளையும் நண்பர்களாகக் கொள்ளுவது ஆகிய பழக்கங்களும் விளையாட்டுக்கள் வாயிலாக உண்டாகின்றன. இப்பழக்கங்கள் பரவ வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் 'ஒலிம்பிக்' போன்ற போட்டிகள் பல நாடுகளுக்கிடையே பெருஞ் செலவில் நடத்தப்படுகின்றன.

## விளையாட்டுக்களின் சிறப்பு


பிற நாடுகளைக் காட்டிலும் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் விளையாட்டுக்களுக்குமுதலிடம் அளிக்கப்படுகிறது. இந்த நாட்டுப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் போட்டி முடிவுகள் அல்லது ஒருபுகழ்பெற்ற ஆட்டக்காரருக்கு நேர்ந்த சிறு விபத்து முதலியவற்றைப் பற்றியே இருக்கும். மகாத்மா காந்தியடிகளின் மறைவு, அமெரிக்கத் தலைவர் தேர்தல், போர்முடிவு, மன்னரின் ஆஸ்திரேலியப் பயணம் கைவிடப்பட்டது என்ற நிகழ்ச்சிகள்தான் இவ்விதிக்கு விலக்கானவையாகும்.

## அமெரிக்காவில் விளையாட்டிடங்கள்*

அமெரிக்காவில், அட்லாண்டிக்கடற்கரைமுதல் பசிபிக் கடற்கரைவரையும், கனடாநாட்டு எல்லை முதல்

* ஸ்டேடியம் என்னும் பொருளிலேயே, விளையாட்டிடம் என்ற சொல்லை இக்கட்டுரையில் வருமிடங்களிலெல்லாம் கொள்ளவேண்டும்.

நடு அமெரிக்க நாடுகளின் எல்லைவரையிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட திறந்தவெளி விளையாட்டிடங்கள் உள்ளன. ஒஹையோ பல்கலைக்கழகத்து விளையாட்டிடத்தின் படத்தைக் கீழே காணலாம்.




கட்டிடத்தினுள் அமைக்கப்பட்டிருக்கும் விளையாட்டிடங்களில், நியூயார்க் நகரத்து மாடிசன் ஸ்கொயர் கார்டன் என்பதுதான் பெரியது. அமெரிக்கரின் விளையாட்டு அரண்மனை என்று அழைக்கப்படும் இம்மண்டபத்தில் நாள்தோறும் பெரிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

நான் சென்ற அன்று, பனிக்கட்டியின் மீது ஆடும் ஹாக்கிப் போட்டி நடந்தது. இந்த ஆட்டந்தான் எல்லா விளையாட்டுக்களிலும் விரைவுடையது. நுழைவுச்

சீட்டு வாங்கச் சென்ற என் அமெரிக்க வணிக நண்பர் ஒருவர், விளையாட்டிடத்தில் அமருவதற்கான குறிப்புக்கள் அடங்கிய விளக்கமான படங்களுடனும், ஆட்டத்தைப் பற்றிய சட்ட திட்டங்கள், ஆட்டக்காரர்களின் படங்கள், வரலாறுகள், அடையாளங்கள், நீதிபதி (Umpire) பலவிதமாகக் கை காட்டுவது, விசில் ஊதுவது இவற்றின் பொருள்களெல்லாம் அடங்கிய புத்தகங்களோடும் திரும்பி வந்தார். இரவு 8 மணிக்குச் சிறிது முன்பு உள்ளே சென்றோம். அப்போது ஏறத்தாழ ஐம்பதாயிரம் பார்வையாளர் அங்கே வீற்றிருந்தனர். நாட்டு வணக்கப் பாடலும் சில அறிவிப்புக்களும் நடந்தவுடன் ஆட்டம் தொடங்கிற்று. புகைப்படக்காரர்கள் படம் பிடித்தவண்ணமா யிருந்தனர். வானொலி நிருபர்களின் அறிவிப்பும் தொடங்கிற்று. தொலைக்காட்சி (Television) ஒலிபரப்பும் நடந்தது. திரைப்படங்களும் எடுக்கப்பட்டன. இத்தனை ஆரவாரங்களுக்குமிடையே பார்வையாளர் கட்டுப்பாடாக இருந்தது பாராட்டுக்குரியது.

## அமெரிக்கரின் பல வகை விளையாட்டுக்கள்

அமெரிக்கரின் மற்ற விளையாட்டுக்கள்—மோட்டார்ப் போட்டிகள், மோட்டார் சைக்கிள் போட்டிகள், ஆகாய விமானப் போட்டிகள், பெருங்கடல்களிலும் ஏரிகளிலும் மீன் பிடித்தல், படகு ஓட்டுதல், அம்பு எய்தல், வில் எறிதல், வாள் போர், மற்போர், கண்ணைக் கட்டிக் கொண்டு கால் பந்தாடுதல் (Blind Foodball), பனிக் கட்டியின் மீது ஓடுதல் முதலியனவாம். துப்பாக்கியால்



அமெரிக்கர் பௌலிங் ஆடும் இடம்

சுடுவதில், ஒலிம்பிக் பதக்கம் பெற்றவர் சுவிஸ் நாட்டவரைத் தவிர, அமெரிக்கரே யாவர்.

அமெரிக்காவில் மிகப்பலர் ஆடும் ஒரு விளையாட்டு, பௌலிங் (Bowling) என்பது. மரத்தாலும் எஃகாலும் செய்யப்பட்ட 14 ராத்தல் எடையுள்ள பந்துகளை, ஸ்பிரிங் உள்ள ஒரு பலகையின்மீது 100 அடித்தொலைவு உருட்டி, அப்பந்தைக் குழிக்குள் விழச் செய்வதே இந்த ஆட்டமாகும். இவ்வாட்டத்தை நள்ளிரவு வரையில் ஆடும் அமெரிக்கர் சிற்றூர்களிலும் உள்ளனர்.

நள்ளிரவில் டென்னிஸ் ஆடுவதும் அமெரிக்கர் இயல்பாகும். பகலில் ஓய்வு இல்லாதிருப்பதும், எவ்விதமாவது நாள்தோறும் விளையாட வேண்டுமென்ற மனஉறுதியுமே இப்பழக்கத்துக்குக் காரணமாகும். 'டேவிஸ் கப்' என்ற டென்னிஸ் ஆட்டத்தின் தலைமையான பரிசையும் பல ஆண்டுகளில் அமெரிக்கர் பெற்றுள்ளனர். புகழ் பெற்ற டென்னிஸ் வல்லுநர், பிறருக்கு டென்னிஸ் ஆட்டம் பயிற்றும் கல்லூரிகள் நடத்துகின்றனர்.

அமெரிக்க நாட்டு விளையாட்டான பேஸ்பாலில் சிறந்த ஆட்டக்காரர்கள் தம் குழுவில் சேர்ந்து கொண்டு, நான்கு மாதங்கள் ஆடுவதற்காகப் பல கழகத்தார் ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் ஒரு நூறாயிரம் ரூபாய்வரை கொடுக்கின்றார்கள். இதனால் விளையாட்டும் ஒரு தொழிலாகிவிட்டது. ஆட்டக்காரர்களிலும், ஆட்டமே தொழிலாக உள்ளவர் (Professionals), பொழுது போக்குக்காக ஆடுபவர் என்ற பாகுபாடும் ஏற்பட்டிருக்கின்றது. விளையாட்டுக்களுக்கான கருவிகளைச்

செய்து, அவற்றை விற்றுப் பெருஞ் செல்வரானவரும் மிகப் பலராவர்.

எல்லா அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் மிகப் பெரிய விளையாட்டிடங்களும் உடற்பயிற்சி நிலையங்களும் உள்ளன. ஆண்டுதோறும் அமெரிக்கர் விளையாட்டுக்களில் 100 கோடி ரூபாய்க்குமேல் செலவிடுகின்றனர். சுருங்கச்சொன்னால்; அமெரிக்கரின் இந்தத் தலைமுறையினர்—ஆடவரும் பெண்டிரும்—தம் வாழ்நாள் முழுவதும் விளையாட்டுப் பித்துடையவராயிருக்கின்றனர். இவ் வகையில் இவர்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் வேறெங்கும் இல்லை.

## ஆஸ்திரேலியரின் விளையாட்டுக்கள்

ஆஸ்திரேலிய நாட்டினரின் சிறப்பான விளையாட்டு கிரிக்கட். தான் ஒரு பிராட்மன்[1] ஆகவேண்டும் என்பதுதான் ஒவ்வொரு ஆஸ்திரேலிய இளைஞனுக்கும் ஆசை. பிராட்மன் எத்தனைமுறை செஞ்சுரி[2] எடுத்தார்? மிகுதியாக எடுத்த ரன்[3] எவ்வளவு? எத்தனை முறை 'நாட் அவுட்'[4] ஆக இருந்தார்? என்ற புள்ளி விவரங்

---

1 பிராட்மன் என்பவர் உலகிற் சிறந்த கிரிக்கட் ஆட்டக்காரர். இவர் ஓர் ஆஸ்திரேலியர். 1948 வரை ஆஸ்திரேலியக் கிரிக்கட் குழுவுக்குப்பல ஆண்டுகள் இவரே தலைவராக (Captain) இருந்தார்.

2 செஞ்சுரி—100 ரன்கள்.

3 ரன்—கிரிக்கட் ஆடும் மைதானத்தில், நடு இடத்தில் மும்மூன்று குச்சிகள் ஊன்றப்பட்ட இரு இடங்களுக்கிடையே ஓடுவது.

4 நாட் அவுட்—எதிரிகள் தன் ஆட்டத்தை முடித்துவிடாதபடி, போட்டி முடியும் வரை ஓர் ஆட்டக்காரர் ரன்களை எடுத்துக்கொண்டேயிருப்பது.

களெல்லாம் ஆஸ்திரேலியாவில் இளங்குழந்தைக்கும் தெரியும். பெரிய கிரிக்கட் ஆட்டக்காரர்களாகிய அமர்நாத், துலிப் சிங் என்னும் இரண்டு இந்தியரையும் பற்றிக் கேள்விப்படாத செவியே ஆஸ்திரேலியாவில் இல்லை. ஆஸ்திரேலியாவில் மின்சாரக் கருவிகள் செய்யும் ஒலிம்பிக் கேபிள்ஸ் என்ற கம்பெனித் தலைவரோடு ஒரு மணி நேரம் வாணிகம் பற்றிப் பேசினேன். 1947-ல் இந்தியாவிலிருந்து சென்ற கிரிக்கட் ஆட்டக்காரர்களைப்பற்றியே அவர் அரைமணி நேரம் பேசினர். ரவை ஏற்றுமதி செய்ய அனுமதி பெறக் கோதுமைக் கட்டுப்பாட்டுச் சபைஅதிகாரிகளை மெல்பர்னில் கண்டு பேசினேன். நம் நாட்டு ஆட்டக்காரர்களாகிய மெர்ச்சண்ட், மோடி இருவரும் எப்போது ஆஸ்திரேலிய விளையாட்டிடங்களில் கிரிக்கட் ஆடுவார்கள் என்று அவர்கள் என்னை வினவினர். பொதுவாக, நம் நாட்டுக் கிரிக்கட் ஆட்டக்காரர்கள் இந்திய ஆஸ்திரேலிய நல்லுறவைப் பெரிதும் வளர்த்திருக்கிறார்கள் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

ஆஸ்திரேலியருக்குக் கிரிக்கட் உடன் பிறந்தது. ஆங்கிலேயர்கள் அறிமுகமில்லாதவர்களுடன் பேசும்போது, காலநிலையைப் பற்றித்தான் பேசத் தொடங்குவார்கள்; ஆஸ்திரேலியர் கிரிக்கட் என்ற பிள்ளையார் சுழியோடுதான் தொடங்குவார்கள். 1948-ல் எல்லா ஆஸ்திரேலியர்களும் பார்த்த சினிமாப்படம் "பிராட்மன் கிரிக்கட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார்" என்பதுதான்!

பிராட்மன் அரசியலில் ஈடுபட வேண்டுமென்றுகூட ஆஸ்திரேலியாவில் ஒரு கட்சி இருக்கிறது. நகைச்சுவை

அரசரான, என். எஸ். கிருஷ்ணன் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்க வேண்டுமென்று ஓர் இயக்கம் ஏற்பட்டால் எப்படி இருக்கும்? அதைப் போன்றது தான் இதுவும்.

மெல்பர்ன் விளையாட்டிடத்தில் ஒரு கிரிக்கட் பந்தயம் பார்த்தேன். அவ்விடம் சென்னை நகராண்மைக் கழக விளையாட்டிடத்தின் அளவுதான் உள்ளது. ஆனால் அங்கே இருப்பதற்குரிய வசதிகள் சிறப்பாக இருக்கின்றன. மேலும் எவ்விதத் தட்ப வெப்ப நிலையிலும் சுகாதாரத்துடன் இருந்து பார்ப்பதற்குரிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மிகப்பலர் கிரிக்கட் பற்றிய கடைசிச் செய்திகளை அறியப் பத்திரிகைகள் வாங்குவர். பெரும்பாலும், முதற்பக்கத்தில் தலைப்புச் செய்தி கிரிக்கட்டைப் பற்றியதாய்த்தான் இருக்கும். இந்தியாவில் நடைபெறும் கிரிக்கட் போட்டிகளைப்பற்றி நம் நாட்டுப் பத்திரிகைகளில் வெளியாகும் விவரங்கள் ஆஸ்திரேலியப் பத்திரிகைகளிலும் வெளியிடப்படுவது எனக்குப் புதுமையாகவே இருந்தது. இப்போது ஆஸ்திரேலியப் பெண்களும் கிரிக்கட் ஆடத் தொடங்கிவிட்டனர்.

கிரிக்கட்டுக்கு அடுத்தபடி ஆஸ்திரேலியருக்கு மிக விருப்பமான விளையாட்டுக்கள்—குதிரைப் பந்தயம், டென்னிஸ், படகோட்டல், மீன் பிடித்தல், காடுகளில் கூட்டம் கூட்டமாக நடந்து இயற்கை வனப்பைக்கண்டு இன்புறுதல், நீந்துதல், ஈருருளிகளை (Bicycle) ஓட்டுதல் முதலியனவாம்.

உலகிலேயே குதிரை ஓட்டுபவர்களில் கைதேர்ந்தவர் ஆஸ்திரேலியரேயாவர். உலகிற்சிறந்த குதிரை

களும் ஆஸ்திரேலியாவில் உள்ளன. நம் நாட்டுப் படைக்குக்குதிரைகள் அங்கேஇருந்துதான் இறக்குமதி செய்யப்படுகின்றன. உலகில் சிறந்த குதிரைப் பந்தயத் திடலும் மெல்பர்ன் என்ற ஆஸ்திரேலிய நகரில் இருப்பதேயாம். குதிரைப் பந்தயம் ஆஸ்திரேலியாவில் ஆண்டு முழுவதும் நடைபெறுகிறது. சிட்னி நகரத்துக் குதிரைப்பந்தயத் திடலில் 100 புக்கிகள்[1] இருந்தனர்; ஆனால், அண்மையிலுள்ள நியூசிலந்தில், புக்கிகள் தடை செய்யப்பட்டு, டோட்டலைசர்[2] மட்டுமே இருக்கிறது.

நீந்துவதற்கு உதவியாக, சிட்னி நகரக் கடற்கரையில், மலைப்பகுதிகளின் ஓரத்தில், கடல் நீர் தங்கும் பகுதிகள் தடுக்கப்பட்டுள்ளன. அங்கே பெருக்கு-வடிவு காலங்களில் நீரைத் தூய்மையாக்குகின்றனர்.

கிரிக்கட், ஈருருளி ஓட்டுதல், டென்னிஸ் ஆகியவற்றில் ஆஸ்திரேலியர் உலகின் முன்னணியிலுள்ளனர். ஆயினும் நீந்துவதில் ஜப்பானியரை ஆஸ்திரேலியர் வெல்ல இயலாது. இப்பகுதியில், இப்போது ஆஸ்திரேலியர் மிக்க கவனம் செலுத்தி வருகின்றனர்.

பாட்மின்டனும், இரவில் நிகழும் ஓட்டப்பந்தயங்களும் ஆஸ்திரேலியாவில் மிகுந்து வருகின்றன.

1950ல் நியூசிலந்தில் நடக்கவிருக்கும் பிரிட்டிஷ் பேரரசின் விளையாட்டுப்போட்டிகளுக்குத் தம்நாட்டு

---

1 புக்கி—பந்தயங்களை ஏற்றுக்கொள்வதே தொழிலாக உள்ள கடை.

2 டோட்டலைசர்—பந்தயத்துக்கு வந்திருப்பவர்கள், அவர்கள் கட்டியபணம், அவர்கட்குக் கிடைக்கக்கூடிய ஈவுத்தொகை ஆகிய கணக்குகளை அவ்வப்போது அறிவிக்கும் மின்சாரக் கருவி.

ஆட்டக்காரர்களை அனுப்பவும், 1956-ல் மெல்பர்னில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டிக்கும் ஆஸ்திரேலியர் இப்போதே எல்லா ஏற்பாடுகளையும் தொடங்கி விட்டதிலிருந்து, இத்துறையில் இவர்களுக்குள்ள ஆர்வம் புலனாகும்.

ஆஸ்திரேலியாவில் பெரிய கடைகள் அனைத்திலும் கிரிக்கட், டென்னிஸ் போன்ற ஆட்டங்களுக்கான கருவிகள் விற்பதற்குத் தனித்தனிப் பகுதிகள் உண்டு.

கிறிஸ்துமஸ் அன்பளிப்பாக டென்னிஸ் ராக்கட்டையாவது, மீன் பிடிக்கும் வலையையாவது, நீந்தும் உடையையாவது, ஒரு நாய்க்குட்டியையாவது கொடுப்பது ஆஸ்திரேலிய நாகரிகமாகும்.

## பல நாடுகளின் சிறப்பு விளையாட்டுக்கள்

ஒவ்வொரு நாட்டிலும் சிறப்பாக உள்ள விளையாட்டுக்களையும் இங்கே நாம் தெரிந்துகொள்ளுவோம் :—

| | |
|---|---|
| அமெரிக்கா | .... பேஸ் பால் |
| ஆஸ்திரேலியா | .... கிரிக்கட் |
| இங்கிலாந்து | .... கிரிக்கட் |
| ஸ்காட்லந்து | .... கோல்ப் |
| சுவிடன் | .... கால் பந்து |
| சுவிட்சர்லந்து | .... துப்பாக்கியால் சுடுதல் |
| கனடா | .... உறைந்த பனிக்கட்டியின் மீது ஆடும் ஹாக்கி |
| பிரான்சு | ... சைக்கிள் போட்டி |
| இந்தியா | .... ஹாக்கி |

## நம் நாட்டு விளையாட்டிடம்

நம்நாட்டில் சென்ற சில ஆண்டுகளில் பல விளையாட்டுக்கள் பெரிதும் பரவியுள்ளன. எனினும் பம்பாயிலுள்ள 'பிராபர்ன்' விளையாட்டிடம் நீங்கலாகப் பெரிய போட்டி விளையாட்டிடங்கள் இந்தியாவில் இல்லை. டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களில் மிகப்பெரிய விளையாட்டிடங்களை நிறுவ, அரசியலாரின் ஆதரவோடு, இந்திய நாட்டு விளையாட்டுக் கழகத்தார் (National Sports Club of India) வேலை செய்யத் தொடங்கியிருக்கின்றனர். இக்கனவு நனவானால், ஏனைய துறைகளைப்போல, விளையாட்டிலும் இந்தியா சிறந்து விளங்கும் என்பது ஒரு தலையாகும்.

## 8. உயிர்க்காட்சிகளும் பொருட்காட்சிகளும்

நான் சென்ற எல்லாப் பெரிய நகரங்களிலும், ஆங்காங்குள்ள சிறந்த உயிர்க்காட்சிச்சாலைக்கும் பொருட் காட்சிச் சாலைக்கும் சென்றேன்.

### உயிர்க்காட்சிச் சாலைகள் *

இவ்வாறு நான் கண்டின்புற்ற உயிர்க்காட்சிச் சாலைகளுள் குறிப்பிடத்தக்கவை—ஸ்டாக்ஹோம், சூரிக், லண்டன், சான்பிரான்சிஸ்கோ, சிட்னி ஆகிய நகரங்களிலுள்ளவைகளே. பொதுவாக, வெளிநாடுகளிலுள்ள உயிர்க் காட்சிச்சாலைகளைப் பற்றிக் கூறியபின்னர், மேற்குறித்த ஐந்தின் சிறப்பியல்புகளையும் தனித்தனியே கூறுவேன்.

### உயிர்க்காட்சிகளும் மக்கள் ஆர்வமும்

நாள்தோறும், பல்லாயிர மக்கள் வெளிநாடுகளில் இங்குள்ள உயிரினங்களைப் பார்க்கச் செல்லுகின்றனர். உயிர்க்காட்சிச்சாலையைக் கடற்கரை அல்லது மலைப்பகுதி போன்று, ஓய்வு பெறும் ஓர் உல்லாச இடமாகக் கருதுவதும் மேலை நாட்டவரின் இயல்பாகும். நம் நாட்டுப்புறத்து மக்களைப்போல—நாய், பூனை தவிர—வேறு உயிரினங்களை நாள்தோறும் பார்க்கும் வாய்ப்புப் பிற

*உயிர் என்பது இங்கே விலங்கு, பறவை முதலிய உயிர்ப் பொருள்கள்.

நாட்டவருக்குக் கிடையாது. இக்காரணத்தாலும் நெருக்கம் மிகுதியான நகரங்களிலிருந்து சிறிது நேரம் விடுதலை பெறுவதற்காகவும் மேல்நாட்டவர்கள் அடிக்கடி அந்த நிலையங்களுக்குச் செல்லுவர்.

குறிப்பாக வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் ஆயிரக்கணக்கானவர் அச்சாலைகளை மொய்ப்பார்கள். அந்நாட்களில் அச்சாலைகளுக்குப் போய்வர நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து தனிப்பட்ட பஸ்களும் ரயில்களும் விடப்படுகின்றன. அண்மையில், இந்தியாவிலிருந்து ஒரு யானை அனுப்பும்படி ஜப்பானியக் குழந்தைகள் நமது பிரதமமந்திரிக்கு எழுதியதற்கிணங்க, இந்திரா என்ற யானை அனுப்பப்பட்டவுடன், அங்கே அந்த யானை வரவேற்கப்பட்ட முறையிலிருந்து, பிற நாட்டவருக்கு உயிரினங்களின்மீதுள்ள விருப்பத்தை நாம் அறியலாம்.

## பார்வையாளருக்குச் செய்துள்ள வசதிகள்

எல்லா உயிர்க்காட்சிச் சாலைகளிலும் குழந்தைகட்கு மிகக்குறைவான கட்டணம் உண்டு. டிக்கட் வாங்கும்போதே, அந்தச்சாலையின் வரலாற்றைக் கூறும் பதிப்பு ஒன்றும், இன்ன இன்ன உயிரினங்கள் அச்சாலையில் இன்ன இன்ன இடங்களில் உள்ளன என்ற விளக்கம் அடங்கிய படமும் கொடுக்கப்படும். உணவுச்சாலைகளும் இன்றியமையாப் பண்டங்கள் விற்கும் சிறு கடைகளும், இளைப்பாறுவதற்குப் பல இடங்களும் முதற் சிகிச்சை செய்யும் அலுவலகமும் அச்சாலைகளுக்குள்ளேயே உண்டு.

காணாமற்போன பொருள்களைத் தேடிவைத்துத் தரும் அலுவலகமும், காணாமற்போன குழந்தைகளைத்

தேடி ஒப்புவிக்கும் இடமும், பார்வையாளர்கள் பயன்படுத்துவதற்காக டெலிபோன் கருவிகளும் அங்கே அமைக்கப்பட்டிருக்கும். மிருகங்களின் மீது குழந்தைகள் சவாரி செய்ய ஏற்பாடு செய்யும் அலுவலகமும் அங்கே இருக்கின்றது.

இக்காட்சிச்சாலைகள் பரப்பில் மிகப் பெரியன வாக இருப்பதால், எல்லா இடங்களுக்கும் குழந்தைகளால் நடக்க இயலாதென்று கருதிப் பெற்றோர்கள் அக்குழந்தைகளை மூன்று உருளிகளுள்ள சிறு கைவண்டிகளில் வைத்துச் சாலைமுழுவதும் தள்ளிக் கொண்டே செல்லுவர். இவ்வண்டிகள் சாலை அலுவலகத்தில் வாடகைக்குக் கிடைக்கும்.

## படமும் இடமும்

விலங்கு முதலியவைகளின் உருவப்படங்கள் எல்லாச் சாலைகளிலும் விற்கப்படும். பார்வையாளர் பலர் தாமே அவற்றைப் படம் எடுத்துக்கொள்ளுவர். சிலர் தம்மைக் குறிப்பிட்ட விலங்குகளுடன் விளையாடுவதுபோல் படம் எடுத்துக்கொள்ளுவதில் விருப்பமுடையோராயிருப்பர். இந்த விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவும் அந்தச் சாலைகட்குள்ளேயே புகைப்படம் எடுக்கும் கடைகள் உள்ளன.

சில உயிர்க்காட்சிச்சாலைகளில், ஒவ்வொரு விலங்கின் அருகிலும் உலகப்படம் ஒன்று வைக்கப் பட்டிருக்கும். அப்படத்தில், உலகில் அவ்விலங்குள்ள இடங்கள் எல்லாம் மின்சார உதவியால் விளக்கமாகக் காட்டப்பட்டிருக்கும்.

எல்லாச்சாலைகளும் நகருக்கு வெளியே அமைதியான பகுதிகளில், ஒரு குன்றின்மீதாவது, பூங்காவனத்தின் நடுவிலாவது, ஆற்றங்கரைக்கு அருகிலாவது ஒரு தீவிலாவது அமைக்கப்பட்டுள்ளன. மீன் காட்சிச்சாலையும் இவ்வுயிர்க்காட்சிச்சாலையின் ஒரு பகுதியாக உள்ளது. சில உயிர்க்காட்சிச்சாலைகளில் பலவகை அரிய செடி, கொடி, மரங்களைக் கொண்ட காட்சிச்சாலையும் இருக்கிறது.

**உயிரினங்களுக்கு உணவளித்தல்**

பிறநாட்டு உயிர்க்காட்சிச்சாலைகளில், எந்த உயிரினத்துக்கும் பார்வையாளர் உணவு கொடுக்கலாம். ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஏற்ற உணவு, சாலைகளுக்குள்ளேயே ஆங்காங்குச் சிறு கடைகளில் விற்கப்படும். மிகப்பலர் இவ்வுணவுகளை விலை கொடுத்து வாங்கி அந்த உயிர்களுக்கு அளிப்பர். ஒவ்வொரு உயிரினத்துக்கும் உயிர்க்காட்சிச்சாலையார் உணவுகொடுக்கும் நேரம், அதனதன் அருகே குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த நேரத்துக்குக் காத்திருந்து, அவை உணவு உட்கொள்வதைக் கூர்ந்து கவனிப்பதிலும் அக்காட்சிகளைப் புகைப்படம் எடுப்பதிலும் பலர் களிப்படைவர்.

**ஸ்டாக்ஹோம்**

தனித்தனிக் காட்சிச் சாலைகளைப் பற்றி இனிச் சில கூறுவேன். சுவீடனின் தலைநகரான ஸ்டாக்ஹோமிலுள்ள உயிர்க்காட்சிச்சாலை ஏனையவற்றைப் போன்றதன்று. இது ஒரு மலைமீது திறந்த வெளியில் உள்ளது. மாதந்தோறும் இருநூறாயிரம் பார்வையாளர் இங்கே

வருகின்றனராம். இந்தச்சாலையில் சுவீடன் நாட்டின் முன்னை நாள் பெருமையை உணர்த்தும் புதை பொருள்கள் பலவும் காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன.

**சூரிக்**

சுவிஸ் நாட்டின் மிகப் பெரிய நகரான சூரிக்கிலுள்ள உயிர்க்காட்சிச்சாலை அந்த நகரின் சிறந்த காட்சிகளுள் ஒன்று. மிகுந்த செலவில் கட்டப்பட்டுத் தூய மலைக்காற்று வீசும் பகுதியில், உலாவுவதற்கேற்ற அகன்ற வழிகளுடன் கூடிய அழகிய பூங்காக்களுக்கு நடுவில் இச்சாலை இருக்கிறது. துப்பாக்கியால் சுடப்பழகும் கழகமும் இதற்கு அருகிலிருப்பது இச்சாலைக்கு மேலும் சிறப்புத்தருகிறது. சீரிய முறையில், சுகாதார விதிகளின்படி, அவ்வுயிர்க்காட்சிச்சாலை பேணப்பட்டு வருவது, சுவிஸ் நாட்டு மக்களுக்குத் தூய்மையாயிருத்தல் உடன்பிறந்தது என்ற கருத்தையே மேலும் வலியுறுத்துகின்றது. படம் வரையும் வகுப்புக்களைச் சூரிக் பள்ளிக்கூடங்கள் அந்த உயிர்க்காட்சிச் சாலையிலேயே நடத்துகின்றன. எந்த உயிரினத்தின் படத்தை அன்று வரைய வேண்டுமோ, அதன் முன்பு மேசைகளும் நாற்காலிகளும் போடப்பட்டு, அங்கேயே அன்றைய வகுப்பு நடைபெறும். அந்த உயிரினத்தைப் பார்த்தே மாணவர் படம் வரைகின்றனர்.

**லண்டன்**

லண்டனிலுள்ள உயிர்க்காட்சிச்சாலை ரீஜண்ட் பூங்காவனத்தில் இருக்கிறது. இதன் நிலப்பரப்பு 34 ஏக்கர். இங்கேயுள்ள யானைக்குட்டிபிறந்தநாளை இவ்

வுயிர்க்காட்சிச் சாலையார் கொண்டாடுகின்றனராம். இச்சாலையை நடத்தும் பிரிட்டிஷ் விலங்கியற் கழகத்தின் செயலாளராக அமர்ந்திருப்பவர் புகழ் பெற்ற விஞ்ஞானியும் பேரறிஞருமான ஜூலியன் ஹக்ஸ்லி ஆவர். விலங்குகளைக் கொடுமையாக நடத்துவதைத் தடுக்கும் எஸ். பி. சி. ஏ. கழகத்தாரும் இக் காட்சிச் சாலையின் ஆட்சி முறையில் பங்கெடுத்துக் கொள்ளுகின்றனர்.

**சான்பிரான்சிஸ்கோ**

சான்பிரான்சிஸ்கோவிலுள்ள உயிர்க்காட்சிச் சாலை 'கோல்டன் கேட்' பூங்காவனத்துள் இருக்கிறது. இந்தச் சாலை ஒரு மிலியன் டாலர், அதாவது 47½ லட்சம் ரூபாய் மூலதனத்தோடு தொடங்கப் பட்டதாம். இச்சாலையிலுள்ள பலவகையான உயிரினங்களை மிகச் சிறு உருவத்தில் நெகிழ்ப்பொருள்கள் (Plastics), ரப்பர் ஆகியவற்றில் செய்து இச் சாலையார் விற்கின்றனர்.

**சிட்னி**

சிட்னியிலுள்ள உயிர்காட்சிச் சாலை அந்த நகரத்துக்கு அணித்தாயுள்ள ஒரு தனித்தீவில் உள்ளது. உலகிலேயே மிக அழகிய இவ்வுயிர்க் காட்சிச் சாலைக்குச் செல்லுவதற்குப் படகுகளும் தனி டிராம் போக்கு வரவும் உண்டு. குழந்தைகள் இந்தச் சாலைக்குள் மோட்டாரிலும் ரயிலிலும் பிரயாணஞ் செய்யலாம். குரங்கு சர்க்கசுக்குக் கட்டணம் கிடையாது. இச்சாலையில் களைப்பாறுவதற்குரிய, சிறு அறைகள் மட்டும் 50 இடங்களில் இருக்கின்றன. இவ்வுயிர்க்காட்சிச் சாலை அமைப்புக்கு 18,000 பவுன், அதாவது ரூபாய்

2,34,000 செலவாயிற்றும். உடலில்லாத ஒரு மீன், சில மாதங்கட்கு முன் சிட்னித் துறைமுகத்தருகே பிடிக்கப்பட்டு, அது இப்பொழுது அச்சாலையின் மீன் காட்சிப் பகுதியில் ஒரு தனிக்குளத்தில் பாதுகாக்கப்பட்டு வருவதாக ஒரு நண்பர் எழுதியுள்ளார்.

மெல்பர்ன், பெர்த் ஆகிய மற்ற ஆஸ்திரேலிய நகரங்களிலும் நல்ல உயிர்க்காட்சி நிலையங்களைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விலங்குகளின் படங்களைத் தபால் தலைகளில் ஆஸ்திரேலியர் அச்சிடுகின்றனர். பிற கண்டங்களில் இல்லாத பல நூறு வகை அரிய உயிரினங்கள் (ஊர்வன, நடப்பன, நீர்வாழ்வன ஆகிய யாவும்) இருப்பதாலும், அம்மக்களுக்கு விலங்குகளிடம் உள்ள பற்றின் காரணத்தாலும், உயிர்நூல் அறிஞர் பலர் அங்கே இருப்பதாலும், ஆஸ்திரேலியாவில் உயிர்க்காட்சிச் சாலைகள் தனிச் சிறப்புடன் விளங்குகின்றன.

**நியூயார்க்**

நியூயார்க்கிலுள்ள ப்ராங்ஸ் உயிர்க்காட்சிச் சாலையார் அச்சாலைக்குப் புதிதாய் வந்துள்ள உயிரினங்கள் எவை எவை என்பதை—நம் நாட்டில், கன்னிமரா, சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையங்கள் புதிய நூல்கள் சேர்ப்பதை அறிவிப்பது போல்—அவற்றின் படங்களுடன் வாரந்தோறும் பத்திரிகைகளில் வெளியிடுகின்றனர்.

## பொருட்காட்சிச் சாலைகள்

இனிப் பொருட்காட்சிச்சாலைகளைக் கவனிப்போம். ஆங்கிலத்தில், "Exhibition, Museum" என்ற இரு

சொற்களுக்கும் தனித்தனிக் கருத்துக்கள் இருந்தும், தமிழில் இவ்விரண்டையுமே பொருட்காட்சிச் சாலை என்று கூறுகின்றனர். எக்சிபிஷன் என்பது குறிப்பிட்ட ஒரு நோக்கத்துடன் திருவிழாவாகச் சில நாட்களுக்கு மட்டும் வியாபாரத்துக்காக நடத்தப்படுவது. ஈண்டு, நாம் குறிப்பிடும் பொருட்காட்சிச்சாலை மியூசியம் என்பதே ஆகும். முற்காலத்தில் வழங்கிய பொருள்களையும், இக்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் மூலை முடுக்குகளில் பரவிக்கிடப்பனவற்றையும் ஒரே கட்டிடத்தில் ஒருங்கே பார்க்க இயல்வதற்குரிய இடமே மியூசியம் ஆகும். இவற்றை நேரிற் பார்த்தவுடன், குறிப்பாகச் சிறுவர் சிறுமியர் மனங்களில் ஒரு கருத்து ஆழமாய்ப் பதிந்து விடுகிறது. ஆசிரியர்கள் மாணவர்களை இங்கே அடிக்கடி அழைத்துச் செல்லுவதும் பல மேலைநாடுகளின் நிகழ்ச்சி முறைகளில் ஒன்றாகும். பொருட்காட்சிச் சாலைகளுக்கு அந்நாடுகளில் மிகப் பெரிய கட்டிடங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஐக்கிய நாடுகள் சபைக்கூட்டங்கள் நடந்த பாலே டீ சாலியோ என்ற அரண்மனையில் முன்னர் ஒரு பிரெஞ்சுப் பொருட் காட்சிச் சாலைதான் இருந்ததாம்.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் தமக்கெனப் பொருட்காட்சிச்சாலைகளை வைத்துக் கொண்டுள்ளன.

சுவீடன் அரண்மனையிலுள்ள பொருட்காட்சிச் சாலை மிக வியப்பைத்தருவதாகும். அந் நாட்டின் பண்டைப் பெருமையை அது உணர்த்துகின்றது.

**பிராஹா**

காலஞ்சென்ற செக் தலைவர் மசாரிக் என்பவர் நினைவாக, பிராஹாவில் ஒரு பொருட்காட்சிச்சாலை உள்ளது. மசாரிக் பயன் படுத்திய பொருள்கள், கையால் எழுதிய கடிதங்கள், உடுத்த ஆடைகள், அவருக்கு விருப்பமான புத்தகங்கள், அவர் செய்த பிரயாணங்களை விளக்கும் படங்கள், அவருடைய காட்குறிப்பு இவற்றை எல்லாம் அங்கே கண்டேன். நம் நாட்டின் தந்தை, மகாத்மா காந்தியடிகளின் நினைவாகப் பொருட்காட்சிச்சாலை அமைக்கும் போது, நாம் இதைப் பின்பற்ற வேண்டும். ஏழு மலைகட்கிடையே அமைந்திருக்கும் அழகிய தலைநகரான பிராஹாவில், வேறு பல சிறந்த பொருட்காட்சிச் சாலைகளும், அகன்ற சாலைகளில் பெரிய கட்டிடங்களில் இருக்கின்றன.

**பாரிஸ்**

பொருட்காட்சிச் சாலைகள் மிகுதியாயுள்ள பாரிஸ் நகரில், லூவர் பொருட்காட்சிச் சாலை (Louvre Museum) தனிச்சிறப்புடையது. அங்கேயுள்ள சிலைகளின் பெருமையையும் வேலைப்பாட்டின் அருமையையும் நேரிற் காணாதவர் உணர்வது எளிதன்று. இவற்றின் சிறப்பைக்கண்டு நாள்தோறும் பல அறிஞர்கள் இறும்பூது எய்துகின்றனர். உருவச் சிலைகளில், மனித உறுப்புக்கள் எவ்விதக் குறையுமின்றி, இயற்கைபோல் அமைந்திருப்பது, அக்காலச் சிற்பக் கலைஞரின் கைத்திறத்தைத் தெளிவாகக் காட்டுகிறது.

வெர்சே அரண்மனையில் பிரெஞ்சுமன்னர்கள் பயன்படுத்திய பொருள்கள் எல்லாம் நன்னிலையில் பாது

காக்கப்பட்டுள்ளன. பிரான்ஸ்நாட்டு வரலாற்றைக் கூறும் ஒப்புயர்வற்ற சித்திரங்கள் பலவற்றை இங்கே காணலாம். உலக மக்களில் மிகுதியானவர் செல்லும் பொருட்காட்சிச்சாலை இதுவேயாகும்.

**லண்டன்**

லண்டனிலுள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சிசாலை (British Museum) மிக விரிவானது, இங்கே 40 நூறு யிரம் நூல்கள் உள்ளன. அண்மையில், இமயமலை மீது ஏற வந்த பிரிட்டிஷ் குழுவினர் அப்பகுதியி லுள்ள 2,000 வகையான செடிகளையும் பல்லிகளை யும் பாப்பாத்திப்பூச்சிகளையும் அச்சாலைக்கு அனுப் பினர். போர் தொடங்கியவுடன் பிரிட்டிஷ் அரசிய லார் உடனே செய்த பல செயல்களில், லண்டனி லுள்ள பொருட்காட்சிச்சாலைகளை ஆபத்துக்குறை வான இடங்களுக்கு அப்புறப்படுத்தியதும் ஒன்று கும். இவற்றிலிருந்து பிரிட்டிஷார் பொருட்காட்சி களை எவ்வாறு போற்றுகின்றனர் என்பதை அறிய லாம். உலகத்தின் பல பகுதிகள்—சிறப்பாக, இந் தியா, ஜாவா—பற்றிய காட்சிகள் பொதிந்து கிடக் கும் இப்பொருட்காட்சிச் சாலைக்கு நிகரானது வேறெங்கும் இல்லை. உலகின் நடுநாயக நகரில், நமது கலைச்செல்வங்கள் நன்கு பேணப்பட்டு, நம் கலையின் சிறப்பை உலகமக்கள் அனைவரும் அறியும் நிலை யில், பெரும் செலவில் பாதுகாக்கப்பட்டு வருவதைப் பற்றி நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

ஓவியப்படங்கள், லண்டன் டிரபால்கர் சதுக் கத்தின் அருகே, தேசீய சித்திரசாலை (National Art Gallery) யில் வைக்கப்பட்டுள்ளன.

**அமெரிக்கா**

அமெரிக்காவின் மூன்றாவது துறைமுகமும் முன்னாள் தலைநகருமான பிலடல்பியாவில், வர்த்தக பொருட்காட்சிச் சாலை (Commercial Museum)க்குச் சென்றேன். இக்காட்சியுள்ள கட்டிடத்தில் தான் புகழ்பெற்ற கன்வென்ஷன் ஹால் (Convention Hall) என்ற மண்டபம் இருக்கிறது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தத்தம் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க அமெரிக்க அரசியல் கட்சிகள் இங்கேதான் கூடும். 15,000 பேர் அமரக்கூடிய இம் மாபெரு மண்டபத்தில் தூண்களே இல்லை!

இத்தகைய சிறப்பான இடத்தில், 1894-ல் தொடங்கப்பட்ட, வர்த்தகப் பொருட்காட்சிச்சாலை, பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தாரால் நடத்தப்படுகிறது. வர்த்தகப் பொருள்கள் இங்கே ஒன்று சேர்ப்பதைத் தவிர, பலமொழிகளில் வணிகருக்கு வரும் கடிதங்களை அவரவர் மொழிகளில் மொழி பெயர்த்தல், உற்பத்தியாளர்களையும் விற்பவர்களையும் இணைத்தல் போன்ற பணிகளையும் இந்தச் சாலையார் செய்கின்றனர்.

பல சிறந்த பொருட்காட்சிச் சாலைகள் நியூயார்க் நகரில் உள்ளன. நான் 20 நாட்கள் இந் நகரில் தங்கியும், இவற்றில் ஒன்றையேனும் பார்க்காததிலிருந்து, நியூயார்க்கில் நேரம் கிடைப்பது எவ்வளவு அரிது என்பது புலனாகும்.

அமெரிக்கர் ஒவ்வொருவரும்தத்தம் இயல்புக்கேற்ற அளவு அவரவர் இல்லங்களிலேயே, சிறிய பொருட்

காட்சிச்சாலைகள் அமைத்து, அவற்றில் தாம் சென்ற இடங்களின் நினைவாகச் சிற்சில பொருள்களைப் பேணி வருவதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

சீனரும் தாம் குடியேறிய நகரங்களிலெல்லாம், சைனாடவுன் என்ற பகுதிகளில், சீன ஆலயங்களும் சீனக்கலைப் பொருட்காட்சிகளும் அமைத்திருப்பதோடு, அங்குச் செல்லுவோரிடையே சீன மொழியையும் சீன உணவுகளையும் பரப்புகின்றனர்.

### ஆஸ்திரேலியா

மெல்பர்ன் என்னும் அழகிய ஆஸ்திரேலிய நகரத்தில், (நாள்தோறும் வாழ்வில்) பயன்படுத்தப் படும் விஞ்ஞானப் பொருட்காட்சிச்சாலை (Museum of Applied Science) உள்ளது. இங்கே ஆஸ்திரேலியாவிலுள்ள எல்லாத் தொழிற்சாலைகளும் எல்லா வகை இயந்திரங்களும் சிறு உருவங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மின் சாரப் பொத்தானை அழுத்தியவுடன், அத்தொழிற்சாலைகளும் இயந்திரங்களும் வேலை செய்கின்றன! அவற்றை இயக்கிக்காட்டி விளக்கம் அறிவிக்கும் ஆற்றலுடையோரும் அங்கே இருக்கின்றார்கள். இதுவன்றோ பொருட்காட்சிச் சாலை!

### இந்தியா

நம் நாட்டில், கலைத்துறையிலும் புதிய நூற்றாண்டு தொடங்கியுள்ளது. நம் நாட்டின் தொன்மைக் கேற்பப் பெரியதொரு பொருட்காட்சிச் சாலையைத் தலைநகராகிய டில்லியில் நிறுவவும், பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையிலும் இந்தியாவில் பல சிறிய பொருட்காட்சிச் சாலை

களிலும், தனிப்பட்டவர்களிடமும் உள்ள அரிய கலைப்பொருள்களை யெல்லாம் அச்சாலையில் ஒருங்கே சேர்க்கவும் இந்திய அரசியலார் முடிவு செய்துள்ளனர். ஆகவே,

"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"

என்ற பாரதியாரின் கனவு நனவாகும்.

# 9. பலநாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள்

"புதிதாக ஒரு நாட்டுக்குப் போகுமுன் அந் நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களை நன்ருகக் கேட்டுத் தெரிந்துகொள்" என்பது கன்ப்யூசியஸ் என்ற சீனப் பெரியார் வாக்கு. "ரோமர்களைப் போலவே ரோமாபுரியில் நடந்துகொள்" என்ற பழமொழியும் இவ்வாக்கைத் தழுவியதே. ஆயினும் நான் புதிய நாடுகளுக்குச் சென்ற பின்னரே, அந் தந்த நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களை அறிய நேர்ந்தது. அவைகளையே இக் கட்டுரையில் குறிப் பிடுவேன்.

ஒரு நாட்டு மக்களைப் பற்றிப் பொதுவாகச் சொல்லுவது சரியன்று. ஒரு நாள், லண்டனில், ஸ்ட்ராண்டு சாலையில், ஸ்காட்லந்துக்காரர் இருவர் என்னைப் பார்த்து, நான் இந்தியன் என்பதை அறிந்துகொண்டு, மகாத்மா காந்தியடிகளின் மரணத்தைப்பற்றி என்னிடம் துக்கம் விசாரித்தனர். பேசிக்கொண்டே சிறிது நடந்தோம். அது பகல் உணவு நேரமாக இருந்ததால், அருகிலிருந்த ஓர் உணவுச் சாலைக்குள் நான் சென்றேன்; அவர்களும் என்னைப் பின் தொடர்ந்தனர். ஒரே மேசை யருகிலேயே என்னுடன் அவர்களும் அமர்ந்தார்கள். இவ் விருவருமே நான் முதன் முதலாகக் கண்ட ஸ்காட்சுக்காரர் ஆவர். ஸ்காட்லந்துக்கு நான் போனதில்லை. ஸ்காட்சுக்காரர் கணக்கில் வல்லுநர் என்றும், மிகச் சிக்கனமானவர் என்றும் கேள்விப் பட்டிருந்தேன். அந்த ஸ்காட்சுக்காரரைக் கண்டவுடன் பல ஆண்டு

களுக்கு முன் நான் படித்த பின்வரும் பத்திரிகைக் குறிப்பு என் நினைவுக்கு வந்தது. அதாவது "ஓர் ஆங்கிலேயருடைய தலை வழுக்கையாயிற்று; திரும்பவும் மயிர்வளரும்படி செய்ய அவர் பெரும்பொருள் செலவு செய்தார்; ஒரு ஸ்காட்சுக்காரரின் தலை வழுக்கை யாயிற்று; அவர் உடனே சீப்பை விற்று விட்டார்!" என்பதாகும். இதனால், நானே அந்த ஸ்காட்சுக்காரர்களுக்குச் சேர்த்துப் பணம் கொடுக்க முற்பட்டேன். ஆனால் அவர்கள் எனக்கும் சேர்த்துத் தாமே பணம் செலுத்தினர். விருந்தினரைப் பேணும் பண்பு நம் நாட்டவரின் தனி உரிமை அன்று; எல்லா நாட்டினருக்கும் பொதுவான பழக்கம் என்பதைச் சொல்லவே இந்நிகழ்ச்சியைப் பற்றி இங்கு விரிவாகக் குறிப்பிட்டேன்.

**விருந்தோம்பும் முறை**

"உண்டிக்கழகு விருந்தோடுண்டல்" என்ற நமது பழமொழியைப் போல "வீட்டில் ஒரு விருந்தினர் இருப்பது வீட்டில் ஒரு கடவுள் இருப்பது போலாகும்" (Guest in the home is God in the home) என்று 'செக்' மொழியில் ஒரு பழமொழி இருப்பதாகப் பிராட்டிஸ்லாவா நகரில் ஒரு நண்பர் கூறி, அவருடைய பங்கீட்டுச் சீட்டுக்குரிய பொருள்களை எனக்குத் தரலாம் என்று நான் தங்கியிருந்த உணவு விடுதி அதிகாரிக்குத் தெரிவித்தார்.

ஆனால், மேனாட்டவர்கள் விருந்தினர் எத்தனைப்பேர் என்பதையும், யார் யார் என்பதையும், எப்போது வருவார்கள், எவ்வளவு நாட்கள் தங்குவார்கள் என்பதையும் முன்பே அறிந்து கொள்ள விரும்புகிறார்கள்.

முன் அறிவிப்பின்றி விருந்தினர் வருவதால், தம் திட்டங்கள் சீர்குலைந்து போகும் என்பதே அவர்கள் கருத்தாகும். மேலும் அது தனிப்பட்டவரின் உரிமையைக் கட்டுப்படுத்துவதாகுமென்றும் மேலை நாட்டவர் எண்ணுகின்றனர்.

**உரிமையைப் பேணுதல்**

ரயில் பிரயாணம் செய்யும்போது, டிக்கட் சோதிப்பவர், உறங்குபவரைத்தட்டி எழுப்பினால், அது அவருடைய உரிமையில் தலையிட்டதாகுமென்று நினைக்கும் அமெரிக்கர் தம் நாட்டு ரயில்களில், ஒவ்வொரு பிரயாணியின் இடத்துக்கு எதிரிலும், டிக்கட்டைப் பிடித்துக்கொள்ளக்கூடிய ஒரு கைப்பிடியை வைத்திருக்கிறார்கள். பிரயாணிகள் ரயிலில் ஏறியவுடன், டிக்கட்டை அவ்விடத்தில் செருகி விடுகிறார்கள். டிக்கட் சோதிப்பவர் டிக்கட்டுகளை ஒவ்வொன்றாக எடுத்துச் சரிபார்த்து, அவற்றில் துளையிட்டுவிட்டு, மீண்டும் அங்கேயே வைத்துவிடுகிறார்.

இந்த உரிமை மனப்பான்மையால் மேல்நாடுகளில் ஒருவர் செயலில் மற்றொருவர் தலையிடுவதில்லை. மகன் திருமணத்தை முடிவு செய்வதில், அவன் பெற்றோர் தலையிடுவதில்லை. எந்தச் செயலிலும் ஒருவனுடைய திட்டத்தில் அவன் நண்பர்கள் குறுக்கிடுவதில்லை. கணவனுக்கு வரும் கடிதத்தை மனைவி பிரிப்பதில்லை. மனைவிக்கு வரும் கடிதத்தைக் கணவனும் பிரிப்பதில்லை.

குழந்தைகட்கு மேனாட்டார்கொடுக்கும் உரிமை எல்லையற்றது. "அமெரிக்காவைப்பற்றி எனக்கு வியப்பைத் தருவது, அங்கே பெற்றோர்கள் தம் குழந்தை

கட்குக் கீழ்ப்படிந்து நடக்கும் முறையே ஆகும்" என்று வின்ட்சர் நோமான் ஒருமுறை விளையாட்டாகச் சொன்னார். பிரயாணத்தின்போது, குழந்தைகள் துன்பப்படாமலிருப்பதற்காகப் பிரிட்டனில் அவர்களைச் சிறு பிரம்புக் கட்டிலில் போட்டு, அக்கட்டிலைக் கணவனும் மனைவியுமாகப் பிடித்துக்கொண்டு செல்லுவர்.

## தொழிற்சிறப்பு

சில குறிப்பிட்ட தொழில்களைச் செய்வது இழிவு என்ற கேடுதரத்தக்க மனப்பான்மை வேறு நாடுகளில் இல்லை. வேலை செய்வதில் உயர்வுதாழ்வு கிடையாது; எல்லா வேலையும் கடவுளின் தொண்டு; அது மக்களை உயர்த்துவது என்பதே அவர்கள் கருத்தாகும். பற்பல நாகரிக முன்னேற்றங்கள் இருந்தும், துணி துவைத்தல், வீடு சுத்தம் செய்தல், பற்றுத் தேய்த்தல், அசுத்தங்களை அகற்றுதல் ஆகிய வேலைகளைப் பிறர் உதவியின்றி ஒவ்வோர் அமெரிக்கனும் தானே செய்கிறான்.

ஜெர்மானியரும் அமெரிக்கரும் தம் வேலையைத் தளராத ஊக்கத்தோடும் நல்ல மனநிலையோடும் செய்கின்றனர். அவர்கள் வேலையில் துன்பப்படுவதாகச் சொல்லுவதில்லை. தம்வேலையில் ஒரு பெருமையை உணருகிறார்கள். அவர்கட்குத் தன்னம்பிக்கை உண்டு. பிறரையே நம்பி வாழ்பவன் வெற்றி காண்பதில்லை என்ற உண்மையை அவர்கள் அறிந்தவர்கள். உழைப்புக்குத்தான் பயன் என்பதை அமெரிக்கர் தம்குழந்தைகட்கு வலியுறுத்துகின்றனர். கடவுளைக்கேட்டு விரும்பும் நலன்களை அடையலாம் என்று சிறுவர்கட்குக் கற்பிப்பது தவறு என்பது அவர்கள் கருத்து. அமெரிக்கச் சிறுவர்

சிறுமியர் தம் ஏழாம் ஆண்டு முதலே, நாள்தோறும் சிறிது நேரம், ஏதாவதொரு சிறு வேலையைச் செய்து, தம் சிறு செலவுகளுக்குத் தாமே பொருள் தேடிக்கொள்ளுகின்றனர். இத்தகைய தம் வருவாயிலிருந்து, குழந்தைகள் கிறிஸ்துமசுக்குத் தம் பெற்றோர்களுக்கு அன்பளிப்புப் பொருள்கள் வாங்கிக்கொடுக்கின்றனர். நான் பார்த்த அமெரிக்கக் குடும்பங்களிலெல்லாம் இவ்வாறு தங்கட்குத் தங்கள் குழந்தைகள் அன்பளிப்பாய்த் தந்த பொருள்களை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் என் நண்பர்கள் எனக்குக் காட்டினார்கள்.

### பொழுதுபோக்கு வேலைகள்

ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா இங்கெல்லாம் வசிப்பவர்கள் எல்லோரும் தாம் நாள் தோறும் செய்யும் வேலைகளிலிருந்து மாறுதலடைய ஏதாவதொரு பொழுதுபோக்குத் தொழில் (Hobby) வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தொழில்களுள் தபால் முத்திரைகளைச் சேர்ப்பது எங்கும் பரவியுள்ளது. பல நாட்டு நாணயங்களைச் சேர்ப்பவரும் உளர். பலவகைக் கற்களைச் சேர்த்தல், பெரியோர்களின் கையெழுத்துக்களைப் பெறுதல், நிழற் படங்களைத் தொகுத்தல், பலவகையான தீப்பெட்டிகளைச் சேர்த்தல், பலவகையான பீங்கான்களைச் சேர்த்தல் போன்ற பல பழக்கங்களும் உண்டு. இந்தப் பொழுது போக்கு வேலைகள், இப்போது பலருக்கு முழுநேர வேலையாகவும், வாழ்க்கையில் அதே ஒரு பித்துப்போலவும் ஆகிவிட்டன. பல வகைக் கற்களைச் சேர்ப்பதில் அமெரிக்கருக்கு உள்ள பித்தை அறிந்த ஜப்பானியர், ஹிரோசிமாவில் அமெரிக்கர் போட்ட

அணுக்குண்டிலிருந்து சிதறிய சிறு சிறு சில்களை, ஒரு சில் 5 டாலர் (ரூபாய் 23-12-0) விகிதம் அமெரிக்கருக்கே விற்றனராம். இதுவரை, அமெரிக்கர் தாம் போட்ட அணுக்குண்டையே 5 லட்சம் டாலருக்கு வாங்கிக் கொண்டிருப்பதாக ஒரு பத்திரிகை கேலியாக எழுதி யிருந்தது.

## புதுவழக்கம்

பிறந்த நாள் விழா, திருமண ஆண்டு விழா, நண்பர்களை முதன் முதலிற் கண்ட நாள் விழா, இவற்றையெல்லாம் வாழ்த்துச் செய்திகள் அன்பளிப்புகள் அனுப்பியும், விருந்துகள் நடத்தியும் கொண்டாடுவது பல நாடுகளில் இப்போது புது வழக்கம் ஆகிவிட்டது.

## பிறர்க்கு உதவி செய்தல்

வாழ்க்கையில் தம்மைவிடத் தாழ்ந்த நிலையி லுள்ளவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் நம்மைப்போல எல்லா நாட்டினருக்கும் உண்டு. ஆனல், அவர்கள் தனித்தனியாக அறம் செய்யாமல் பொது நிலையங்கள் வாயிலாக இயக்க முறையில், பெரும் அளவில் திட்டமிட்டுச் சமூக நன்மைக்கான பணிகள் செய்கிறார்கள். இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் கூறலாம். சுவீடன், சுவிஸ் மக்கள் செஞ்சிலுவைச் சங்கத்துக்குப் பெரும் பொருள் கொடுத்திருக்கிறார்கள். போரால் தஞ்சம் என்று அவர்கள் நாட்டுக்கு வந்த பல நூறாயிரம் ஜெர்மனியருக்கும் பிற நாட்டவருக்கும் அவர்கள் எல்லா உதவிகளையும் செய்தனர். அமெரிக்கர் ஞாயிற்றுக்கிழமை தோறும், கிறித்தவக் கோயில்களில் பொருள் சேர்த்து நூறாயிரக் கணக்கான உணவுப் பார்சல்களைப் பாழடைந்த

ஜெர்மனிக்கு ஆகாய விமானத்தின் மூலம் கொடையாக அனுப்புகிறார்கள். அமெரிக்க நாட்டு மடாதிபதிகள் பற்பல கல்லூரிகளை உலகெங்கும் நிறுவியுள்ளனர். ஒய். எம். சி. ஏ. என்னும் கிறித்தவ இளைஞர் சங்கம் போன்ற பல இயக்கங்கள் வாயிலாகவும் பெருந்தொண்டு செய்கின்றனர்.

**பிறரை இகழாமை**

நான் சென்ற நாடுகளில், எக்காரணத்தாலாவது ஒருவனுக்கு உடலின் ஒரு பகுதி—கால், கை, அல்லது வேறு உறுப்புப்—போய்விட்டால், அதற்காக அவரைப் பிறர் நேரிலோ மறைவிலோ இகழ்வதில்லை. அவர் ஊக்கமிழந்து விடும்படியாக அவரிடம் ஒருவரும் நடந்து கொள்ளுவதில்லை. அவருடைய இழந்து போன உடலுறுப்பைப்பற்றி ஒன்றும் பேசாமல், மற்றச் செய்திகளைப் பற்றியே அவரிடம் பேசுவார்கள். "ஐயோ! உனக்குக் கை போய்விட்டதே!" என்று அவரிடம் அழுவதில்லை. போரில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்புக்களை இழந்த பல நூறாயிரம் பேர், எல்லா உறுப்புக்களுமுடையவர்கள் செய்யும் வேலைகள் அனைத்தையும் விஞ்ஞான உதவியால் மகிழ்ச்சியுடனும் திறமையுடனும் செய்வதை, ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஒவ்வொரு நாளும் கண்டேன்.

**பெண்கள் நிலை**

ஆடவர் செய்யும் எந்த வேலையையும் பெண்டிருஞ் செய்கின்றனர். பெரும்பாலும் எல்லாநாடுகளிலும் பெண்களுக்குத் தக்க மதிப்புக் கொடுக்கப்படுகின்றது. பெருஞ்செல்வர்களும் தமது அலுவலகத்திலுள்ள

பணிப்பெண்களையும் மதிப்பாகவே நடத்துகின்றனர். மனம் ஒத்தாலன்றிச் செல்வம் பதவி இவை காரணமாக அங்கே திருமணம் நடைபெறுவதில்லை. அம்மகளிர் வாழ்க்கைமுறை பற்றிய நூல்களைக் கற்பதோடு, பல இடங்களுக்கும் சென்று பொது அறிவையும் வளர்த்துக் கொள்ளுகிறார்கள்.

## குறைந்த உறக்கம்

ஆண் பெண் என்ற வேறுபாடுகளை வெளிநாட்டார் ஏற்றுக்கொள்ளாதது போலவே, இரவு பகல் என்ற கடவுளின் வரையறையையும் அமெரிக்கரும் பிரெஞ்சுக்காரரும் ஏற்றுக்கொள்ளவில்லை. பகலில் தான் செய்யவேண்டும் என்றோ, அல்லது பகலில் செய்யக் கூடாத இரவு வேலை என்றோ எந்த வேலைக்கும் வரையறை கிடையாது. "மணி, நேரம் என்பது மக்களின் கற்பனை; இரவும் பகலும் ஈசனுக்கு ஒன்றே" என்பது அவர்கள் கோட்பாடு. இதனால் பிற நாட்டவர்களில் பெரும்பான்மையோர் நம்மை விடக் குறைவாகவே உறங்குகின்றனர்.

## உறங்கும் முறை

உறக்கத்தைப் பற்றி மற்றொன்று குறிப்பிட வேண்டும். உறங்கும் சிறிது நேரத்தில், பிறர் தொல்லையின்றி மேல்நாட்டார் உறங்குகின்றார்கள். நியூயார்க் நகரின் ஒரு பகுதியாகிய குயின்சில் முப்பதாவதுமாடியில் குடியிருக்கும் ஒரு நண்பர் வீட்டுக்கு நான் சென்றபோது, அவருடைய ஆறு மாதக் குழந்தை தனிப் படுக்கை அறையில் உறங்கியது எனக்குப் பெரும் வியப்பாயிருந்தது.

### கூட்டம் நடக்கும் முறை

அமெரிக்காவில் கூட்டங்கள் நடக்கும் முறையும் குறிப்பிடத்தக்கது. மாலை 6 மணிக்கு ஒரு கூட்டம் தொடங்குவதாக இருந்தால், சரியாக 6 மணிக்கு அந்தக் கூட்டம் நடக்கும் இடத்துக்குச் செல்லும் வழியிலுள்ள கதவுகளெல்லாம் மூடப்பட்டுவிடும். கூட்டம் முடிந்த பின்னரே அவை மீண்டும் திறக்கப் படும். இதனால் கூட்டத்துக்கு யாரும் காலந்தாழ்த்து வருவதோ அல்லது கூட்டம் முடியுமுன் சிலர் எழுந்து செல்வதோ அங்கே நிகழாதனவாகும்.

### பேசும் முறை

மூன்று நான்கு பேர்கள் சந்திக்கும்போது, ஒருவர் பேசுங்கால் மற்றொருவர் குறுக்கிட்டுப் பேசுவது நாகரிகமற்றதாகக் கருதப்படுகின்றது. ஒருவர் பேசி முடித்தபின்னரே அடுத்தவர் பேசுவார். அல்லது, இன்றியமையாமல் உடனே கூறவேண்டியதிருப்பின், பேசிக்கொண்டிருப்பவரின் உடன்பாட்டைக் கேட்பது வழக்கம்.

### கல்வியில் ஆர்வம்

கல்வியில் அமெரிக்கருக்கு உள்ள ஆர்வத்துக்குச் சான்றாகப் பின்வரும் இரண்டு நிகழ்ச்சிகளையுங் கூறலாம். தம் முன்னாள் ஆசிரியர் கல்லூரியினின்றும் ஓய்வுபெறும் நாளில், அவர்கள் கல்லூரிக்குச் சென்று அந்த ஆசிரியருக்கு மரியாதை செலுத்துவர். ஹார்வர்டு, கொலம்பியா பல்கலைக்கழகப் பட்டதாரிகள் தம் உயிலில் (Will) அப் பல்கலைக் கழகங்களுக்காக ஒரு தொகையை ஒதுக்கிவைக்கிறார்களாம்.

பொதுவாக எல்லா மக்களும் கலையில் விருப்பமுடையவர்கள். அண்மையில் மற்றத் துறைகளில் முன்னேறியுள்ள அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் கலையுணர்ச்சி மிக விரைவாக உருவாகிக் கொண்டு வருகிறது.

**நாணய வழக்கு**

நாணயங்களுக்குப் பெயரிடுவதில் நம்மைப் போன்ற வழக்கம் பிறநாட்டவரிடமும் உண்டு. இரண்டணு நாணயத்தைத் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் பணம் என்கிறோம். 100 ரூபாய் நோட்டைப் பச்சை நோட்டு என்கிறோம். இதேபோல் ஆஸ்திரேலியர் 3 பென்சை த்ரம் என்றும், 5 பவுன் நோட்டை பைவர் என்றும், 100 பவுன் நோட்டை செஞ்சரி என்றும் கூறுவர். அமெரிக்கர், 5 சதத்தை நிக்கல் என்றும், 10 சதத்தை டைம் என்றும் சொல்லுகிறார்கள். நாணயமே இல்லாத 4 பைசாவை நாம் துட்டு என்பது போல், நாணயமே இல்லாத 21 சில்லிங்கை ஆங்கிலேயர் கினி என்பர்.

**உல்லாசப் பிரயாணம்**

மேலைநாடுகளிலுள்ள, மற்ரெரு பழக்கம் ஆண்டுக்கு ஒருமுறையாவது அதற்கு மேற்பட்டாவது, தத்தம் நிலைக்கு ஏற்றவாறு ஒவ்வொருவரும் சிலநாட்கள் ஓய்வு எடுத்துக்கொண்டு உல்லாசமாய்ப் பிரயாணம் செய்வதாகும். பல வாரங்கட்கு முன்பே இப்பிரயாணத்தைத் திட்டமிட்டு, அதன் செலவுக்காகச் சிறிது சிறிதாகப் பொருள் சேர்த்து அதைத் தனியே வைத்திருப்பதும் வழக்கம். மிகுதியானவர்களை ஒரு மலைக்காவது தீவுக

காவது குறைந்த செலவில் குழுவாக அழைத்துச் செல்லும் நிலையங்களும் உள்ளன.

**மற்றும் சில வழக்கங்கள்**

ஜெர்மனியில் சாலைகள் சந்திக்குமிடங்களில் ஒவ்வொரு சாலையிலும் அந்தச் சந்திப்பிலிருந்து எந்த எந்தத் திக்குகளில், எந்த எண் முதல் எந்த எண்வரை உள்ள கட்டிடங்கள் இருக்கின்றன என்ற விளக்கமானது பெயரைத் தெரிவிக்கும் அறிவிப்புப் பலகையிலேயே கொடுக்கப்பட்டிருக்கும். மேலும் சாலைகளில் ஒற்றைப்படை எண்ணுள்ள கட்டிடங்கள் ஒரு புறமும், இரட்டைப் படை எண்ணுள்ள கட்டிடங்கள் எதிர் வரிசையிலும் இருக்கும்.

அமெரிக்கர் மாதத்தின் எண்ணை முதலிற் குறித்து, அதன் பின்னரே தேதியின் எண்ணை எழுதுவர். உதாரணமாக, 1949-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 27-ஆம் நாள் என்பதற்கு 10—27—1949 என்றுதான் எழுதுவர்.

பிரெஞ்சுக்காரர், ஜெர்மானியர் தவிர, ஏனைய உலக மக்கள் எல்லோரும் கடவுள் அன்பு உடையவர் களாக இருக்கின்றனர்.

**முடிவுரை**

பொருளாதாரச் செழிப்பான நாடுகளிலெல்லாம் மக்கள் கல்வியில் ஆர்வமும் கட்டுப்பாடும் சுறுசுறுப்பும் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் நாமும் பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டுமானால் இப்பழக்கங்களைக் கையாளுதல் இன்றியமையாததாகும்.